

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

65





**நேர்காணல்**

– வி. ஜீவகுமாரன் –



**1950 வரையான காலகட்டத்து நவீன தமிழ்க் கவிதை**

– அம்மன்கிளி முருகதாஸ் –

**தொடர்பாடலிலும் இலக்கியங்களிலும் தேய்வியம்பல்**

– சபா. ஜெயராசா –

**கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பார்வைக்கு**

– சாரல்நாடன் –

கலை இலக்கிய மாத சஞ்சிகை
மாசி – 2014

80/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொடர் சாதனை, வெற்றிமேல் வெற்றி,**
**சங்கிலித் தொடராக தனித்துவமான சாதிப்புக்கள்**





ஆம் எமது சிறப்பான வலுவான் வழிகாட்டலில் **இம்மாதத்தில்**
மட்டும் **10 பேர் வெற்றி பெற்றுள்ளனர்.**

# ஆஸ்திரேலியா குடும்ப விசா

**விசா வகை 888**


## குடும்பமாக ஆஸி பறக்க அரியவாய்ப்பு



- வருடத்தில் நிரந்தரக் குடியுரிமை குடும்பமாகப் பெறலாம்.
- 100 வீத அப்பழுக்கற்ற சட்ட ஆலோசனை
- வடபுலத்தில் நாங்கள் மட்டுமே மேற்படி ஆஸி விசாவில் தனித்துவமானவர்கள்.
- 55 வயதிற்குட்பட்ட எவரும் இதில் குடும்பமாக இணையலாம்.
- பிரதான விண்ணப்பதாரி உடன் ஆஸி பறக்க அரியவாய்ப்பு. (நிபந்தனைகளுடன்)
- **தாமதிக்க வேண்டாம்.** விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரிக்க செயன்முறைக்காலம் அதிகரிக்க வாய்ப்பு உண்டு.

வாருங்கள் உங்களிற்காகவே சிறப்பான சேவை வழங்க வெற்றிகொடுத்த
எங்கள் சிறப்புப்பயிற்சி பெற்ற ஆளணியினர் தினமும் - 7
நாட்களும் -நித்தியமும் காலை 8 முதல் பி.ப 6 வரை காத்திருப்பர்

**(முன்னர் வேறு விசாக்களிற்கு ஆலோசனை பெற்றவர்களும்**
**நிபந்தனைகளுடன் இலவசமாக ஆலோசனை பெறலாம்.**



## திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்

முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்.
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 221 9016, 021 5689090
www.thisaivisa.com

(C-6297)

இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலைநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



# நதியினுள்ளே...

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.


**கட்டுரை**

தொடர்பாடலிலும் இலக்கியங்களிலும் தேய்வியம்பல்
பேராசிரியர் சபா.ஜெயராசா

1950 வரையான காலகட்டத்து நவீன தமிழ்க்கவிதை
பேராசிரியை கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ்

சொல்ல வேண்டிய கதைகள் - 12
லெ.முருகபூபதி

தமிழ் திரைப்படப்பாடலாசிரியர்கள்
மா.செல்வதாஸ்

பன்மைத்துவம் பற்றிய புரிதலை முதன் முதலாகத்
தருகின்ற கவனிக்கப்பட வேண்டிய மூன்று புத்தகங்கள்
கெகிறாவ ஸஹானா

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பார்வைக்கு
சாரல் நாடன்

**நூல் விமர்சனம்**

அ.பௌநந்தி
நா.ஜெயபாலன்

**சிறுகதை**

க.சட்டநாதன்
செ.செல்வராஜா
தெணியான்
எம்.எம்.மன்சூர்

**கவிதை**

சு.க.சிந்துதாசன்
ஏ.பாரிஸ்
நாச்சியாதீவு பர்வீன்
கா.தவபாலன்
த.ஜெயசீலன்
எல்.தேனுஷா

**நேர்காணல்**

வி.ஜீவகுமாரன்

**அட்டைப்படம்**

க.செல்வன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2014 மாசி இதழ் - 65**

**பிரதம ஆசிரியர்**
கலாமணி பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.



**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா



**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank
Nelliady
A/C - 8108021808
CCEYLKLY



இச்சஞ்சிகையில்
இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின்
கருத்துக்களுக்கும்
அவற்றை எழுதிய ஆசிரியர்களே
பொறுப்புடையவர்கள்.
- ஆசிரியர் -



# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

## நேற்றைய மனித புதை குழி???
## இன்றைய மனித புதைகுழி!!!
## நாளைய மனிதப் புதைகுழி...

இயற்கையின் சீற்றங்களால் ஏற்படும் அழிவு களையிட்டு உலக நாடுகள் அச்சமடைந்து தம்மை இயற்கையிடமிருந்து காப்பாற்றிக்கொள்ள புதிய கண்டு பிடிப்புகளை மேற்கொண்டு வருகின்ற இன்றைய காலகட்டத்தில் ஈழத்தில் மட்டும் மனிதனால் மனிதனுக்கு ஏற்படுத்தப்படும் அழிவுகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. இன்று மரண விளிம்பில் பயணித்துக் கொண்டிருக்கும் மனிதர்களாகவே ஈழத்தவர்கள் காணப்படுகிறார்கள். அதற்கு சான்று பகருமுகமாக இன்று மன்னாரில் கண்டு பிடிக்கப்பட்ட மனிதபுதை குழிகள் அமைந்துள்ளன. ஏற்கெனவே செம்மணி மனித புதைகுழிகளில் காணப்பட்ட எலும்புக்கூடுகள் பற்றிய நியாயமான தகவல்கள் இன்றி சாட்சியங்கள் எல்லாம் புதைக்கப்பட்டது.

இன்று கண்டு பிடிக்கப்பட்ட மனித புதைகுழியில் நாளுக்கு நாள் புதைகுழியை தோண்ட தோண்ட எலும்புக்கூடுகள் வந்த வண்ணம் உள்ளன என்ற செய்தி அனைவரையும் பயம் கொள்ள வைக்கின்றது. போர்க்காலத்தில் காணாமல் போனவர்கள் மீண்டும் வருவார்கள் என்ற எம்மக்களின் நம்பிக்கையை இவை பொய்ப்பித்து விடுமோ என்ற எண்ணம் நெஞ்சில் குடிகொள்ள எத்தணிக்கின்றது.

உண்மைகள் நியாயமான முறையில் கண்டு பிடிக்கப்பட வேண்டும். ஒரு உயிரை படைக்கும் அழிக்கும் சக்தி இறைவனுக்கே உண்டு என்ற மக்களின் அடிப்படை சமய நம்பிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து இக்கொடூர செயல்களை ஆற்றி வருபவர்கள் சரியான விதத்தில் தண்டிக்கப்பட வேண்டும். ஊடகங்கள் முனைப்புடன் செயற்பட வேண்டும். நியாயத்துக்காக தர்மத்துக்காக அனைவரும் ஒன்றிணைந்து குரல் கொடுப்போமாக.

- க.பரணீதரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் சபா.ஜெயராசா

# தொடர்பாடலிலும் இலக்கியங்களிலும் தேய்வியம்பல்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

**இலக்கியத்திறனாய்விலும், நடைமுறைத்தொடர்பாடலிலும் குறிப்பிடப்படும் ஒரு பேசுபொருளாக தேய்வியம்பல்(Cliche) அமைந்துள்ளது. ஒரு சொல்லை அல்லது ஒரு தொடரை அல்லது ஓர் எண்ணக்கருவை அளவுக்குமீறி மீள மீளப் பயன்படுத்தும் பொழுது நைந்து போகும் நிலையைப் பெறுகின்றது. அத்தகைய நிலை "தேய்வியம்பல்" எனப்படும்.**

தமிழ்க்கவிதை உலகில் தேய்வியம் பலை இருபதாம் நூற்றாண்டில் முறியடித்த கவிஞராகப் பாரதியார் விளங்குகின்றார். ஒரே விதமான உவமைகளும் உருவகங்களும், பாடு பொருட்களும் தேய்வியம்பலை எய்திருந்த தேக்க நிலையில் புதிய எடுத்தியம்பலை பாரதி மேற்கொண்டார்.

புதிய இலக்கிய வடிவங்களாகிய சிறுகதை, நாவல் ஆகியவை பேச்சு மொழியைத் தழுவி எழுந்தமையால் நிலைபேறு கொண்டி ருந்த செவ்விய எழுத்து வடிவங்களில் இடம் பெற்றிருந்த தேய்வியம்பலில் இருந்து விடுபட முடிந்தது. புதுவீச்சுப் பிறந்தது.

ஆங்கில இலக்கியப் பரப்பில் மனோர தியக் கவிஞர்களும், அதன் பின் வந்தவராகிய கட்டற்ற கவிதையை முன்வைத்த விட்மனும் கவிதைப்பரப்பில் நிலவிய தேய்வியம்பலை உடைத்தெறிந்தனர். தமிழ்ச்சூழலிலும் புதுக் கவிதையின் அறிமுகம் முன்னைய தேய்வியம் பல்களை முறியடித்தது. ஒரேவிதமான எதுகை மோனை இயம்பலைத் தகர்த்தது.

ஆங்கில மொழியில் சாதாரண வழக்கில் உள்ள 2500 எண்ணிக்கைக்கு மேற் பட்ட தேய்வியம்களைப் பட்டியலிட்டுள்ளனர். தமிழில் அத்தகைய ஒரு முயற்சி மேற் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. மீள மீள ஒரு தொடரைப் பயன்படுத்தும்பொழுது அது ஆற்றல் இழந்தும், சில சமயங்களில் முன்னைய பொருளை இழந்தும் செயற்படுதல் உண்டு. ஒருகாலத்திலே வலிமையுடன் இயங்கிய அவை பின்னர் நலிந்து தேய்ந்து ஏனோதானோ என்ற நிலைக்கு வந்துவிடும். மீள மீளக் கேட்கும் பொழுது அவை சலிப்பை உருவாக்கி விடும்.

எம்மத்தியில் உள்ள சில எழுத்தாளர் களும் பேச்சாளர்களும் ஒரே சம்பவத்தையும் ஒரே நகைச்சுவையையும் மீளமீளச் சொல்லலைக் கேட்கின்றோம். அந்தத் தேய்வியம்பலைக் கேட்டு சிரிக்க வேண்டும் என்பதற்காக சிரிப்பவர்களும் இருக்கின்றனர்.


அண்மைக்காலத்தில் தேய்வியம்பலை எய்திய ஒரு சினிமாத்தொடராக "வரும் ஆனால் வராது" என்பது அமைந்துள்ளது. ஆழமான இலக்கியங்களிலும் வரன்முறையான எழுத் தாக்கங்களிலும் தேய்வியம்பல் பயன்படுத்தப் படுதல் தவிர்க்கப்படுகின்றது. தேய்வியம்பலைத் தவிர்த்துக் கொள்வதற்காக சில சிறுகதை எழுத்தாளர்கள் வடமொழிச் சொற்களைத் தமது ஆக்கங்களிலே பயன்படுத்தியுள்ளனர். எஸ்.பொ. அந்தவகையில் குறிப்பிடத்தக்கவர்.

தேய்வியம்பல் பற்றிய சிந்தனைகள் பதினெட்டாம் நூற்றாண்டிலே முதலில் பிரான்சில் தோற்றம் பெற்றன. அச்சுக்கலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இருந்தே அதுதோற்றம் பெற்றது. பின்னர் அது மொழி, இலக்கிய ஆய்வுகளை நோக்கி விரிவாக்கம் பெற்றது. அந்தக் கருத்தாக்கத்தால் தூண்டப்பெற்ற ஆங்கிலக்கவிஞராகிய ஜோன் கே என்பவர் "புதிய உவமைகளைக் கொண்ட ஒரு புதியபாடல்" என்ற ஆக்கத்தை முன் வைத்தார். கேயும் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞராவார். அவர் கையாண்ட பல உவமைகளைப் பிற்காலத்தில் பலரும் மீள மிகையாகப் பயன்படுத்தி தேய்வியம் பலாக்கி விட்டனர்.




ஜோன் கேயின் செல்வாக்கு பாரதியாரிடத்தும் இருந்திருக்கலாம். "சொல் புதிது சுவை புதிது" என்று பாரதி குறிப்பிட்டமை தேய்வியம்ப லுக்கு எதிரான கருத்து வீச்சாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

இலக்கிய அழகியலுக்கு ஊறுவிளைவிக்கும் தேய்வியலுக்கு எதிரான ஆக்கங்களும் திறனாய்வு செய்யும் கட்டுரைகளும் நூல்களும் வெளிவந்துள்ளன. அந்த வகையில் ஆங்கிலத் தில் ஜோன் றென்ரவுல்(2011) "தேய்வியம்ப லுக்கு எதிரான பிரகடனம்" என்பதை வெளி யிட்டார். மார்ட்டின் எயிம்ஸ் "தேய்வியம்பலுக்கு எதிரான யுத்தம்"(2002) என்பதை வெளியிட்டார். ஜோன் கோல்பேர்க் "தேய்வியம்பலின் கொடுமை"(2013) என்பதை வெளியிட்டார்.

உங்களுக்கு வெறுப்பைத் தந்த தேய்வியம்பல்கள் எவை? எவ்வாறு அதனை நீங்கள் விலக்கிக் கொண்டீர்கள்? என்ற வினாக்களை எழுப்பி பி.பி.சி சஞ்சிகை வாசகரின் கருத்துக்களை ஒரு சமயம் திரட்டிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.




தமிழ்ச்சூழலில் தேய்வியம்ப லுக்கு எதிரான கிளர்ச்சி புதுக் கவிதை யாக்களால் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் புதுக்கவிதையில் முன் வைக்கப்பட்ட சொல்லாட்சிகள் பல இன்று நைந்து போய் தேய்வியம்பல் களாக மாற்றம் பெறத் தொடங்கி யுள்ளன. எடுத்துக்காட்டாக அக்கினிப் பூக்கள், அக்கினித்திரவகம், அக்கினி மாலை, அக்கினிப் பிரவேசம் என்ற தொடர்கள் தேய்வை அடைந்து கொண்டிருக்கின்றன.

ஆங்கிலத்திறனாய்வாளர் சினிமாவில் இடம்பெறும் தேய்வியங்கள் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளனர். அதே நோக்கில் தமிழ் வர்த் தகத்திரைப்படங்களை எடுத்துக்கொண்டால் அவை தேய்வியம்பல்களைப் பல நிலைகளிலே கொண்டுள்ளமையைக் காணமுடியும். தேய்வியம்பல் என்பது தமிழ்ச்சூழலில் வெறும் வாய்ப்பாடுகள் என்றும் குறிப்பிடப்படுகின்றன. வறுமையிலிருக்கும் ஒரு கதாபாத்திரம் பின்னர் பெரும் செல்வத்துக்கு வாரிசாதல் மரபு வழித் தமிழ் வர்த்தகத் திரைப்படங்களில் இடம்பெறும் கதை தொடர்பான தேய்வியம்பல். சண்டைக் காட்சிகள் தொடர்பானவை, ஆடல் தொடர் பானவை என்றவாறு பலவகைத் தேய்வியம்பல்கள் பரவலாகத் தமிழ் சினிமாவில் இடம்பெற்று வருகின்றன.

தொடர்பாடலில் இடம்பெறும் தேய்வியம்பல் அதன் தரத்தைப் பாதிப்படையச் செய்யும். அத்துடன் கருத்துச் செறிவைக் குலைத்து விடும், "பத்திரிகைச் செய்தியில் தேய்வியம் பலைப் பயன்படுத்தாதீர்கள் கூற வருவதை நேரடியாகக் கூறி விடுங்கள்" என்ற முன் மொழிவு உண்டு. தினத்தந்தி செய்தி இதழ் தமிழகத்துச் செய்தி இதழ் விற்பனையில் முன்னணிவகிக்கின்றது. அதற்குரிய சிறப்புக் காரணங்களுள் ஒன்றாக அமைவது அவர்கள் செய்தி அளிக்கையில் தேய்வியம்பலைத் தவிர்த்துக் கொள்ளலாகும்.

செய்தி அளிக்கையில் இடம்பெறும் தேய்வியம்பல் ஒன்றினைப் பின்வரும் எடுத்துக் காட்டினால் விளக்கலாம். "பல வழிகளிலும் சிறப்புப் பெற்ற நல்லூரில் தேர்த்திருவிழா நிகழ்ந்தது" என்பதில் "பல வழிகளிலும் சிறப்புப் பெற்ற" என்பது செய்தி அளிக்கையில் தேய்வியம்பலாகின்றது.

கடிதங்களிலே தேய்வியம் பலைப் பயன்படுத்துவதால் வர்த்தக நடவடிக்கைகளில் எதிர்விளைவுகள் தோற்றம் பெற்றமையை அத்துறை யில் ஆய்வு செய்தோர் குறிப்பிட்டு ள்ளனர். கடிதங்கள் எழுதுகையில் அவற்றைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல் எழுத்து வழி யான வினைத்திறனை அதிகரிக்கச் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேய்வியம்பல்கள் கற்றல் கற்பித்த லிலும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. ஆசிரியர் ஒரே சொல்லை மீள மீள பயன் படுத்தும் பொழுது மாணவர் சலிப்படைந்து விடுவர்.

நாற்பது நிமிடப் பாடம் ஒன்றில் ஓர் ஆசிரியர் பதினெட்டுத்தடவைகள் தனது கற்பித்தல் பேச்சில் "சரியோ சரியோ" என்ற தொடரைப் பயன்படுத்தியமை கண்டறியப்பட்டது. விடைகள் எழுதும் பொழுது சில மாணவர் "மேலும்" என்ற சொல்லை ஒவ்வொரு பந்தியின் தொடக்கத்திலும் பயன்படுத்திச் செல்லல் உண்டு. அங்கே "மேலும்" என்பது தேய்வியம்பலாகி விடுகின்றது.

கர்நாடக இசை உருப்படிகளில் மீள மீளப்பாடுதல் உண்டு. தேய்வியம்பல் ஏற்படா திருக்கும் பொருட்டு பாடுவோர் வெவ்வேறு கமகங்கள் என்ற அசைவுகளைப் பயன்படுத்திக் குறித்த சொல்லைப்பாடுதல் உண்டு. அவற்றைக் கூர்ந்து கேட்காவிடில் அவை தேய்வியம்பலாகவே கேட்போருக்குப் புலப்படும்.

பரதநாட்டியம் தேய்வியம்பலுக்கு உள்ளாகி வரும் கலை என்ற திறனாய்வு உண்டு. ஒரே வகையான கச்சேரி அமைப்பு, உருப்படிகள், ஆடை அணிகலன்கள், முத்திரிகைகள், பயன் படுத்தப்படும் பொழுது இலகுவிலே தேய்வியம் பலதோற்றம் பெற்று விடுகின்றது. சஞ்சாரி பாவங் களிற் கூட ஒரே வகையான கற்பனைகளையே பெருமளவிற் பயன்படுத்துதல் இடம்பெறுகின்றன.

நாட்டுக் கூத்துக்கள் தேய்வியம்பலுக்கு உள்ளாகாமல் இருப்பதற்கு ஓர் அடிப்படைக் காரணம் உண்டு. அவை சமூகத்தின் ஒடுக்கப்பட்ட அடிநிலைமாந்தரின் உணர்வுகளுடன் சங்கமித்து நிற்பதனால் தேய்வியம்பலை எட்டாது உயிர்ப்புடன் உள்ளன. அதனால் அதனை மோடிப்படுத்தாது அப்படியே பாதுகாக்க வேண்டியுள்ளது. மோடிப் படுத்தும் பொழுது மத்திய தரவகுப்பினது கருத் தேற்றமே அங்கு நிகழ்த்தப்படும்.

சில அடிப்படையான சொற்களை எத்தனை முறை பயன்படுத்தினாலும் அவை தேய்வியம்பலை எட்டுதல் இல்லை. எடுத்துக் காட்டாக "அம்மா" என்ற சொல்லை எத்தனை முறை பயன்படுத்தினாலும் அதன் செறிவு குன்று தல் இல்லை. ஆனால் சில சொற்கள் விரைந்து தேய்வியம்பல்கள் ஆவது உண்டு. உதாரணமாக வீட்டிலே சிறுவர்கள் "படிபடி" என்று மீளமீளச் சொல்லும் பொழுது அச்சொல் நைந்து விடும்.


திறனாய்வில் ஆழ்ந்து நோக்கப்பட வேண்டிய ஓர் எழுபொருளாக தேய்வியம்பல் இருத்தலை மேற்குறித்த மொழிவுகள் சுட்டிக் காட்டுகின்றன.

# வசனித்தலில் சிக்காதுறையும் முழுமை

விசால வெளியொன்றில்...
மையங்கொள்கிறது,
என் வசனித்தலில்...
சிக்காதுறையும் உன் முழுமை.

உன் முழுமை குறித்த
வட்டத்துள் நுழைய
போதாதிருக்கிறது,
என் நடைப்பயண நாட்கள்.

அப்பிப் படிந்து
என் நிகழ்வெளியைச் சுடும்
சுவாசமூச்சு,
உன் முழுமையின்...



எல்லாப் புள்ளிகளிலும்
குந்தியிருக்கிறது.

முழுமைவட்டத்தின்
ஏதோவொரு புள்ளியில்...
என் வலிகளும்,
சுவாச மூச்சில்
கலந்திருக்கலாம்.

அகலித்த என் கனவு
இற்றுப்போகும் கணத்தில்...
கடைசிக் காலடியை
எட்டி வைக்கிறேன்.
காலடிப்புள்ளியின்
விழிகளுக்கு,
எட்டாத்தூரத்தில்....
உன் முழுமை.

- பொலிகையூர் சு.க.சிந்துதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்தும்

சப்பழிந்த தோற்றத் துடன். அவன் ஓல்லித்தேங்காய் மாதிரி இருந்தான். உலர்ந்து போய்க் கிடந்த அந்தக் குட்டை யான உருவம் - அசைந்து அசைந்து, அரை விழிப்புடன் எதிரே வந்தபோது அவனது ஜீவிதச்சிலிர்ப்புத் தெரிந்தது.

உருவ அமைப்பில் அவன் மனிதப் பிறவியாகத் தோன்றிய போதும் - மனித இயல்புகள் தப்பியவனாகவே நடந்து கொண்டான். தாழ்த்தப் பட்ட சாதியைச் சேர்ந்த அவனை அணைப்பதற்கும் ஆதரவு தருவதற்கும் யாரும் அங்கு இருப்பதாக தெரியவில்லை.

ஊர் முழுவதும் சுற்றித் திரிவதும் - கையில் கிடைப்பதை யெல்லாம் வாயில் போட்டு, முன் துருத்தியபடி இருக்கும் வயிற்றை ஆசுவாசப்படுத்து வதும்தான் அவனது தொழிலாக இப்பொழுதெல்லாம் இருக்கிறது.

அவனது ரிஷிமூலம் யாருக்கும் தெரியாது. ஊரில் உள்ள முதியவர்களுக்கு மட்டும் அவனைப் பற்றிக் கொஞ்சம் கொஞ்சம் தெரிந்திருந்தது. அவனது அடி ஊற்று என்னவோ இலந்தையடிப் பக்கம்தான் என்பது அவர்கள் கசிய விட்ட செய்தி. இலந்தையடிப் பெண் ஒருத்தி வந்தான் வரத்தான் ஒரு வனோடு கூடிப் பெற்ற பிள்ளை தான் இந்த முத்தன் என்ற முத்துராசு.

அவன், தகப்பன் பெயர் தெரியாதவன் என்பது ஊர் அறிந்த ரகசியம். இந்த வசை ஊர் முழுவதும் கொட்டிச் சிந்தப் பட்டிருந்தது. அதுபற்றி அவன் அதிகம் அலட்டிக் கொள்ள வில்லை. மானரோசம் பார்த்து நடக்க அவனுக்குத் தெரியாதிருந்தது. அவனுக்குத் தெரிந்ததெல்லாம் பசி; அடிவயிற்றைக் கிழித்துப் புரட்டும் அகோரபசி; அது மட்டும் தான்!

அவனது அம்மா, அவனைப் பெற்றுப்போட்டு விட்டு மோசம் போனபோது, அவனது அம்மாச்சிதான் அவனுக்கு எல்லா மென்று ஆகியது. பதினாறு வருஷங்களுக்கு மேலாகவே அவளது ஆதரவு அவனுக்கு இருந்தது. அவள் தன்னை ஒறுத்து இவனை ஆளாக்கினாள். அவள் கூட போன மார்கழியில் - ஒரு கனத்த மழைநாள் - நெஞ்சுவலி என்று சுருண்டு படுத்தவள் எழும்பா மலே பொசுக்கென்று போய் விட்டாள்.


அவளது மரணவீட்டில் விழிபிதுங்கி, புலம்பி அழுவதற்குக் கூடத் தெரியாமல் அவன் விட்டேத்தியாக நின்றான்.

சாவீட்டில் தொட்டகை பட்டகையாக நின்று உதவியது அக்கம்மை என்ற அவனது இரத்த உறவு தான்.

அம்மாச்சியின் சடலத் தைச் செம்மணிவரை ஊர் எடுத்து வர, அவனும் கூடவே சென்றான். ஆச்சிக்கு கொள்ளி போட்டது அவன் தான்.

ஆச்சி இருந்த போது கால் வயிறு அரைவயிறு எனக் கழுவிய வனுக்கு, செல்லும் திசை தெரிய வில்லை. பசி பசி என்று அலைவதே அவனது திருவினையாகியது.

பசிப்பிணியைப் போக்க எதையும் செய்யும் துணிவும் களவாணித்தனமும் அவனிடம் இருந்தது.



# தெரியாமலும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சின்னச் சின்னத் திருட்டு. ஊர்வன, நகர்வன, பறப்பன என்று எதைக் கண்டாலும் தனது கையிலிருக்கும் 'கெற்றப்போல்', துணை கொண்டு அவற்றை அடித்து, துடிதுடிக்க நெருப்பில் வாட்டிப் புசிப்பான்.

கடந்த இரண்டு நாட்களாக எதுவும் கிடைக்காது தவித்தவன், இலந்தையடி வயிரவர் கோயில் குருக்கள் தந்த புளியோதரையையும் சக்கரைப் பொங்கலையும் சாப்பிட்டான். அவனது ஆனைப்பசிக்கு அது சோளப்பொரி போட்டது போலத்தான் இருந்தது.

அப்பொழுது அக்கம்மையின் நினைவு வர, அவளிடம் போவதற்கு அவன் தீர்மானித்தான்.

முன்னர் இரண்டொருமுறை அவளிடம் போன அனுபவம் அவனது அடிமனதில் ஊறலாய்க் கிடந்தது அவர்களிடம் உள்ளதைத் தான் அக்கம்மையும் அவனது ஆசை மகளும் இவனுடன் பகிர்ந்து கொள்வார்கள். ஒருவகையில், அவன் அங்கு வேண்டாத விருந்தாளியாகத் தான் இருப்பான். அக்கம்மையின் முகம் திரிந்த நோக்கைக் கண்ட மறுகணமே அவன் சுறுக்காக இலந்தையடிப்பக்கம் வந்துவிடுவான்.

அவனுக்கு எது தெரியுதோ இல்லையோ அக்கம்மையின் ஒதுக்குதலும் முகச்சுளிப்பும் நன்றாகவே தெரிந்திருந்தது.

அக்கம்மையிலும் பார்க்க அவளது சின்ன மகள் தவமணியிடந்தான் அவனுக்கு ஒரு வசீகரமும் ஈர்ப்பும் இருந்தது. அது கூடத் தன்னிசைவானதல்ல. ஒருவகை இயல்பூக்கம் தான்!

குச்சிகுச்சியான கால்கள். கைகள். பென்னம் பெரிய படபடக்கும் கண்கள். உலர்ந்து பொருகு தட்டிய உதடுகள். எண்ணெய் காணாத பரட்டை பற்றிய தலைமுடி. கன்னங்கரேலென்ற நிறம் எனத் தவம் இருந்தபோதும் அவனுக்கு அவள் அழகியாகவே தெரிந்தாள். செறிவான பிரியம் அவளில் எப்பொழுதும் வழிந்து கொண்டே இருந்தது.

அவர்களது வீட்டுப்பக்கம் போகும் போதெல்லாம் அந்தக் கரும்பட்டுப் போர்த்திய அழகியுடன் அவன் உலா வந்தான். கை ஒழுங்கைகளில் நடக்கும் போது அதன் கிளையொழுங்கைகள் அவனைத் திகைக்க வைத்து விடும். தடுமாறும் அவனைத் தவம் தான் - அவனது கரங்களைப் பரிவுடன் பற்றியபடிக்கு அழைத்துச் செல்வாள்.

அவர்கள் இருவரும் இரத்தம் சொட்டச் சொட்டக் கொண்டு வரும் அணிற்பிள்ளைகளை வறுத்து, அவனுக்கும் அவளுக்கும் அக்கம்மை விருந்து வைப்பாள்.

அப்படியொரு விருந்தை உண்ண வேண்டும் என அவன் மனம் அவாவியது. அதுமட்டுமல்ல, தவமணி பற்றிய நினைவுகளும் அவனை அலைக்கழித்தன. அவளது பென்னம் பெரிய கண்களில் தேங்கி நிற்கும் ஈரலிப்பான கனிவும் மிகுதியான எதிர்பார்ப்பினை வழியவிடும் அவளது உடல்மொழியும் அவனுக்குப் பெரிதும் பிடித்திருந்தன. அதே சமயத்தில் அக்கம்மையை நினைத்ததும் - அவளது கரகரப்பான குரலும் அதட்டும் பார்வையும் அவனுக்கு ஒரு வகை நரநரப்பையே தந்தன.

இவை யாவும் அவனைப் பொறுத்த வரை கணநேர அனுபவங்கள் தான். பசியின் அடிவயிற்றுச் சுரண்டல் அவனை எப்பொழுதும் தொந்தரவு தருவதாய் இருந்தது.

அக்கம்மை வீட்டுக்குப் போக வேண்டுமெனத் தீர்மானமானதும் - தாயும் மகளும் மனங்குளிரும்படியாக ஏதாவது கைநிரம்ப எடுத்துச் செல்ல வேண்டும் என அவன் நினைத்துக் கொண்டான்.

எப்பொழுதுமே இலந்தையடி வயிரவர் கோயில் முன்மண்டபத்தில் சோம்பிக்கிடந்து, தாமசதவம் இயற்றும் அவன் இன்று பின் இரவில் ஒரு துர் மிருகத்தின் சுறுசுறுப்புடன் இயங்கத் தொடங்கினான். இருட்டும் இருண்மையும் அவனுக்கு நிரம்பப் பிடிக்கும். அந்த அடர்ந்த இருளில் அவன் இறங்கி நடந்தான்.

கோயில் வீதியால் நடந்து வந்தவன், சிவன் கோயில் பின்வீதியில் மிதந்து, மணல் தறை ஒழுங்கையில் இறங்கினான். மேற்குப் பார்த்துத் திரும்பியவன், ஒழுங்கையின் முச்சந்தியில் தரித்து நின்று, முன்னாலிருந்த வளவை

**க.சட்டநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டிப் பார்த்தான். அதனுள் அந்தப் பண்ணை இருந்தது; கோழிப்பண்ணை. கொஞ்சம் தூரமாக உள்ளொடுங்கி இருந்தது. பண்ணையின் சொந்தக்காரர் சிவசம்புவின் வீடு வளவின் தென்கோடியில் தெரிந்தது.

பாற்கிளுவையும் சீமைக்கதியாலும் நெருக்கமாக போடப்பட்டு, வேலி வரியப் பட்டிருந்தது. மடியில் எப்பொழுதும் தயாராக இருக்கும் வில்லுக்கத்தியை எடுத்தவன். வேலி வரிச்சை வெட்டினான். ஓராள் புகுந்து போக்கூடிய பாதையை ஏற்படுத்தி, கோழிக்கூட்டுக்குக் கிட்டவாக வந்தான். கூட்டின் வடக்குச் சாய்வில் இருந்த கம்பி வலையைக் கத்தியால் கிழித்தான். தூக்கக் கலக்கத்துடனிருந்த கோழிகள் மெது வாகக் கொக்கரித்தன. கோழிக்கூட்டுக்குள் நுழைந்தவன், தாவிப்பாய்ந்த ஒரு கோழியை அமுக்கினான். கோழி கனமாக இருந்தது. கோழி யின் குரல்வளையை இறுக்கமாக பற்றினான்; அதைத் திருகினான்.

கோழி கொக்கென்ற ஒலியுடன் தலை சாய்த்தது. கூட்டில் இருந்த பறவைகள் ஒரு கணம் சிறகடித்துப் பறந்தபோதும் - பெரிய அளவு சலனம் ஏதும் அங்கு ஏற்படவில்லை.

தொலைவில் கிடந்த சிவசம்பருடைய பெட்டை நாய் மட்டும் லேசாக முனகிவிட்டு அமைதி கொண்டது.

'கிழடா இருக்க வேணும்... இயக்கம் கெட்ட சென்மம்...!' நினைப்பு அவனுக்கு லேசான சிரிப்பையும் வரவழைத்தது.

கோழியுடன் இலந்தையடிப் பக்கம் வந்தவன், வீதியோரம் குப்பை, கூளங்களுடன் கிடந்த போறைப் பையை எடுத்து, குப்பையைக் கொட்டிவிட்டு, அதனுள் கோழியைத் திணித் தான். பின்னர், தனது தலைமாட்டில் வைத்தபடி படுத்துக்கொண்டான்.

கோயில், கடவுள், புனிதம், பவித்திரம், அமானுஷ்யம் என்பதெல்லாம் அவன் தெரிந்திராத ஒழுக்க விதிகள். அவன் தெரிந்து கொண்டதெல்லாம் பசி... பசி மட்டும்தான். அதைத் தீர்த்துக் கொள்வதற்கு எந்த வழி முறையையும் அவன் கைக்கொண்டான். அதில் தளர்ச்சி ஏதும் ஏற்படாதவாறு பார்த்துக் கொண்டான்.

ஏலவே தீர்மானித்தது போல அக்கம்மை யிடம்தான் அக்கோழியை எடுத்துச் செல்ல வேண்டும் என நினைத்தவன், தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தான்.

'உதவாக்கரை.. எதுவுமே செய்ய முடியாத சோம்பேறித்தனம்... மந்த புத்தி... இந்த தறுதலைத்தனம் உன்னிலை எப்ப இல்லாமல் போகுதோ அப்பதான் நீ நிமிரேலும்...'

அவனைக் காணும்போதெல்லாம் வசைபாடும் அக்கம்மையின் தோற்றம் அவனை அப்பொழுது நடுங்க வைத்தது.

'இந்தக்கோழி அக்கம்மையை மட்டு மல்ல, ஆன தீன் இல்லாது வற்றலாய்க் கிடக்கும் தவத்துக்கும் பிடிக்கும். மூண்டு பேருக்கும் அச்சா விருந்தா இருக்கும்... அக்கம்மையிடம் அரிசி இருக்குமா...? அதுவும் மொட்டைக் கறுப்ப னெண்டா சோக்கா இருக்கும்'

வாயைச் சப்புக் கொட்டிக்கொண்டு கிடந்தவன், கோழிச்சூட்டின் வெத வெதப்பில் சிறிது அயர்ந்து தூங்கினான்.

*

நல்லூர் கந்தனின் உதய பூசை மணியடித்தபோது அவன் விழித்துக் கொண்டான். காற்றில் இருந்த லேசான குளிர் அவனை நடுங்க வைத்தது. கோயில் பின்புறமாக இருந்த கிணற்றில் முகம் அலம்பியவன், கொக்குவில் பக்கமாக நடக்கத்தொடங்கினான்.

'அங்கு என்ன மாதிரி வரவேற்புக் கிடைக்கும்... அக்கம்மை என்ன சொல்லு வாள்... தவத்துக்கு இது சந்தோஷம் தருமா...?'

சிந்தனை வசப்பட்டவனாக நடந்தவன், அக்கம்மை வீடு வந்து விட்டதை உணர்ந்து, படலையைத் தட்டினான்.

தவந்தான் வந்து படலையைத் திறந்தாள். அந்தப் புலரி ஒளியில் அவளது கருமை நிறம்கூட வெண்சாம்பல் நிறமாகத் தெரிந்தது. அது அவனுக்கு வியப்பைத் தந்தது. முன்னைக்கு இப்போது அவள் கொஞ்சம் தசைப் பிடிப்போடு இருப்பது போலத் தோன்றினாள். மொழு மொழுப்பு இல்லாத அவளது குமரித்தன்மை அவனைக் கிறங்க வைத்தது. ஓரக்கண் கொண்டு அவனை அவள் பார்த்தாள். அந்தப் பார்வையை ரசிப்புடன் பார்த்த அவன் அவள் அருகாக வந்தான். அவனைப் பொறுத்தவரையில் இது இயல்பாக நடந்த ஒன்றல்ல... ஒரு கணநேர மனச்சுழிப்புத் தான்.

ஏறக்குறைய ஆறுமாதங்களின் பின்னர் அவளைக் கண்டதால், தாபம் மீதூர, அவளது கரங்களை அவன் இறுக்கமாகப் பற்றிக் கொண்டான். அவளது கரங்களில் இருந்த இளம் சூடு அவனை உணர்ச்சி வசப்படுத்தியது. அவன் அவளது காதோரம் முத்தமிட முயன்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிணி... இப்ப இந்தவேலையுமா...? தழிசடை... கழிசடை...!" கூறியவள், தனது கைகளால் பலம் கொண்ட மட்டும் அவனது முகத்தைப் பிடித்துத் தள்ளினாள். சற்று நிலை தடுமாறி விழப்போனவன், சமாளித்துத் தன்னைச் சமனப்படுத்திக் கொண்டான்.

'அட அவளுக்கு இவ்வளவு பலமா...?'

திடீரென முகக்குறி மாறச் சிரித்தவள், அவனது கண்களைப் பார்த்தாள். அவற்றில் கவலை படிந்திருந்த ரேகைகள். அதைத்தாளாத வளாய் "எல்லாமே ஒரு விளையாட்டுக்குத் தான்," என்றாள்.

அவள் கிடுகிடுவென வளர்ந்து விட்டது போலத் தோற்றங் காட்டினாள். பதினைந்து வயதுக்கு அவளது வளர்ச்சி அவனுக்கு ஆச்சரிய மாக இருந்தது. உதடுகளின் உலர்வுடனான திரட்சியும் மார்பகங்களின் குழைவும் அவனைத் திணறடித்தன.

அவளை விழுங்கிவிடுவது போலப் பார்த்தபடி உள்ளாக வந்தான், வந்தவன்: "தவம் மச்சச் சட்டியைக் கொண்டா...?" என்றான்.

அவள் சட்டியை நன்றாக அலம்பி எடுத்து வந்து அவன் முன்னால் வைத்தாள்.

அவன் குடிசையின் தெற்குப் பார்த்து நடந்து, கோடிப்பக்கம் போனான். போனவன், "ஒரு வாளி தண்ணி வேணும்", என்று கூறினான்.

அவள் தண்ணியுடன் வந்துபோது அவன் கோழியை உரிக்கத் தொடங்கியிருந்தான்.

அவனது கைலாகவமும் சுறுசுறுப்பும் அவளுக்குப் பிடித்திருந்தது.

"என்ன கள்ளக்கோழியா...? இந்த வேலையளை எப்பதான் நீ விடப்போறையோ தெரியேல்லை... அம்மாட்டை கவனப் பிசகாச் சொல்லிப்போடாதை... அது சமைச்சுத் தராது..."

"அவ மாட்டன் எண்டா நீ சமையன்...!"

"போடா... உன்ரை மனிசி எண்ட நினைப்பு இப்பயே உனக்கு வந்திட்டுதா...? கள்ளப்பயல், முடிச்சுமாறி...!" உந்த வேலையள எல்லாம் நீ விட்டால் தான் என்ரை காத்து உன்னிலை படும்...!"

"நீ இல்லாட்டில் என்ன... இலந்தையடிப் பக்கம் இன்னொண்டைப் பார்த்தால் போச்சு..."

போடா போய்ப் பார்...! சின்னச் சிரிப்புடன் நடந்து சென்ற தவம் தாயிடம் ஏதோ முறையிட்டாள்.



வீட்டுக்கு வெளியே வந்த அக்கம்மை, "கோழியா...? சோத்துக்கு அரிசிகூடக் கிடக்குது... மொட்டைக் கறுப்பன்...!" என்று கூறினாள்.

உள்ளே வந்த தவம், இறைச்சி நிறைந்த சட்டியை அடுப்பில் வைத்தாள்.

"அட இந்தக் கோழிக் கறிக்கும் சோத்துக்கும்... ஒரு அரைப்போத்தல் சரக்கு இருந்தால்..."

வாயைச் சப்புக் கொட்டியவன், அக்கம்மையைப் பரிதாபமாகப் பார்த்தான். அவளிடம் இருந்து எதுவும் பெயராது என்பது தெரிந்ததும் குடிசை ஓரத்தில் இருந்த மரக் குற்றியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்து கொண்டான்.

கோழிக் குழம்பு கொதித்துவர அதன் குணமும் மணமும் அவனது மூக்குவரை வந்து மோதியது. வாயில் திரண்ட உமிழ் நீரைக் காறித் தூரமாகத் துப்பியவன், பொறுமையாகக் காத்திருந்தான்.

"காலையிலேயே சோறும் மச்சக் கறியும்... இரண்டு நாள் பட்டினி கிடந்ததுக்கு இது பெரிய விருந்துதான்..."

மனதில் குமிழிடும் எண்ணங்கள்.

அக்கம்மை தட்டுவத்தில் கொண்டு வந்து தந்த சோற்றையும் கறியையும் வேகமாக விழுங்கினான். குழம்புக்கறிக்கு தோதாகக் கத்தரிக்காய் வெள்ளைக்கறியும் அக்கம்மை வைத்திருந்தாள். ருசித்து ருசித்துச் சாப்பிட்ட வன், தவத்தின் கரங்களைப் பிடித்திழுத்து, "நீயும் சாப்பிடு பிள்ளை..." என்றான்.

"திண்டால் எனக்குச் செமிக்காது... உந்தக் கள்ளக் கோழி முழுவதையும் நீயே விழுங்கு...!"

"கள்ளக் கோழியா...? சிவசம்பரிட்டை கடனா வாங்கினது... காசு கொடுக்க வேணும்..."

"போடா புழுகுணி...! காசு கொடுப் பாராம் காசு... உழைப்பு பிழைப்பு இல்லாமல் சோம்பலே துணையா இருக்கிற உனக்கு களவைத்தவிர வேறென்ன தெரியும்"

"இல்ல...உண்ணாணை இது கள்ளக் கோழி யில்லை..."

"ஏன்ரா துடிக்கப் பதைக்கப் பொய் சொல்லிறை..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கம்மையும் அவனை அதட்டுவது போலப் பேசினாள்:

"இஞ்சை, குணத்தார் கிணறடிக்கிறார் போலக் கிடக்கு... நாள் கூலியா ஐந்நூறு அறுநூறு கிடைக்கும்... நான் சொல்லி விடுறன், போய் வேலை செய்..."

முகத்தை அஷ்டகோணமாக வைத்துக் கொண்டவன்:

"இப்ப ரெண்டு நாளாய் நாரிப்பிடிப்பும் அதுவுமாய் கஷ்டப்படுறன்... பிறகு பாப்பம்..."

கூறியபடி எழுந்து கொண்டவன், கையையும் வாயையும் அலம்பிவிட்டு வந்து, திண்ணையில் படுத்துக் கொண்டான். படுத்த மறுகணமே குறட்டை விட்டபடி அயர்ந்து தூங்கினான்.

ஆபாசமாக விலகிக் கிடந்த அவனது அரைத்துண்டை, "மானங்கெட்டவன்..." எனப் புறுபுறுத்தபடி தவம் தான் ஒதுக்கிவிட்டாள்.

மதியம் கண் விழித்தவன், தவத்தைப் பார்த்துக் கேட்டான்:

"பிள்ள சோறு சாப்பிட்டனியா...? கறி, நல்லா அச்சாவா இருந்தது. அக்கை சாப்பிட்டவவா...?"

"போடா...! இஞ்ச ஒருத்தரும் உன்ரை துளவாரம் வேண்டாம்... உன்ரை கோழிக்கறியை நீயே திண்டுதொலை..."

மதியம், இரவு எனக் கோழிக்கறி முழுவதையும் - இருந்த சோத்தோடு சேர்த்துச் சாப்பிட்டவன், விடியலில் இலந்தையடிப் பக்கம் புறப்பட்டான்.

"உழைச்சு, உன்ரை காசிலை ஏதாவது கொண்டு வந்தால்தான் இனி உனக்கு இஞ்சை சாப்பாடு... கண்டதையெல்லாம் களவெடுத்துக் கொண்டு, தவம்... அக்கம்மை எண்டு இனிமேல் இஞ்சை அலையிறதை விட்டிடு..."

தவம் தான் அவனைப் பார்த்துக் கண்டிப்பது போலச் சொன்னாள்.

"........."

மௌனத்தையே பதிலாக தந்தவன், எழுந்து நடந்து போவதையே தவம் பார்த்தபடி இருந்தாள். அவனது அந்த உடைந்துபோன உடம்பில்கூட ஏதோ ஒரு கவர்ச்சி இருப்பதை அவள் கண்டு கொண்டாள். அவனது முகத்தில் அடர்த்தியாகப் படர்ந்திருந்த தாடியிலும் ஏதோ அதீத ஈர்ப்பு இருப்பதாகவும் நினைத்துக் கொண்டாள்.

'இந்தக் கவர்ச்சியும் ஈர்ப்பும் ஒரு ஆண் மகனுக்கு இருந்து விட்டால் - அவன் எவ்வளவு தான் உலர்ந்து போனவனாக இருந்தாலும் - ஒரு பெண் அவன் பின்னால் பிச்சியாக அலைய வேண்டிவரும். அந்த அலைச்சல்தான் இனி எனது விதியாகிவிடுமா...?'

மனதில் கிளரும் தாபத்துடன் அவள் படலை வரை வந்து, அவன் தொலைவில், புள்ளியாகத் தெரிந்து மறையும்வரை பார்த்தபடி நின்றாள்.

அவன் பக்கமாகச் சிலிர்ப்புடன் சாயும் தன் மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டு, அவள் திரும்பி நடந்தாள்.

அவளது மனசு லேசாகப் படபடத்தது.

'இவன் ரோசம் பார்த்து இங்க வராமல் விட்டுவிடுவானோ...? இவனுக்கு அப்படி மான ரோசம் எண்டு ஏதாவது இருக்கிறதா என்ன...? எல்லாம் நாலுநாள் செல்ல, வயிறு கடித்ததும் தானாக வந்து நிற்பான்...!'

அந்த நினைப்புத் தந்த திருப்தியில், லேசான சிரிப்பைச் சிந்தியபடி குடிசையை நோக்கி அவள் நடந்தாள்.

*

"அக்கம்மைக்கு உயர் இரத்த அழுத்தமாம். பொசுக்கெண்டு அவவின்ரை சீவன் போயிட்டுதாம். தவம் தனிச்சுக் கிடந்து தவியாத் தவிக்கிறாளாம். ஒருக்கால் தவத்தை... அந்தப் பெட்டையைப் போய்ப் பாரனடா...!"

இடக்கு முடக்குச் செல்லர் தான் முத்தனுக்கு இந்தச் செய்தியைச் சொன்னார்.

முத்து எதுவித எதிர்வினையும் காண்பியாது, "போனப் போச்சு..." என்று ஒரு வார்த்தையில் பதில் தந்துவிட்டு, இயல்பான தனது சோம்பல் தனத்துடன், சரத்தை இழுத்துப் போர்த்தியபடி, கோயில் முன் மண்டபத்தில் படுத்துக் கொண்டான்.

ஒரு கிழமைக்கு முன்னதாக இலந்தையடி பரபரப்படைந்தது. அக்கம்மையின் சாவீட்டுக்கு அக்கம்மையின் சொந்த பந்தங்கள் போனது இவனுக்கு லேசாக ஞாபகம் வர, எழுந்து உட்காந்து கொண்டான். ஏழுச் செலவுக்குக் கூட அவன் போகவில்லை. 'போயிருந்தால் ஏதாவது சாப்பிட்டிருக்கலாம்' நினைவு தந்த அழுத்தத்தில் சிறிது திரும்பிப் படுத்தவன் ஏதோ நினைவுகளுடன் எழுந்து, கொக்குவில் பக்கம் நடந்தான்.

தவம் அழுத கண்ணீரும் சிந்திய மூக்குமாய் இருந்தாள்.

முன்னைக்கு, அவள் இப்போது தளர்ந்து போய் உடல் இழைத்துக் கோலங் கெட்டுக் கிடந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகாகச் சென்று அவளது கரங்களை ஆதரவாகப் பற்றினான்.

"என்ன செனமமடா நீ...! என்ர அக்கம்மையை சாவீட்டிலையாவது வந்து பார்த்திருக்கலாம்...!"

"........."

அவனது இயல்பான மௌனம் அவளுக்கு எரிச்சலூட்டியது. அருகாக வந்து நின்றவனை அவள் பலங்கொண்ட மட்டும் தனது கரங்களால் பிடித்து தள்ளினாள். அவனது தலை முடியை பிடித்து உலுப்பியவள், அவனது மார்பில் முஷ்டிகளால் குத்தினாள். புளி மூட்டை மாதிரி உருண்டு திரண்டு நிலத்தில் கிடந்தவன், எழுந்து உடலில் ஒட்டி இருந்த மண்ணைத் தட்டித் துடைத்தபடி, 'இவளோட... இந்தக் காளியோட எதுவும் முடியாது...' என முனகியபடி, வெளித்திண்ணைக்கு வந்தான்.

திடீரென ஏதோ நினைவு வர, 'நேற்றுத் தான் செலவு... ஏதாவது அடுப்படியில் கிடக்கும்...' என்று நடந்தவன், அங்கு கிடந்த பானை சட்டிகளை உருட்டினான்.

பழஞ்சோறு மட்டும் கொஞ்சம் கிடந்தது. அதில் நீர் ஊற்றிக் கலக்கி, உப்பிட்டு, ஒரு பச்சை மிளகாயைக் கடித்தபடி வாயில் ஊற்றிக் கொண்டான்.

சாப்பாடானதும் மீளவும் திண்ணையில் வந்து படுத்துக் குறட்டை விட்டான்.

செக்கலில் ஆரோ அவனை ஸ்பரிசித்து உலுக்குவதை உணர்ந்தான்.

'தவம்!'

தவத்தைக் கைளால் ஒதுக்கிவிட்டு, மீளவும் படுத்துக் கொண்டான்.

"எழும்படா...! ஏதாவது சமைச்சுச் சாப்பிடவேணும்... காலையில இருந்து அன்ன ஆகாரமில்லாமல் தவிக்கிறன்... கையில் மடியில ஏதாவது இருக்கா...?"

"ம்..." கொட்டியவன், எழுந்து உட்கார்ந்து கொண்டான். மடியில் இருந்து நூறு ரூபாய் தாளொன்றை எடுத்தவனைப் பார்த்து அவள் சொன்னாள்:

"போடா... போய் அரிசியும் ஏதாவது கறிபுளியும் வாங்கிக் கொண்டா..!"

தவம் சமைத்து வைக்க, இவன் வந்து அவளருகாக உட்கார்ந்து கொண்டான்.

"நான் பிறகு சாப்பிடுறன்... நீ முதலில சாப்பிடு பிள்ளை... சரியான பசி உனக்குத்தான்."

கண்கள் பனிக்க அவனைப் பார்த்தவள்:

'ஆள் பரவாயில்லை... இவனுக்குத் தெரியாத விசயங்கள் கனக்க இருந்தாலும் இப்பையெல்லாம் விபரமாய்த்தான் இருக் கிறான்... கதைக்கிறான். இவன்ரை அசட்டை யும் முசுட்டுத்தனமும் விலக இந்த இனிமையும் இங்கிதமும் இவனுக்கு எப்படி... எப்படி....'

மனசு இளகிய நிலையில் அவனையே பார்த்தபடி இருந்தவள், சோற்றையும் நெத்தலிக் கருவாட்டுக் குழம்பையும் இரு தட்டுவங்களில் நிரப்பினாள். இவனிடம் ஒன்றைத் தந்து, மற்றதைத் தான் எடுத்துக் கொண்டாள்.

"முத்து...! நான் தனிச்சுப் போட்டனரா... எங்கையும் போகாதை... போகாமல் என்னோட இரடா...! மசிண்டி மசிண்டி... அங்க திருடி...இஞ்ச திருடி... எதுவும் கொண்டராத... நல்ல பிள்ளையாய்க் கூலி வேலைக்குப் போ. நானும் தம்பற்ரை மிளகாய்த் தறையில வேலை செய்யலாம்... இரண்டுபேரும் உழைச்சால் கையில மடியில ஏதன் சேரும்... அது எங்களுக்குப் போதும். இந்த அழுக்கு மூட்டையை, கருவண்டை எனக்குப் பிடிக்கும். நீ என்ரை மணிமுத்தடா...!"

மலர்ந்த சிரிப்புடன் அவள் கூறக்கூற "ம்", கொட்டிய முத்து, அவளுக்கு அருகாக வந்து அவளது கைகளைத் தனது கரங்களில் ஏந்தி அவளை அன்புடன் உச்சி முகர்ந்தான். அவளது பிசாண் அப்பிய தலைமுடி வாசம் அவனுக்குப் பிடித்திருந்தது. அவன் மிகுந்த பிரியத்துடன் அவளைப் பார்த்து முறுவலித்தான்.

அவனது அந்தச் சிரிப்பில் ஆயிரம் ஆயிரம் வண்ணத்திப் பூச்சிகளின் படபடப்பையும் சிறகு விரிப்பையும் அவள் கண்டாள். கிளர்ச்சியுற்ற அவள் மிகுந்த வேட்கையுடன் அவனை அணைத்துக் கொண்டாள்.

*

இப்பொழுதெல்லாம் முத்து சோம்பிக் கிடக்காமல் கூலி வேலைக்குப் போய் வருகிறான். எந்த வேலையையும் அவனால் செய்ய முடிகிறது. வேலியடைப்பு, விறகு பிளத்தல், கிணறு கலக்கி இறைத்தல், ஜெயம் ரீச்சர் வீட்டுப் பூமரங்களுக்கு நீர் வார்த்தல், வீடு வளவு சுத்தம் என்று எதையுமே அவனால் செய்ய முடிந்தது.

அவனது திருட்டு வேலை எல்லாமே ஏதோ முன் ஜென்ம நினைவாகவே அவனுக்கு ஆகிவிட்டது.

தவத்துக்கு அவனது உடனிருப்பும் அரவணைப்பும் பிடித்ததுடன். மிகுந்த தெம்பைத் தருவதாயும் இருந்தது. ஆண் துணை, அதுவும் அவள் மறுகி மறுகி விரும்பியவன் அவளோடு

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதென்றால்! அவள் தேன் சுவைபட்ட சித்தெறும்புபோல அவனைச் சுற்றிச் சுற்றி வந்தாள்.

அவனும் அவளிடம் கேள்விகள் எதுவும் இல்லாத ஒரு வித அங்கீகரிப்புடன் செயற் பட்டான். அது அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. காலம் ஸ்தம்பிதம் அடையவில்லை. அது நகரவே செய்தது. அவனது அசட்டுத்தனமான உறவுதந்த சுகத்தில் அவள் கருவுயிர்த்தாள். ஏழு மாதங்கள் கடந்த நிலை... அவள் நிறை சூலி ஆனாள்.

தனக்குக் கிடைப்பதை எல்லாம் அவளுக்கே அவன் தந்தபோதும் - அரைகுறை யாகவே அவள் சாப்பிட்டதான பிரமை அவனுக்கு.

'இத்தனை அக்கறை இவனிடம் எப்படி வந்தது...? தன்னை ஒறுத்து எல்லாமே உனக்குத்தான் என்பது போல் இருக்கும் இவனது இந்தப் புதிய போக்கும் நடத்தையும். எங்கிருந்து வந்து ஒட்டிக் கொண்டது...? கல்லுளி மங்கலான இவனது குணக்கூறுகள் இப்படி மாறுவதென்றால் அது எதனால்...?'

அவனது செயல்கள் அவளுக்கு அதிக வியப்பைத்தந்தன. அத்துடன் ஒரு வித மரியாதை உணர்வும் அவனிடத்தில் அவளுக்கு ஏற்பட்டது.

ஐப்பசி மாதம் தொடங்கிவிட்ட நிலையில் மழை கொட்டோ கொட்டென்று கொட்டியது. கடந்த மூன்று நாட்களாக தொடர்ச்சியான மழை பெய்து கொண்டிருந்தது. அதனால் அவன் கூலி வேலைக்குக் கூடப் போகாமல் குடிசையிலேயே முடங்கிக் கிடந்தான். அன்றாடங்காய்ச்சிகளான அவர்களுக்கு எதுவும் உண்பதற்கு கிடைக்காத லால் இருவரும் பட்டினி கிடந்தார்கள். பசியுடன் அவன் இருந்தபோதும் - அவளது நிலையே அவனை அதிக அளவு வருத்தியது.

குடிசையின் உள்ளாக எட்டிப்பார்த்தான். அவள் இயக்கங்கெட்டு, கந்தலாய்க் குவிந்து கிடந்தாள். இடைக்கிடை அவளது முனகல் சத்தம் வேறு கேட்டது. அவளை அணுகியவன் அவளை அணைத்துத் தூக்கினான். சோர்ந்து துவண்டு போய்க் கிடந்த அவளது கரங்களை எடுத்து முத்தமிட்டான். கரங்கள் காய்ப்புகண்டு, சொரசொரப்பாக இருந்தன.

'கடும் உழைப்பாளியான இவளது... இந்தப்பெட்டையின் கைகள் அப்படி என்ன பஞ்சுபோலவா இருக்கும்...!'

அவளை ஆசுவாசப்படுத்தும் நோக்குடன் அவளது உதடுகளில் முத்தமிட்டான். அவளது உதடுகளில் இருந்த செந்தணல், அவனுக்குப் பிடித்திருந்தது. அதைவிட அவளது முகத்தில் படர்ந்த நாணம் அவனுக்கு இன்னும் அதிகமாய்ப் பிடித்தது.

'உணர்ச்சி எதையுமே சுலபமாக வெளிக்காட்டாத இவனுக்கு, இதெப்படி... எப்படி...? தாம்பத்திய உறவென்று வரும்போது சில வேளைகளில் இவன் சிலிர்த்துப்போய்ச் சுறுசுறுப்படைவதும் சில சமயங்களில் பாரம் இழுக்கச் சுணக்கங்காட்டும் கள்ளமாடு மாதிரி முழிபிதுங்கி விடுவதும் எதனால்...?'

அவள் அவனை மிகுந்த பட்சமாகப் பார்த்தாள்.

"இண்டைக்கு நீ ஏதாவது சாப்பிட வேணும்... பசி கிடந்தால் உனக்கும் உன்ரை வயித்தில வளர்ற குழந்தைக்கும் கூடாது..." கூறியவன், அவளை ஆதரவாகத் தழுவியபடி கிடந்தான்.

லேசான குறட்டை ஒலியிலிருந்து அவள் அயர்ந்து தூங்கிவிட்டதை உணர்ந்து கொண்டவன், எழுந்து வெளியே வந்தான். தேய்பிறை நிலவு வழிகாட்ட, கால்போன போக்கில் நடந்தான். நடந்தவன், இலந்தையடிப் பக்கம் வந்துவிட்டதை உணர்ந்தான். நவத்தார் வீட்டுப்பக்கம் வந்தவன் அதை எட்டிப் பார்த்தான். அந்தப்பகுதியில் ஆடு வளர்ப்பது அவர் மட்டும்தான். ஆடுகளின் சிலமனில்லை. கொட்டில் பக்கம் ஒரு மறி ஆடுமட்டும்... அதுவும் நிறைசூலியாய் உழன்று உழன்று படுத்து கிடந்தது. உள்ளே சென்றவன், அடுக்களைப் பக்கமாக எதையோ தேடினான். தேடியது அவனுக்குக் கிடைத்தது. 'கொடுவாக்கத்தி' நீர்வேலி இரும்புப் பட்டறை வார்ப்பு. கத்தியை எடுத்தவன், கூர் பார்த்தான். நன்றாகவே இருந்தது. இலந்தையடியானை மனதில் இருத்திய படி அந்த ஆட்டை நெருங்கி, அதன் பின் தொடையொன்றை வெட்டி எடுத்தான். வெட்டிய வேகத்திலேயே, ஆட்டுக்காலுடன் அவன் வெளியே ஓடினான். முடமாவடிவரை வந்து விட்டவனுக்கு அந்த ஆட்டின் தீனமான அலறல் கேட்டபடியே இருந்தது. ஆட்டுக்காலில் இருந்து இரத்தம் கொட்டுவதைக் கண்ட அவன், மண் தரையில் அதனை நன்றாகத் தேய்த்து எடுத்து, தனது சாறத்தினுள் மறைத்தபடி நடந்தான்.

விடியலில், ஆட்டுக்கறி மணத்துடன் விழித்த தவம், "என்ன... என்னப்பா... செய்யிற யள்... அடுப்படியில நெருப்பெரியுது...?"

"பொறு பிள்ள... நீ முகத்தைக் கழுவு..." கூறியவன், கறியை இறக்கி, ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டுவத்தில் - பெரிய துண்டுகளாகப் போட்டு, அவளிடம் தந்தான்.

ஒரு துண்டை எடுத்து வாயில் வைத்தவள், "ருசியா இருக்கப்பா..." என்றாள்.

திடீரென அவளது முகம் கருமை கொண்டு இறுகியது: "என்ன... என்ன இது கள்ள ஆடா...? வேதாளம் மீளவும் முருங்கை மரத்தில் ஏறீற்றா...?"

"இல்லை... இல்லை... தின்னவேலியில ஆடடிக்கி இடத்தில வாங்கினது..."

"பொய்... உன்னட்டை ஒரு சல்லிக்காசு கூடக் கிடையாதே... இது...இது எப்படி...?"

"உன்ரை பசியைப் போக்க எனக்கு வேறவழி தெரியேல்லைப் பிள்ளை... உன்னோட உன்ரை வயித்தில வளர்ற சீவனும் பட்டினி அதுதான்...!"

"அதுக்கு இப்படியா...?"

கையில இருந்த தட்டுவத்தைத் தூர வீசியவள், அடுப்படிப் பக்கம் எழுந்துபோய், சட்டியில் இருந்ததையும் வெளியே கொட்டினாள்.

"என்ன தவம் இது...? நீ பாவம் எண்டுதான் இந்த வேலையைச் செய்தனான். இது களவா...? இல்ல"

"உந்த வேலையள... கன்னக்கோல் வைக்கிற புத்தியை... விடவேமாட்டையா... விடவே மாட்டையா...?"

புலம்பியபடி குலுங்கி அழுதவள், குடிசையின் உள்ளாகச் செல்ல முற்பட்டபோது அவளுக்குக் குறுக்காக வந்து, மிகுந்த துயரத்துடன் - கண்ணீர்ச் சாரலினூடே அவளை நிமிர்ந்து பார்த்தான்.

அவளது அந்தக் கண்களின் தீட்சண்யமான பார்வை அவனை நிலைகுலைய வைத்தது. அந்தக் கண்களின் உள்ளொளியும் ஜூவாலையும் அவனைச் சுட்டெரித்தன.

பதை பதைத்து, உயிர்பழிந்து நின்றவனின் கண்கள் மடை உடைந்ததுபோலக் கொட்டின. அவன் குலுங்கிக் குலங்கி அழுதான். தலைதாழ்த்தி, சகலதையும் இழந்துவிட்டதான நினைப்புடன் நின்ற முத்தன் - 'இந்தப் பெட்டை விரும்பாததை இனியும் தொடர்வதா... தொடர்ந்து செய்வதா...? கூடவே கூடாது...'

இளகிக் கிடந்த அவனது மனம் அரற்றிக் கொண்டது.

அவனுக்குக் கிட்டவாக வந்த தவம், அவனது முகத்தைச் சிறிது தூக்கிப் பார்த்தாள். அப்பொழுது அவனும் அவளைப் பார்த்தபடி...

அவனது கண்களில் துளிர்த்த ஆதுரம் அவளைப் புளகமுற வைத்தது.

இருவரும் தத்தமது கரங்களை இறுக்கமாகப் பற்றிக் கொண்டார்கள். அவர்களது அந்தத் தொடுகையும் நெருக்கமும் அப்பொழுது இருவருக்குமே இதமாக இருந்தது.

## எங்கள் சேமிப்பு

சேற்றில் நெல் தூவி
சோற்றைத்தயாரிக்கும்
உற்பத்தியாளர்தான் நானும்
ஊரில் வாழும் பலரும்
கோடை காலத்தில்
கொல்லி வைக்கும் வயிற்றுக்கு
மழை பொழிந்தால் மட்டும்
குளிரூட்டும் காலமாகும்!

நடுகை காலம் பிறந்தால்
விடும் தூதுகள்
வேசம் இல்லாமல்
வேதனம் கிடைக்குமென்று
பாசத்தோடு
பற்றிக்கொள்வேன்
முதலாளி கரம்

அன்று முதல்
அறுவடை காலம் வரை
உபவாசம் இல்லாமல்
உயிர் துடிக்கும்!
அறுவடையன்றுதான்
அனைவர் வயிற்றிலும்
தீ பிடிக்கும்
இதயத்தில் எரிமலை வெடிக்கும்...

ஆமாம்...!
மூட்டை கட்டி
முதலாளி வாகனத்தில்
ஏற்றி விட்டு
சேற்று நீரிலிருந்து
வீடு செல்கிறோம்

எங்கள் உழைப்பில்
எஞ்சியவைதான்
கழிவறை சேமித்திருக்கும்
கழிவுப்பொருள்.

**மிகிந்தலை.ஏ.பாரிஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 1950 வரையான காலகட்டத்து நவீன தமிழ்க் கவிதை

பேராசிரியை கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ்

## தமிழ்மொழியும் பாரதியும்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் மொழி தன்னைப் புதுப்பித்துக்கொள்கிறது. மறைந்து போயிருந்த தமிழ் இலக்கிய, இலக்கண நூல்கள் அச்சின்மூலம் வெளிக்கொணரப்பட்டன. இந்தியாவில் தோன்றிய மத்தியதர வர்க்கம் இழந்து போன பழைமையின் பெருமையை உணரத்தொடங்கிற்று. கீழைத்தேய மக்களை "நீங்கள் அஞ்ஞானிகள் உங்களை நாங்கள் இரட்சிக்க வந்தோம்" என்ற மேற்குலக சிந்தனை மற்றும் அதிகாரத்துக்கெதிராக தங்கள் தங்கள் வளமிக்க முதுசங்களை எடுத்துக்காட்ட வேண்டிய கட்டாயத்துக்கு அவர்கள் தள்ளப்பட்டனர். அந்நிலையில் தமிழரிடமும் நீண்ட பண்பாட்டுப் பாரம்பரியம் உண்டு என தமிழ்மொழியின் பெருமையையும் பண்பாட்டின் வளமையையும் பற்றிப் பேசத் தொடங்கினர். அக்காலத்தில் இலக்கிய இலக்கண நூல்களை எழுதினோரும் பதிப்பித்தோரும் தங்கள் தங்கள் ஆதங்கங்களை தமது நூல்கள் வாயிலாகவும் முன்னுரைகள் வாயிலாகவும் வெளியிட்டனர். (உதாரணம் சி.வை தாமோதரம்பிள்ளை, மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை)

அந்தச்சிந்தனை மரபில் வந்த பாரதியும் தமிழ்மொழியின் உயர்வைப்பற்றிய தன்சிந்தனைகளை கட்டுரைகளாகவும் பாடல்களாகவும் வெளியிட்டார். கவிதைகளை நோக்கும்போது செந்தமிழ் நாடு, தமிழ், தமிழ்மொழி வாழ்த்து, வாழிய செந்தமிழ் போன்ற பாடல்களில் அவரின் தமிழ் மொழி விருப்பும் அதனை வளர்க்க வேண்டும் என்ற ஆர்வமும் தெளிவுறத் தெரிகின்றன. செந்தமிழ் நாடு என்ற கவிதையிலே

செந்தமிழ் நாடென்னும் போதினிலே
இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே
எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே
ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே

எனத் தமிழ் மொழியின் பெயரைச் சொல்லும் போதே மனதில் எழுகின்ற இன்பம் பற்றிக் கூறுகிறார்.பிறந்த நாட்டை தாய்நாடு என்னும் வழக்கத்தை மாற்றி தந்தையர்நாடு என்று குறிப்பிடுவதை இதில் காணலாம். அது மட்டுமல்லாது தமிழ்மொழியின் பழம் பெருமை பற்றியும் அதிக இடங்களில் குறிப்பிட்டுள்ளார். கம்பன் வள்ளுவன் இளங்கோ போன்ற புலவர்களின் சிறப்பைப்பற்றி அதிக இடங்களில் குறிப்பிடுகிறார்.

ஆயினும் பாரதி தான் வாழ்ந்த காலத்தில் இருந்த தமிழ்மொழியின் பலவீனத்தையும் உணர்ந்திருந்தார். தமிழ் மொழி நவீன உலகின் புதிய மாறுதல்களுக்கேற்பத் தன்னைத் தயாராக்கிக் கொள்ள வேண்டும் என்று விரும்பினார். செந்தமிழ்நாடு என்ற கவிதையிலே தமிழின் புகழை உரைத்த பாரதி தமிழ்த்தாய் தன் மக்களைப் புதிய சாத்திரம் வேண்டுதல் என்ற கவிதையிலே தமிழ்த்தாய் விதியே விதியே தமிழச்சாதியை என் செயக் கருதி இருக்கின்றாயடா எனக் கேள்வியொன்றை முன்வைக்கிறார். தமிழ் என்ற கவிதையிலே தமிழர் தமிழுக்குச்செய்ய வேண்டிய கடமைகளை எடுத்துக்கூறினார்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்

என்று குறிப்பிட்டார். தமக்குள்ளே தாம் தம்மைப்பற்றிப் பேசிப் புகழாமல் இன்னொருவர் அதைப் புகழும்போதே அதன் உண்மையான புலமைச் சிறப்பு வெளிவரும் என்பது அவரது நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பாஞ்சாலி சபதம் என்ற காவியத்தை அவர் சமர்ப்பணம் செய்யும் முறை முக்கியமானது.

தமிழ்மொழிக்கு அழியாத உயிரும் ஒளியும் இயலுமாறு **இனிப்பிறந்து காவியங்கள் செய்யப் போகிற வரகவிகளுக்கும்** அவர்களுக்குத் தக்கவாறு கைங்கரியங்கள் செய்யப்போகிற பிரபுக்களுக்கும் இந்நூலைப் பாத காணிக்கையாகச் செலுத்துகிறேன் என்று குறிப்பிட்டார். பாரதியார் தன் காலத்திலே அவர் சிந்தித்தவாறான கவிஞர்கள் இல்லை எனக் கருதினார் என்பது **இனிப் பிறந்து காவியங்கள் செய்யப்போகிற வரகவிகளுக்கும்** என்று அவர் குறிப்பிட்டதால் உணரப்படும். அதுமட்டுமல்லாது **தமிழ் ஜாதிக்குப் புதிய வாழ்வு** தரவேண்டுமென்று கங்கணங்கட்டி நிற்கும் பராசக்தியே என்னை இத்தொழிலிலே தூண்டினாளாதலின். இதன் நடை நம்மவர்க்குப் பிரியந் தருவதாகும் என நம்புகிறேன். இவ்வாறு பார்க்கும்போது எல்லா இடங்களிலும் தமிழின் புதிய வாழ்வு பற்றி எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவர் சிந்தித்ததைக் காண லாம். அவர் காலத்தில் பாடப்பட்ட கீர்த்தனைகள் கூடுதலாக சமஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் எழுதப்பட்டவை.அதைப்பற்றிக் கூறுபவை முக்கிய மான கருத்துக்களாகும்.

இப்போது சங்கீத வித்வான்களிலே தலைமைப்பட்டிருப்போர் தமிழிலே புதிய மெட்டுகளில் கீர்த்தனங்கள் செய்ய முயல வேண்டும்... இவற்றுள்ளே தீக்ஷிதரின் கீர்த்தனைகள் பச்சை சமஸ்கிருத பாஷையிலே எழுதப்பட்டவை. இவை நமது நாட்டுப் பொது ரசானுபவத்துடன் பாடுவதற்கு பயன்பட மாட்டா ஆகவே சமஸ்கிருதத்திலிருந்து விடுபட்டு பொது மக்களுக்கு விளங்கும் வகையிலே தமிழ் மொழியில் பாடல்கள் எழுதப்பட வேண்டும் என்பது அவர் கருத்தாக இருந்தது.இந்தச்சாதனை பற்றி சிவத் தம்பி பின்வருமாறு கூறுகிறார்.

"பாரதியின் சாதனை தமிழ்மொழியின் பயன்பாட்டை பொதுமக்கள் நிலைப்படுத்தலுக் கான குரலைக் கொடுத்ததும் அந்தச் சாதனைச் செயல் சாத்தியப்படுத்தும் படைப்புகளை முன்வைத்ததுமாகும்."(சிவத்தம்பி.கா.கி.பார்த்திப ராஜாவின் நூலுக்கான முன்னுரை :2001)

## பாரதியின் சுதந்திர வேட்கையும் அவரது தேசியப்பாடல்களும்

இரண்டாயிரம் வருட தமிழ்ச்செய்யுள் வரலாற்றில் சாதாரண மக்களின் சுதந்திரத்தைப் பாடுதல் அல்லது அந்த மக்களின் அரசியல் விடயங்களைப் பாடுதல் என்பது தமிழ் இலக்கியத் துக்குப் புதிய பொருளாகும்.இந்தப் புதிய பொருள் 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலேயே தமிழ்க் கவிதைக்குள் நுழைந்தது. பாரதியின் நாட்டிற் குழைத்தல் என்பது சுதந்திரத்தைப் பாடுவ தாகவும் அதற்காக எல்லா வழியாலும் பாடுபடுவ தாகவும் இருந்தது. அதைப் பல இடங்களில் பாரதி குறிப்பிட்டுள்ளார்.



## தொழில் கவிதை

அவர் கவிதையைத் தனது தொழிலாகக் கருதினார். தனக்குத் தொழில் கவிதை என விநாயகர் நான்மணிமாலையில் குறிப்பிட்டதுடன் அத்தொழில் மூலம் நாட்டிற் குழைத்தல் தனது பணி எனக் குறிப்பிட்டுள்ளார்.

நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல்
இமைப் பொழுதுஞ் சோராதிருத்தல் -உமைக்கினிய
மைந்தன் கணநாதன்தன்குடியை வாழ்விப்பான்
சிந்தையே இம்மூன்றும் செய்

என்பது அக்கவிதையாகும். அது மட்டுமல்லாது தான் இந்த மானிலம் பயனுற வாழ்வதற்குப் பராசக்தி அருள் புரிய வேண்டும் எனவும் வேண்டினார்.

நல்லதோர்வீணை செய்தே நலம்கெடப்புழுதியில்எறிவதுண்டோ
சொல்லடீ சிவசக்தி எனைச்சுடர் மிகும்
அறிவுடன் படைத்து விட்டாய்
வல்லமை தாராயோ இந்த மானிலம் பயனுற வாழ்வதற்கே.
சொல்லடீ சிவசக்தி நிலச்சுமையென
வாழ்ந்திடப் புரிகுவையோ?

எனத் தான் வாழ்தலுக்கான அர்த்தத்தை பராசக்தியிடம் வேண்டினார். அவரது பாடல்கள் பலவற்றில் இவ்வாறான வேண்டுதல்கள் காணப்படுகின்றன.

## கவிதையில் தேச விடுதலை என்ற புதிய சிந்தனை

1908 இலே பாரதி அரசியல் கவிதைகளை எழுதத் தொடங்கினார்.ஸ்வதேச கீதங்கள் என்ற தனது நூலின் முகவுரையிலே தேசவிடுதலையால் ஈர்க்கப்பட்டதை பாரதி குறிப்பிட்டுள்ளார்.

சென்ற சுபகிருது வருஷத்திலே பாரத நாட்டில் சர்வ சுபங்களுக்கும் மூலாதார மாகிய தேசபக்தி என்ற நவீன மார்க்கம் தோன்றியது. நல்லோர்களின் சிந்தையெல்லாம் உடனே புளகிதமாயின. நல்லோருடைய குணங்களிலே குறையுடையவனாகிய யானும் தேவியினது கிருபையால் அப்புதிய சுடரினிடத்து அன்பு பூண்டேன். அவ்வன்பு காரணமாக சென்ற வருஷம் சில கவிதை மலர்கள் புனைந்து மாதாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடிக்குப் படைத்தேன் என குறிப்பிட்டுள்ளார்.

தேச விடுதலையால் ஈர்க்கப்பட்ட பாரதி மனிதன் சமூகத்தின் எல்லாத் தளைகளிலிருந்தும் விடுதலை பெற வேண்டும் என விரும்பினார். இந்த விருப்பம் அவரது எல்லா ஆக்கங்களிலும் எதிரொலித்தது.

பாரதிக்கு முந்திய காலங்களில் புலவர் கள் மனிதன் துன்பங்களிலிருந்து விடுதலை பெற வேண்டுமெனில் பிறப்பிலிருந்து விடுதலை பெற வேண்டும் எனப் பாடினர். ஆசையே துன்பங் களுக்குக் காரணம் அல்லது இப்பிறப்பிற் செய்யும் பாவங்களே துன்பங்களுக்குக் காரணம் இத்துன் பங்களிலிருந்து விடுதலை பெற வேண்டு மெனில் இறைவனை அடையவேண்டும் எனச் சமயங் களும் இலக்கியங்களும் கூறின.

ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டி லேற்பட்ட புதிய சிந்தனையானது இவ்வுலக வாழ்வில் மனிதன் அனுபவிக்கும் துன்பங்களுக்கு அவனாலேயே விடையளிக்க முடியும் அந்தத் துன்பங்களுக்காகப் போராட முடியும் என்று கூறியது.

அந்தச் சிந்தனை வழியில் வந்த பாரதி தேச விடுதலை, மொழி விடுதலை, தொழிலாளர் விடுதலை, பெண்கள் விடுதலை, சாதியடக்கு முறைகளிலிருந்து விடுதலை, மூட நம்பிக்கைகளி லிருந்து விடுதலை பொருளாதார விடுதலை எனப் பல முன்னேற்றகரமான விடயங்களைப் பற்றிப் பாடியுள்ளார். சமூகச் சீர்கேடுகளை எதிர்த்தார். வறுமையை ஒழிக்க வேண்டும் எனத் தன் கவிதை களில் குறிப்பிட்டார். வறுமை ஒழிந்தால்தான் இந்தியா சுதந்திரம்பெறும் என அவர் கருதினார்.

பாரத சமுதாயம் என்ற பாடலில் மனிதருணவை மனிதர் பறிக்கும் வழக்கம் இனியுண்டோ மனிதர் நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கை இனியுண்டோ என்றும் தனியொரு வனுக்குணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்றும் குறிப்பிடுகிறார். சுதந்திரப்பள்ளு என்ற பாடலில்

பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே
வெள்ளைப் பறங்கியைத் துரையென்ற காலமும் போச்சே
பிச்சை ஏற்பாரைப் பணிகின்ற காலமும் போச்சே
நம்மை ஏய்ப்போருக் கேவல் செய்யும் காலமும்போச்சே

(பாரதியார் கவிதைகள் பக்கம் 57)

என்று வரப்போகும் சமூக சமத்துவம் பற்றிப் பாடினார். குழந்தைகளைப் புதிய முறையில் வளர்க்க விரும்பினார். மனிதர்களிடையே காணப் படும் பிரிவினைகள் அவருக்குக் கவலையை ஏற்படுத்தின.

நெஞ்சு பொறுக்குதில்லையே
இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்
கொஞ்சமோ பிரிவினைகள்
ஒரு கோடியென்றால் அது பெரிதாமோ
அஞ்சியஞ்சிச் சாவார் இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே

## விடுதலை வீரர்களைப் பாடியமை

இந்திய விடுதலைக்காகப் பாடுபட்டவர் களை அவர் புகழ்ந்து பாடியுள்ளதையும் அவதானிக்க முடியும். சத்ரபதி சிவாஜி, கோகலே சாமியார், மகாத்மா காந்தி, திலகர், லஜபதிராய், வ.உ.சி போன்றோர் அவரால் பாடப்பட்டவர்கள். உதாரணமாக மகாத்மா காந்தியைப்பற்றி அவர் **வாழ்க நீ எம்மான்** என்ற தலைப்பிலே பாடிய பாடல் குறிப்பிடற்குரியது.

வாழ்க நீ எம்மான் இந்த வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமைமிஞ்சி விடுதலை தவறிக்கெட்டுப்
பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா நீ வாழ்க வாழ்க

சிவாஜியைப் பற்றிப் பாடும் போது சிவாஜி தன் சைனியத்திற்குக் கூறியது என்று குறிப்பிட்டு அந்நிய ஆட்சிக்கெதிராகப் போரிட வேண்டும் என்கிறார்.

## சாதி அடக்கு முறையிலிருந்து விடுதலை

இந்திய சமூகம் காலங்காலமாக சாதி முறைமையினால் கட்டுண்ட சமூகமாகும். உயர்சாதியைச் சேர்ந்தவர்கள் தமக்குக் கீழ் வாழ்ந்த சாதியினரை (இன்றைக்கு தலித் சமூகம் என்று சொல்லப்படுபவர்களை) நாயிலுங் கேவலமாக நடத்தினர். பாரதி பிராமணராக இருந்தாலும் மிக்க விசுவாசத்தோடு தேசிய விடுதலையையும் முழு மானிட சமூகத்துக்குமான விடுதலையையும் வேண்டி நின்றவர். அதனால் எல்லா மக்களுக்குமான விடுதலையை வேண்டிப் பாடினார். விடுதலை என்ற பாடலிலே சாதி விடுதலை பொருளாதார விடுதலை பெண்கள் விடுதலை ஆகியவற்றைப் பாடியுள்ளார். அதில் சாதிவிடுதலை பற்றி பின்வருமாறு பாடினார்.

விடுதலை விடுதலை விடுதலை
பறையருக்கும் இங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கும்
மறவருக்கும் விடுதலை

எல்லாச் சாதியினரும் விடுதலையடைய வேண்டும் என்பது இவ்வரிகளில் தெரிவிக்கப் படுகிறது. அத்துடன் தொழிலடிப்படையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரிக்கப்பட்ட சாதியமைப்பை ஒழிக்கவேண்டும் என்பது அவர் கருத்தாக இருந்தது. எனவே தான் எல்லாத் தொழிலும் மாண்பு மிக்க தொழில்கள் எனக் கூறினார்.

சாதிக் கொடுமைகள் வேண்டாம்
அன்பு தன்னில் செழித்திடும் வையம்
ஆதரவுற்றிங்கு வாழ்வோம் தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்

## சமய சமத்துவம்

சமயங்கள் அன்பைப் போதிக்க வேண்டியனவாயினும் தமக்குள்ளே மோதிக் கொண்டமைதான் வரலாறு. அதனால் மனித குலம் காலந்தோறும் மதங்களினால் பகையை வளர்த்திருக்கிறது. அதனால் தான் தெய்வங்களின் பெயரால் பகை வேண்டாம் என பாரதி வற்புறுத்துகிறார்.

தெய்வம் பல பல சொல்லிப்
பகைத்தீயை வளர்ப்பவர் மூடர்
உய்வதனைத்திலும் ஒன்றாய்
என்றும் ஓர்பொருளானது தெய்வம்
தீயினைக்கும்பிடும் பார்ப்பார்
நித்தம் திக்கை வணங்கும் துருக்கர்
கோயிற் சிலுவையின் முன்னே
நின்று கும்பிடும் யேசு மதத்தார்
யாரும் பணிந்திடும் தெய்வம்
பொருள் யாவினும் நின்றிடும் தெய்வம்.
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று
இதில் பற்பல சண்டைகள் வேண்டாம்.

என எல்லாத் தெய்வங்களும் சமமே எனவும் சண்டைகள் வேண்டாம் எனவும் அறிவுறுத்துகிறார்.

## தொழிலாளர் விடுதலை

ஆஹா வென்றெழுந்தது பார் யுகப்புரட்சி என அவர் காலத்தில் 1917 இல் ரஷ்யாவிலேற்பட்ட தொழிலாளர் புரட்சியை அவர் மனப்பூர்வமாக வரவேற்றார்.

குடிமக்கள் சொன்னபடி குடிமைவாழ்வு
மேன்மையுறக் குடிமைநீதி
கடியொன்றிலெழுந்தது பார்
குடியரசென்று உலகறியக்கூறிவிட்டார்
அடிமைக்குத் தளையில்லை
யாருமிப்போது அடிமையில்லை அறிக என்றார்
இடிபட்ட சுவர்போலக் கலிவீழ்ந்தான்
கிருதயுகம் எழுகமாதோ

என்று புதியருஷ்யா என்ற கவிதையிலே ரஸ்யப்புரட்சியை வியந்து பாடினார். அதனால் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம். விழலுக்கு நீர்ப்பாய்ச்சி மாய மாட்டோம் வெறும் வீணருக்குழைத்துடலம் ஓய மாட்டோம் எனத் தொழிலின் உயர்வு பற்றிக் குறிப்பிட்டதுடன் முதலாளிகளுக்காக உழைக்க மாட்டோம் என்பதை சூசகமாகக்குறிப்பிடுகிறார். .

இந்தியசமூக வாழ்க்கையில் தொழிலும் சாதியும் ஒன்றுடனொன்று பின்னப்பட்டிருந்தன. எல்லாத் தொழிலுக்கும் மதிப்பளிக்கவேண்டும் என்பது அவர் கருத்தாக இருந்தது.

இரும்பைக்காய்ச்சி உருக்கிடுவீரே
இயந்திரங்கள் வகுத்திடுவீரே
கரும்பைச்சாறு பிழிந்திடுவீரே
கடலில் மூழ்கி நன்முத்தெடுப்பீரே
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே
பெரும்புகழ் நுமக்கேயிசைக்கின்றேன்
பிரம்மதேவன் கலையிங்கு நீரே

இப்பாடலில் எல்லா வகையான தொழிலாளரையும் புகழ்ந்து பாடுவதைக் காணலாம் தொழிலாளரைப் புகழ்ந்து பாடுதலானது தமிழிலக்கிய உலகில் புதியதொன்றாகும். கரும்புத் தோட்டத்திலே அடிமைப்பட்டுத் தொழில் செய்த பெண்களுக்காக மனமிரங்கிப் பாடினார்.

அந்தப் பஞ்சை மகளிரெல்லாம்
துன்பப்பட்டு மடிந்து மடிந்து மடிந்தொரு
தஞ்சமும் இல்லாதே- அவர் சாகும்
வழக்கத்தை இந்தக் கணத்தினில் மிஞ்ச விடலாமோ

எனக் கேட்டார். தொழிலாள வர்க்கத்தினர் அனைவரையும் அவர் மனதில் கொண்டிருந்ததையே இப்பாடல்கள் காட்டுகின்றன.

## பெண் விடுதலைப் பாடல்கள்

ஒரு நாடு விடுதலையடைவதற்கு நாட்டு மக்களிடையேயுள்ள மூடநம்பிக்கைகள் விலக வேண்டும் அதனால் ஏற்பட்டுள்ள அடக்குமுறைச் சிந்தனைகள் நீங்க வேண்டும் எனப் பாரதி நம்பினார். தனது காலத்தில் இந்தியாவில் நிலவிய பெண் அடக்குமுறையை கண்கூடாகக்கண்டவர் பாரதி. அதனால் அவரது பாடல்கள் பல பெண் விடுதலை பற்றிப் பாடப்பட்டவை. புதுமைப் பெண், பெண்கள் விடுதலைக் கும்மி, பெண்மை, பெண் விடுதலை போன்ற பாடல்கள் அவை. இப்பாடல்களைத் தவிர ஏனைய சில பாடல்களிலும் ஆங்காங்கே பெண் விடுதலை பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

பெண்கல்வி முரசு என்ற கவிதையிலே பெண்ணின் அறிவை முடக்கியவர்கள் பூமியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் மூடர்கள் என்று குறிப்பிடுகிறார்.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்
புவிபேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர்
மாதரறிவைக் கெடுத்தார்.
கண்களிரண்டினில் ஒன்றைக் குத்திக்
காட்சி கெடுத்திடலாமோ
பெண்களறிவை வளர்த்தால் வையம்
பேதைமை யற்றிடும் கண்டீர்

என்று இச்சமூகம் பெண்ணுக்கு விதித்துள்ள கட்டுப்பாடுகளையும் கொடுமைகளை யும் எடுத்துக்கூறி பெண்களின் அறிவை வளர்க்க வேண்டும் என்கிறார். பெண்கள் அறிவு பெற்றால் முழு உலகமும் பேதைமை அற்றிடும் என்றும் குறிப்பிடுகிறார்.

பெண்ணை அடிமையாகக் கருதும் தன்மை நீங்கவேண்டும் என்பது அவரது கருத்தாகும் புதுமைப்பெண் என்ற கவிதையிலே

அறிவு கொண்ட மனிதவுயிர்களை
அடிமையாக்க முயல்பவர் பித்தராம்
நெறிகள் யாவினும் மேம்பட்டு மானிடர்
நேர்மை கொண்டுயர் தேவர்களாதற்கே
சிறிய தொண்டுகள் தீர்த்தடிமைச்சுருள்
தீயிலிட்டுப் பொசுக்கிட வேண்டுமாம்
நறிய பொன்மலர் மென்சிறுவாயினால்
நங்கை கூறும் நவீனங்கள் கேட்டிரோ

பெண் விடுதலை பற்றிக் கூறும் கருத்துகளை பாரதி நவீனம் என்று குறிப்படுவதை இப்பாடலில் அவதானிக்கலாம். அது மட்டுமல்லாது பின்வரும் பாடல்களில் மாதரை இழிவு செய்வது மடமை என்றும் மாதரை அடக்கி வைத்தவர்களை விந்தை மனிதர் என்றும் குறிப்பிடுகிறார்.

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
மாட்டை அடக்கி வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டுவந்தே
வீட்டினிற் பெண்களைப் பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்

இந்திய நாடு விடுதலையடையு முன்பே ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று எனப் பாடியது போல பெண்கள் விடுதலையடைய முன்னரே பெண்கள் விடுதலைக் கும்மி என்ற பாடலில் விடுதலை பெற்ற பெண்கள் பாடுவதாக

கும்மியடி தமிழ்நாடு முழுதும்குலுங்கிடக்
கைகொட்டிக் கும்மியடி
நம்மைப்பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோமென்று கும்மியடி

எனப் பாடலை அமைத்துள்ளமையைக் காணலாம். பிஜித்தீவில் துயரமுறும் கரும்புத் தோட்டத் தொழிலாளர் பற்றி அதிலும் குறிப்பாக தொழிலாளப் பெண்கள் பற்றி பின்வருமாறு குறிப்பிடுவார். கரும்புத் தோட்டத்திலே என்ற கவிதையிலே

பெண்ணென்று சொல்லிடிலோ-ஒரு
பேயும் இரங்கும் என்பார் தெய்வம்-நினது
எண்ணம் இரங்காதோ- அந்த ஏழைகள்
அங்கு சொரியும் கண்ணீர் வெறும்
மண்ணிற் கலந்திடுமோ தெற்கு
மாகடலுக்கு நடுவினிலே அங்கோர்
கண்ணற்ற தீவினிலே-தனிக்
காட்டினிற் பெண்கள் புழுங்குகின்றார்.

கரும்புத் தோட்டத்தில் வேலை செய்யும் பெண்களின் துயரத்தைக் கூறினார். பாரதியைத் தொடர்ந்து வந்த அனைத்துக் கவிஞர்களும் இந்தப் பொருள்களை ஏதோ ஒருவகையில் பாடியுள்ளனர்.

(தொடரும்)

## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி – 80/= ஆண்டுச்சந்தா – 1200/=
வெளிநாடு – $ 50U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும். அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K.Bharaneetharan, Kalaiaham, Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY

## ஜீவநதியின் அஞ்சலிகள்



ஈழத்து மூத்த படைப்பாளி அன்புமணி அவர்களுக்கு ஜீவநதியின் அஞ்சலிகளை செலுத்துவதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

செ.செல்வராஜா

திருஞானம், கனடாவிலிருந்து வந்த போது, ஊர் மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஒவ்வொருவரினதும் கஸ்டத்தையும் பரிந்து கொண்ட மனிதன் என்ற எண்ணம் ஊர் மக்கள் எல்லோருக்குமே இருந்தது. நீண்ட, மிக நீண்ட இடைவெளியின் பின் அதாவது "ஐபிகேஎப்", இந் நாட்டிலிருந்த போது வெளியேறியவர், இப்பொழுதுதான் இங்கு காலடி எடுத்து வைத்துள்ளார்

வெளிநாடுகளிலும் பெரிய பெரிய அமைச்சர்கள் மட்டத்தில் மிகுந்த செல்வாக்கு உள்ள மனுசனாம். இங்கு வந்தும் ஓரிடத்திலென்று தரித்து நிற்கவில்லை. வன்னிக்குச் சென்று அங்குள்ள மக்களின் அவலங்களை நேரடியாகக் கண்டும், கேட்டும், தமது "கமெராவினுள்" அடக்கிக் கொண்டு வந்திருந்தார். "ஐயோ! அங்க சனம்படுகிறபாடு", என்று அடிக்கொரு தரம்சொல்லிப் பெருமூச் செறிந்த வண்ணமே இருந்தார்.

பளைப் பகுதிக்குச் சென்ற போது ஒரே வீட்டில் மூன்று பேர் "சற்கர நாற்காலிகளைப் பயன்படுத்தியே தமது அன்றாடக் கருமங்களை ஆற்றும் அவலத்தினைச் சொல்லி வேதனைப் பட்டார். ஒருவருக்கொருவர் உதவி செய்ய இயலாத நிலமை... அவர்களில் ஒருவர் கூட வாழ்வாதார வருமானம் பெறக் கூடிய நிலையிலில்லாமையைச் சொல்லி மனமுருகினார்.

ஒரு பெண் பிள்ளை கண்கள் இரண்டையும் இழந்த நிலையில், மணமான தனது சகோதரியின் தயவுடன் வாழ்வதனையும், கண்ணிழந்த அப் பெண்ணின் சோக வரலாற்றையும், அதே வேளை அப்பெண்ணின் தன்னம்பிக்கையையும் வாயாரப் புகழ்ந்து கொண்டிருந்தார்.

தான் இம்முறை கனடா போனதும், அங்குள்ள தமிழ் புலம் பெயர்ந்தோரைக் கண்டு இவற்றிற்கெல்லாம் விடிவு ஏற்படத்தக்க வகையில் ஏதாவது உதவி பெற்று, அடுத்த முறை வரும் போது கட்டாயம் உதவ வேண்டும் என்று சொல்லிக் கொண்டே இருந்தார்.

தான் சந்தித்த அவ்வளவு சோக வாழ்வு வாழ்பவர்களின் விலாவாரியான விபரங்களைச் சேர்த்துக் கொண்டார். அவர்களது குறைகளை, "கமெராவிலும்," ஒலிப்பதிவிலும் பதிவு செய்து கொண்டார்.

இதற்கு மேலாக, மீள் குடியேறத் துடிக்கும் மக்களின் போராட்டங்களிலும், இணைந்து கொண்டார். சில தொலைக்காட்சிகளில் அவர் கோசங்கள் எழுப்பிய வண்ணம் பதாகைகளுடன் போராட்டத்தில் கலந்து கொண்ட படங்கள் உள்ளூர் செய்தித் தாள்களிலும் இடம்பெற்றன.

கனத்த மனத்துடன் மீண்டும் கனடா பயணமானார்.

அங்கு காண வேண்டியவர்களைக் கண்டார். உதவுவதற்கு மனங் கொண்ட பலர் எவ்விதம் தமது உதவியை உரியவர்களுக்குச் சேர்ப்பிப்பது என்று தெரியாது விழி பிதுங்கி நின்றோருக்கு இவரது சந்திப்புத் தித்திப்பாய் அமைந்தது.

விடா முயற்சி என்றால் அது திருஞானம் தான். ஓய்வு ஒழிச்சலின்றி, தமது அடுத்த தாய் நாட்டுப் பயணம் பற்றியே அவர் சிந்தனைகள் விரிந்தன. தனவான்களையும், கனவான்களையும் சந்தித்து, இங்கு தமிழ் மக்கள் படும் அவலங்களை விளக்கினார். உதவி செய்ய மனங் கொண்டவர்களின் பட்டியலை தயார் படுத்தினார்.

புலம் பெயர் தமிழ் உறவுகளின் ஆதரவு அவரை மிக உற்சாகம் கொள்ள வைத்தது. விரைந்து மீண்டும் நாட்டுக்கு வந்தார். தனது பிறந்த ஊருக்குச் சென்றார். அவரது தந்தையும், தாயும் கூடிக் குலாவித் திரிந்த மண்ணில் அவரது காலடிபட்ட போது அவரின் மெய் சிலிர்த்தது.

அன்றைய செய்தித் தாள் நல்லதொரு இனிய செய்தியைத் தாங்கி வந்திருந்தது. அவருடைய பிரதேசத்தில் இது வரை அதி உச்ச பாதுகாப்புப் பிரதேசமாக இருந்த ஒரு பகுதி, காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளதான செய்திதான் அது. அவர்களது குல தெய்வம் வீற்றிருக்கும் பெரிய கோவிலும், அதனைச் சூழவுள்ள பகுதியும், விடுவிக்கப் படுகின்றது என்று அறிந்து மகிழ்ச்சி கொள்ளாத மக்களே இல்லை.

அதில் நமசிவாயம்பிள்ளையின் ஒரு ஐந்து ஏக்கர் காணியும் அடங்குகிறது. கோவிலை ஒட்டி மிக அருகாக அவரது "முதுசக் காணி" அமைந்திருந்தது. இடப் பெயர்வின் பின்னர் நமசிவாயம்பிள்ளையின் பிள்ளைகள் ஒவ்வொருவராக, லண்டன் என்றும், பிரான்ஸ் என்றும் சென்று, அங்கேயே "செற்றில்" ஆகிவிட்டனர். இனி இந்தப் பக்கம் வருவதாகவும் இல்லை என்றே சொல்லி விட்டனர்.

காணி விடுவிக்கப்பட்டதும், செய்தி கிடைத்து முதன் முதலில் வந்து நமசிவாயம் பிள்ளையிடம் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தவர் இரத்தினகோபால் "மாஸ்டர்"தான்... அவருக்குப் பிள்ளைகள் இல்லை... கட்டைப் பிரமச்சாரி. பெரிதாக சொத்தும் இல்லை. உழைத்த காசுகளை உழைத்த காலத்திலேயே ஊரில் கஸ்டப்பட்டவர்களுக்குக் கொடுத்துவிட்டு, போதாக்குறைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

கிடைத்த ஒன்றுதிரட்டிய ஓய்வூதியக் காசில் ஒரு இலவச முன்பள்ளி தொடங்கி நடத்திக்கொண்டு வந்தார். யுத்தத்தில் அவர் அமைத்த முன்பள்ளிக் கட்டடம், தளபாடம் எல்லாம் அற்றுப் போகவும், படித்த பிள்ளைகள் திக்குத் திக்காக இடம்பெயர்ந்த போதும், படிப்பித்த முன் பள்ளி ஆசிரியருக்கு இடப் பெயர்வின் போதும், உரிய வேதனத்தைத் தன் ஓய்வூதியத்திலிருந்து கொடுத்து வந்தார்... ஆனால் அந்த ஆசிரியர் இருக்குமிடத்தில், முன்பள்ளி செல்லாத பிள்ளைகளைச் சேர்த்து, ஒரு மணித்தியாலமோ, இரண்டு மணித்தியாலங் களோ, ஒரு பிள்ளையோ. இரண்டு பிள்ளைகளோ, முன்பள்ளி பாடம் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்ற நிபந்தனை வேறு.... "பென்சன்" பிந்தினா லும், முன்பள்ளி 'ஆசிரியரின் சம்பளம் பிந்தாமல் பார்த்துக் கொண்டு வந்தார்.

நமசிவாயம்பிள்ளையிடம், அவரின் காணி விடுவிக்கப்பட்டதற்கு மகிழ்ச்சி தெரிவித்துவிட்டு, கோவிலை ஒட்டியதாக அவரின் காணியில் ஐந்து ஏக்கரில் ஒரு இரண்டு, மூன்று பரப்பை, முன்பள்ளி கட்ட ஒதுக்கித் தருமாறு கேட்டுக் கொண்டார இரத்தினகோபால் "மாஸ்டர்". நமசிவாயத்திற்கும் அது ஒரு நல்ல திட்டமாகப் பட்டது. எதற்கும் வெளிநாட்டிலிருக்கும் பிள்ளகைளிடம் ஓரிரு வார்த்தைகள் கேட்டுவிட்டுச் சொல்வதாக நமசிவாயம் கூறினார். இரத்தினகோபாலுக்கு மகிழ்ச்சியென்ற மகிழ்ச்சியும், அந்தப் பிள்ளைகளுக்கு இப்படியான செயற்பாடென்றால் விருப்பம் என்ற நம்பிக்கையும்.

நமசிவாயத்திடம் அவ்வூர்க் கோவில் பரிபாலனசபையினர் படையெடுத்து வந்தனர். காணி விடுவிக்கப்பட்ட மகிழ்சியைப் பகிர்ந்து கொண்டனர். கோவில் தல விருட்சத்துடன் ஒரு அற்புதமான, அருள் பாலிக்கின்ற கோவிலாக இருந்த போதிலும், அங்கு ஒரு தெப்பக் குளம் இல்லாத குறையை எடுத்துச் சொல்லினர். இவரது ஐந்து ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டமையும் தெய்வத்தின் அருள்தான் என்று எடுத்தியம்பினர். இலங்கையில் எந்தக் கோவிலிலும். இல்லாதவாறு தீர்த்த வளத்தைக் கொண்டதாக தமது கோவில் அமைய வேண்டும் என்ற தமது ஆசையை, இறையருளை நமசிவாத்திடம் வெளிப்படுத்தி நின்றனர்.

ஏற்கனவே வெளிநாட்டில் 50 மில்லியன் ரூபா வரை இக் கோவில் தீர்த்த தலம் அமைப்ப தற்கு பணம் சேகரிக்கப்பட்டு அனுப்பப்படுவதற்குத் தயார் நிலையிலுள்ளதை நமசிவாயத்திற்கு அறியத் தந்தனர். காணி தான் முக்கிய தேவையாக உள்ளது. நமசிவாயத்தின் 5 ஏக்கர் காணியையும், எண் கோணத்தில் தீர்த்தக் கேணி அமைக்கும் தமது திட்டத்திற்கு அன்பளிப்புச் செய்து உதவுமாறு மன்றாடி நின்றனர். எண் கோணத்தில் தீர்த்தக் கேணி அமைத்தால், இலங்கையில் என்ன? இந்தியாவிலும் இதுவே சிறப்பாகப் பேசப் படும் என்ற தமது வாதத்தையும் முன் வைத்தனர்.

நமசிவாயமும் வஞ்சகம் இல்லாமல், இரத்தினகோபால் "மாஸ்டர்" ஒரு இரண்டு பரப்புக் காணியை முன்பள்ளி அமைக்க வழங்குமாறு கேட்டதையும், தான் தனது பிள்ளைகளுடன் வெளிநாட்டில் தொடர்பு கொண்டு கேட்டு, ஒரு சாதகமான முடிவைத் தெரிவிப்பதாகவும் சொன்னதைத் தெரிவித்தார். வந்ததே கோபம் பரிபாலன சபைக்கு... அவர் இராசகோபால் எப்பவும் இப்பிடித்தான்... தாம் நீண்ட காலமாக இலக்கு வைத்திருந்த காணிக்கும் ஏதோ ஆப்பு வைக்கும் விதத்தில், நடந்து கொள்வதனைக் கண்டு வெகுண்டு எழுந்தனர். அந்த சதுர வடிவான 5 ஏக்கரிலும் ஒரு ஒன்றிரண்டு பரப்பை வெட்டி எடுத்தால் காணியின் அழகே கெட்டுப் போய்விடும் என்றும், வெளி நாட்டிலிருக்கும். நமசிவாயத்தின் பிள்ளைகளுடன் தொடர்பு கொண்டு. அவர்களது அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் பொறுப்பைத் தம்மிடம் விட்டுவிடும்படி நமசிவாயத்திடம் தெரிவித்தனர்

திருஞானமும் நாட்டில் நிற்பது நல்ல தாய்ப் போயிற்று. பரிபாலன சபை திருஞானத்திடம் தூது சென்றனர். எப்பவும் திருஞானத்தின் சொல்லுக்கு அந்த "ஏரியாவில்" ஒரு மதிப்பு இருப்பது அனைவரும் அறிந்ததொன்றே.... எண் கோண வடிவில் எம் பெருமானுக்கும், பெரு மாட்டிக்கும் ஒரு தெப்பக் குளத்தை அமைத்து அதில் தீர்த்தம் ஆடும் நிகழ்வு ஒப்பேற திரு ஞானத்தின் உதவியை வேண்டி நின்றனர். திருஞானத்தின் தந்தை அக் கோவிலுக்கு செய்த தொண்டுகளையும், திருவாசகம் ஓதுவதையும் எடுத்துக் கூறினர். பின்னர் எண்கோண தெப்பக் குளத்தை ஒட்டி, ஒரு திருவாசக மணி மண்ட பத்தை திருஞானத்தின் "தந்தையின் பெயரில்," கட்டிப் பெயர் பொறிப்பது என்ற தீர்மானத்தின் அடிப்படையில், திருஞானம் முழு மூச்சாக திருப் பணியில் தம்மை அர்ப்பணித்து, நமசிவாயத்தின் பிள்ளைகளைச் சந்திப்பதற்காக லண்டனுக்கும். பிரான்சிற்கும் புறப்படுவதற்கான ஏற்பாடுகளில் மிக மும்முரமாக ஈடுபட்டுள்ளார்.


தெப்பக் குளத்திற்குக் கால்கோள் விழா நடத்தும் நிகழ்வில், தமது மகன் அண்மையி லனுப்பிய சிங்கப்பூர் சங்கிலியையும், கைச் "செயினையும்," அணிந்து எவ்வாறு மிடுக்காகத் திரிவது என்ற கனவிலும், நினைவிலும் பரம்பரைப் பரிபாலனசபைத் தலைவர் திரிலோகமூர்த்தியும்,

இரத்தினகோபாலும், சக்கரநாற்காலி மக்களும், கண் தெரியாத அப்பெண்ணும் இன்னும் இருட்டில் ஒரு எதிர்பார்ப்புடன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்குள் சிறைப்பட்ட சில நாட்கள்



முருகபூபதி

மனிதன் எதனுடனும் போராடி வெற்றி கொள்ள முடியும். ஆனால் இயற்கையுடன் போராட முடியுமா? பஞ்சபூதங்கள் எனப்படும் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்பன மக்களுக்கு இன்றியமையாதவைதான்.

ஆனால் - அவற்றுக்கும் கோபம் வந்தால் அந்தக்கோபம் பொல்லாதது. அழிக்கும் சக்தியைக் கொண்டது.

பூமாதேவி பொறுமை காப்பாள் என்று தான் ஐதீகங்கள் சொல்கின்றன. ஆனால் நில நடுக்கம் பூமி அதிர்ச்சி, பூகம்பம் வந்தால்...?

நீர்வீழ்ச்சி பார்க்க அழகானதுதான். அங்கு உற்பத்தியாகி நதியாகி ஓடுவதையும் பார்த்து பரவசப்படலாம். அதன் நீர்மட்டம் அதிகரித்தால் பிறகுவெள்ளக்காட்டையும் அதன் அழிவுகளையும் பார்க்கலாம். அதே போன்றதுதான் கடலும். கடலில் கொந்தளிப்பு வந்து சுனாமியும் கருக்கொண்டால் ஆழிப் பேரலையின் அவலத்தை காணலாம்.

தென்றல் வீசினால் இதமாக இருக்கும். அதுவே புயலாக சூறாவளியாக மாறினால்...?

நெருப்பும் அத்தகையதே. காட்டுத்தீ பரவினால்?

நிலத்திலிருந்து தண்ணீரை உறிஞ்சி மேகமாகத் தேக்கிவைத்து மழையை ஆகாயம் தந்தால்அது நிலத்தை குளிர்விக்கும். தொடர்ச்சி யாக அடைமழை பொழிந்தால் என்னவாகும்? பயிர் பச்சைகள் சேதமாகும். வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மக்கள் நிர்க்கதியாவார்கள்.

பஞ்சபூதங்கள் பொருத்தமான பெயர் தான். பூதம் என்றாலே பயத்தின் அடையாளம்.

ஏன்... எல்லோருக்கும் தெரிந்ததையே மீண்டும் சொல்கிறேன் என்று வாசகர்கள் கேட்கக்கூடும்.

கடந்த ஜனவரி 13 ஆம் திகதி முதல் இதனை எழுதிக்கொண்டிருக்கும் ஜனவரி 17 ஆம் திகதி வரையில் நான் வீட்டுக்குள் சிறைப் பட்டேன். என்னைப்போல் இந்தக்கண்டத்தில் ஏராளமானவர்கள் -எண்ணிலடங்காதவர்கள் வீட்டினுள்ளே சிறைப்பட்டுத்தான் போனோம்.

ஏன்? சூரியபகவானின் கருணைதான். தற்பொழுது இங்கே கோடை காலம். கோடை கால விடுமுறையில் வெளியே சென்றவர்கள் கொடுத்துவைத்தவர்கள். மேற்கு அவுஸ்திரேலியா மாநிலத்தில் காட்டுத்தீ. அதன் பாதிப்பு அயல் மாநிலங்களையும் தாக்கியது.

அனைத்து மாநிலங்களும் சுட்டெரிக்கும் வெய்யிலில் குளித்தன. காய்ந்தன. தமது குழந்தைகளை காரினுள்விட்டுவிட்டு ஷொப்பிங் சென்றவர்கள் பொலிசாரினால் தண்டிக்கப் பட்டனர். எவராவது சிகரட்டை பற்றவைத்து விட்டு அதனைஅணைக்காமல் விட்டெறிகிறார் களா என்பதை முக்கியமான இடங்களில் மறை வாக பொறுத்தப்பட்ட கமராக்கள் கண்காணிக் கின்றன.

யாருக்காக நாம் தைப்பொங்கல் பண்டிகையை கொண்டாடுகிறோமோ அவரே எங்களை வஞ்சிக்கின்றார். சூரியபகவானுக்காக இலங்கை இந்தியாவில் வீட்டு வாசலில் அல்ல வயல் வெளிகளில் பொங்கல் வைத்து கொண்டாட முடியும்.

ஆனால்-அவுஸ்திரேலியா கண்டத் தில் முடியாது. அவ்வாறு பொங்கல் வைக்க முனைந்தால் பொலிஸ் நிலையத்தில் அல்லது சிறையில் பொங்கல் சாப்பிட வேண்டி வரும்.

இந்த நாட்டில் தமிழர்கள் ஒருவருக் கொருவர் தைப்பொங்கல் வாழ்த்துக்கூறிய அதே சமயம் தாம் அனுபவித்த கோடை வெப்பத்தின் கொடுமையையும் பகிர்ந்து கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சியாக சில நாட்கள் வெளியே செல்லாமல் வீட்டினுள்ளே அடைபட்டுக் கிடந்தேன். இரவு இருட்டுப்படுவதற்கு இரவு 9 மணியும் ஆகிவிடும். ருஷ்யாவில் கோடை காலத்தை வெண்ணிற இரவுகள் என வர்ணிப் பார்கள்.

லெனின் கிராட் நகரம் 24 மணி நேரமும் வெய்யில் வெளிச்சத்தில் இருக்குமாம். சோவியத் எழுத்தாளர் தஸ்தயேவ்ஸ்கி வெண்ணிற இரவு கள் என்ற நாவலையே எழுதியிருக்கிறார்.

சுட்டெரிக்கும்வெய்யிலினால் காட்டுத் தீ பரவுகிறது இந்த புல்வெளிதேசத்தில். யூகலிப்டஸ் மரங்கள் செறிந்துவாழும் இந்தக்கண்டத்தின் காடுகளை தீயின் நாக்குகள் தீண்டினால் அங்கு வாழும் கோலா, கங்காரு, உட்பட பல உயிரினங்களும் நெருப்பில் கருகி அழிந்து விடு கின்றன. தீயணைப்பு படையினரின் விடுமுறை கள் ரத்துச்செய்யப்பட்டு அவர்கள் எப்பொழுதும் உஷார் நிலையில் தயாராக இருக்கின்றனர்.

வெய்யிலின் உக்கிரத்தினால் வீதி களில் சமிக்ஞை விளக்குகளும் இயங்காமல் போய் விடுகிறது. பொலிசார் அவ்வாறு நடக்கும் பிரதானமான சந்திகளில் நின்று போக்குவரத்தைசீர் செய்கின்றனர். இல்லை யேல் விபத்துக்கள் பெருகி மேலும் ஒரு தலை யிடி அரசுக்கும் மக்களுக்கும் வந்துவிடும்.

மிருகக்காட்சி சாலைகள், சரணால யங்களில் இருக்கும் விலங்குகள், பறவைகள், உயிரினங்கள் கோடை வெப்பத்தினால் பாதிக் கப்படாமல் இருப்பதற்கான துரித நடவடிக்கை கள் எடுக்கப்படுகின்றன.

இயற்கை எவ்வாறெல்லாம் இந்த நாட்டு மக்களை சோதிக்கிறது என்பதற்கான காட்சியையே இங்கு பதிவு செய்தேன்.

வீட்டினுள்ளே முடங்கியிருந்த எனக்கு பேச்சுத்துணைக்கு மனைவி இருந்தபோதிலும், அவ்வப் பொழுது அவளும் வெக்கை தாங்க முடியாமல் சினந்துகொண்டே இருந்தாள். வெய்யில் ஏறுவதற்கு முன்பே அதிகாலை எழுந்து அன்றாட சமையல் வேலைகளை முடித்துவிட்டு குளிர்சாதனத்தின் முன்னால் அமர்ந்துவிடுகிறாள்.

எனக்கோ தொலைக்காட்சியும் கணினியும் இணையத்தளங்களும் புத்தகங் களும்தான் துணை.

தொடர்ந்து ஆசனத்தில் அமர்ந்திருந் தால் ஆயுள் குறையும் என்று வேறு சொல்லப் படுகிறது. அதற்காக அவ்வப்பொழுது வீட்டி னுள்ளே நடமாடினேன்.

ஆயுள் குறையும் என்ற கவலை ஏன் வருகிறது ? போக வேண்டியநேரத்தில் போய் விட வேண்டியதுதானே? என்றும் ஞானம் பிறக்கிறது.

கோடை வெப்பம் கொடுமைதான். ஆனால் எனக்கு அதில் கிடைத்த நன்மையை நினைத்து ஆறுதல்பட்டேன்.

நிறைய வாசித்தேன். நிறைய எழுதினேன். எல்லாம் நீண்ட நேரம் அமர்ந்துதான். ஆயுளைப் பற்றி எனக்கென்ன கவலை. இயற்கைக்கு எம்மை தயார் செய்துகொண்டு அதனோடு இணைந்து வாழப்பழகுகின்றோம். வேறு என்ன தான் சொல்வது?

இதனை எழுதிக்கொண்டிருக்கும் பொழுது தொலைக்காட்சி செய்தியை பார்த்து விட்டு ஓடி வந்த மனைவி சொல்கிறாள்:-

"இன்றும் வெய்யில் அதிகமாம் 42




டிகிரிக்கும் மேல் போகும் போலத்தெரிகிறது. உங்கள் முக்கியமான ஆவணங்களை அத்தியா வசிய மருந்துகளை ஒரு பேக்கில் வைத்து எதற்கும் தயார் நிலையில் இருங்கள்."

எதற்கு என்று கேட்கிறீர்களா? காட்டுத்தீ பரவினால் வெளியே ஓடித்தப்புவ தற்குத் தான். எங்கள் ஊரிலும் புல்வெளிகள் புதர்கள் யூகலிப்ட்ஸ் மரங்கள் செறிந்திருக்கின்றன.

ஆதனால் - வெய்யில் அதிகரிக்கும் முன்னர் காலைவேளையிலேயே இந்த ஆக்கத்தை எழுதி உடனடியாக ஜீவநதி வாசகர்களுக்கு அனுப்பிவிடுகிறேன். அடுத்து சொல்லமறந்த கதை கள் எழுதுவதற்காகவாவது எனது கணினியை நான் காப்பாற்றிக்கொள்ள வேண்டாமா?

வெளியே ஓடினால் கணினியுடனும் ஓடுவேன்.

எப்படி இருக்கிறது எங்கள் வாழ்க்கை? ●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசான்களுக்கு ஒரு அஞ்சல்!

வெற்றுப்பதர்கள்
வெற்றி பெறவே
நித்தம் உழைக்கும்
நீதவான்கள் நீங்கள்
வெறும் கற்கள் தன்னை
சிற்பமாக்கும்..
நுட்பம் தெரிந்த மேதைகள்
அற்பப் புகழில்
ஆணவம் கொள்ளா
அறிவு விழுதின்
ஆலமரங்கள்
விட்டில் பூச்சி
விளக்கில் விழும்
தொட்டில் பழக்கம்
தொலைப்பவர்கள்.
நல்லவை கெட்டவை
நாலுமறிந்து நாங்கள்
நன்மை செய்ய
நாடுவதும் நீங்கள்தான்
இருட்டுப்பாதையின்
ஒளி விளக்காய்
எங்கள் இதயம் முழுக்க
ஒளி தந்தீர்...

எத்தனை எத்தனை
உத்தமம் கொண்ட
உந்நத கடமை இது
ஆசான்களே....
பின்னர் ஏன்?
கதிரைக்காக
கலவரம் செய்கிறீர்கள்
நீங்கள்
கலகம் செய்கிறீர்கள்
பிச்சை அரசியலின்
பின்னால் சென்று
போஸ்டர் ஒட்டும்
போக்கிரிகளாக மாறியது ஏன்?
கள்ள ஓட்டு போடச்சொல்லி
மாணவனை பழக்கும்
காவாலித்தனத்தை
கற்றுத்தந்தது
கல்வி அமைச்சா?
தேசத்தின் கண்களான-நீங்கள்
புண்களாகிய செய்தி கேட்டு



அழுகிறது எங்கள் தேசம்
ஒன்று நிச்சயம்
இலவசக்கல்வியை
இல்லாது ஒழித்த
உங்கள் பணமோகம்
அழியும் ஒரு நாளில்

காறித்துப்பும் மாணவர்கள்
முன்னால் காணாமல் போய் விடும்
உங்கள் கர்வம்
வஞ்சம் கொண்ட
நெஞ்சம் கொண்ட
வாத்தி சிலரின்
வண்டவாளம்
எங்களூரில் தெரிந்தது தான்.
அண்டப் புழுகன்
ஒருவன் பின்னால்
இவர்கள் திரிந்து
மதிப்பு அழிந்ததுதான்.
ஓட்டை விழுந்த
உங்கள் வாழ்வை
முதலில் ஒட்டுங்கள்
ஆட்டைப்போல
மாட்டைப்போல
என்று பிறகு திட்டுங்கள்.

நாச்சியாதீவு பர்வீன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மா.செல்வதாஸ்**



# தமிழ் திரைப்படப் பாடலாசிரியர்கள்...

### 7) சுரதா

இராஜகோபாலன் என்னும் இயற்பெயர் கொண்ட சுரதா 1921 இல் தஞ்சைமாவட்டம் பழையனூரில் பிறந்தார். பாரதிதாசன் மீது கொண்ட பற்றுதலால் சுப்புரத்தினதாசன் என தன் பெயரை மாற்றி "சுரதா" என்று சுருக்கிக் கொண்டார். உவமைகள் தருவதில் தனிப்புகழை ஈட்டி "உவமைக் கவிஞர்" என்ற பட்டத்தினைப் பெற்றார். 1951 இல் "என் தங்கை" படத்தில் "ஆடும் ஊஞ்சலைப் . போலே அலையே ஆடுதே" என்ற முதற் பாடலை எழுதி தனது திரைப்பயணத்தை ஆரம்பித்தார்.

உவமைகளைத் தர்க்கித்தல் முறையில் கையாண்டு தனக்கெனவொரு தனித்துவப் பாணியை உருவாக்கியவர். "விண்ணுக்கு மேலாடை பருவமழைமேகம்" என்ற பாடலில் (படம் - நாணல்) "பத்துக்கு மேலாடை பதி னொன்றே" என்றவாறு தர்க்கப் பொருத்தமான உவமையினை அற்புதமாகக் கையாண்டுள்ளார். அரிய செய்திகளை உவமையாக்குவதில் கைதேர்ந்தவராகக் காணப்படுகின்றார். "சுடர் மின்னல் கண்டு தாழை மலர்வது போலே" (படம் - நாடோடி மன்னன், பாடல் - கண்ணில் வந்து மின்னல் போல்) என்ற வரியில் இடம்பெறும் உவமை இலக்கிய உலகிற்கு வியப்பளித்த போது கலித்தொகையிலிருந்தே பிரதி செய்யப்பட்ட தாக நேர்மையோடு குறிப்பிட்டார்.

உவமைகொண்டு காதல் செய்வோரின் உள்ளத்துணர்வுகளை இரசனையோடு தனது பாடலில் வெளிப்படுத்தியுள்ளார்.

**"அமுதும் தேனும் எதற்கு நீ**
**அருகினில் இருக்கையிலே எனக்கு**
**அருவி தரும் குளிர் நீர் – அன்பே**
**இனிமேல் அதுவும் சுடுநீராகும் நமக்கு**
**நிழலின் நிழலோ உன் வதனம்**
**புதுநிலைக்கண்ணாடியோ மின்னும் உன் கன்னம்"**

(படம் - தை பிறந்தால் வழி பிறக்கும்)

மனித வாழ்வியலின் நிலையாமை கருத்துக்களை உள்ளடக்கி தத்துவத்தின் மின்னல் வெட்ட வித்துவமழை பொழிந்த பெருமையும் சுரதாவுக்கு உண்டு.

**"ஆடியடங்கும் வாழ்க்கையடா**
**ஆறடி நிலமே சொந்தமடா**
**முதலில் நமக்கெல்லாம் தொட்டிலடா**
**கண்மூடினால் காலில்லாக் கட்டிலடா"**

(படம் - நீர்க்குமிழி)

செல்வங்களில் மேலான செல்வம் பிள்ளைச் செல்வம்! அந்த செல்வத்தை தாயொருத்தி கொஞ்சிடும் அழகை; சோபனத் தமிழில் ஆவணப்படுத்துகிறார்.

**மண்ணுக்கு மரம் பாரமா?**
**மரத்துக்கு இலை பாரமா?**
**கொடிக்கு காய் பாரமா?**
**பெற்றெடுத்த குழந்தை தாய்க்கு பாரமா?**

(படம் - தை பிறந்தல் வழி பிறக்கும்)

திரையிசைக்கு வரை புகழ் சேர்த்த சுரதா 20.06.2006 இல் இவ்வுலக வாழ்வினை நீத்தார். எனினும் உவமைகள் உள்ளவரை உலகிலே வாழ்ந்து கொண்டு தான் இருப்பார்.

### 8) புலமைப் பித்தன்

தமிழ்த் திரைப்பட பாடலாசிரியரான புலமைப்பித்தன் 1953 இல் கோவை மாவட்டத் தில் "பள்ளப் பாளையம்" என்னும் ஊரிலே பிறந்தார். இராமசாமி என்ற இயற் பெயரை "புலமைப்பித்தன்" என மாற்றி "நான் யார் நான் யார்" என வினாவியவாறு திரையுலகில் அறிமுகமானார். தமிழச்சிறுகதை மன்னன் புதுமைப்பித்தனின் பெயரோடு சற்றே பொருந்தியமைந்ததால் பொதுசனவெளியில் குழம்பிய நிலையொன்றினை அவதானிக்க முடிந்தது. இதனை சுந்தரராமசாமி தனது கட்டுரை ஒன்றிற் கூட எள்ளலாகப் பதிவு செய்துள்ளார். "ஆயிரம் நிலவே வா" , "சிரித்து வாழ வேண்டும்", "பூமழை தூவி வசந்தங்கள்" என்றவாறான எண்ணற்ற பாடல்களை தமிழுலகிற்கு வழங்கியுள்ளார். எம்.ஜி.ஆர் வழி பாட்டிற்கு பாதை அமைத்த பாடலாசிரியர்களில் இரண்டாவது இடத்திலே புலமைப்பித்தனை (முதலிடம் - வாலி) வைத்து நோக்க முடியும்.

**"நேருக்கு நேராய் வரட்டும்**
**நெஞ்சிற் துணிவிருந்தால்**
**என் கேள்விக்குப் பதிலைத் தரட்டும்**
**நேர்மைத் திறமிருந்தால்"**

(படம் - மீனவ நண்பன்)

புலமைப்பித்தனின் காதற் பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது ... யாழ்ப்பாணம்

வசீகரமானவை. அழகிய சொற்களைக் கோர்த்து காதலை காற்றலையில் தவழ விட்டுள்ளார். "இதயக்கனி" திரைப்படத்தில் இடம் பெறும் "இன்பமோ உந்தன் பேர்" பாடலுக்கு ஜீவிதத் தன்மை இருப்பதை எவருமே மறுக்க முடியாது.

"சர்க்கரை பந்தல் நான் தேன் மழை சிந்தவா
சந்தன மேடையும் இங்கே சாகச நாடகம் எங்கே?
தேனொழுகு பால்தரும் செவ்விளநீர்களை
ஓரிரு வாழைகள் தாங்கும்
தேவதை போல் எழில் மேவிட நீ வர
நாளும் என் மனம் எங்கும்"

என்னும் வரிகளை வானொலியில் கேட்கும் போதெல்லாம் காதற் பரவச நிலையொன்று உணர்வுகளில் பாசறை அமைக்கிறது.

தொட்டிலில் உறங்கும் தன் குழந்தையை தாயொருத்தி தாலாட்டுவது போலப் பாடலை அமைத்து அத் தலாட்டுக்கு ஊடாக தத்துவ முத்துக் களை பதித்துள்ளமை சிறப்பானது.


புலமைப்பித்தன்

"இந்தப் பச்சைக்கிளிக்கொரு செவ்வந்திப் பூவைத்
தொட்டிலில் கட்டி வைத்தேன்
அதில் பட்டுத்துகிலுடன் அன்னச் சிறகினை
மெல்லென இட்டு வைத்தேன்..."

(படம் - நீதிக்குத் தலை வணங்கு)

இவ்வாறான பாடல்களின் சொந்தக்காரனான "புலமைப்பித்தன்" சமகாலப் பாடலாசிரியர்களுக்கு சிறந்த கையேடு என்பதில் ஐயமில்லை.

## 9) மு.மேத்தா

அற்புதமான படைப்புக்களால் எல்லோர் மனதையும் கவர்ந்த மு.மேத்தா 1945 செப்ரெம்பர் 5 ம் திகதி பெரிய குளம் என்னும் ஊரில் பிறந்தார். புதுக்கவிதை இயக்கத்தில் இணைந்து போராட்ட வீச்சுமிகு கவிதைகளைப் புனைந்தார். வானம்பாடிக்குழுமத்தில் ஒருவராக இருந்த போதிலும், பிற்காலத்தில் தீவிர இலக்கியவாதிகளால் ஒதுக்கப்பட்டுள்ளார்.

"காத்து வீசுது புதுக்காத்து வீசுது – இங்கே
கதிர்கள் கூட வயல் வரப்பில் காதல் பேசுது"

என்ற முதற்பாடலோடு திரையிசைப் பயணத்தை ஆரம்பித்தார். திரையிசைப் பாடற் கட்டமைப்பின் சூட்சுமங்களை முழுமையாகப் புரிந்து கொள்ளாமையால் வணிக வெற்றியை நிரந்தரமாக சொந்தமாக்க இயலவில்லை.

"தாஜ்மஹாலின் காதிலே இராமகாதை கூறலாம்
மாறும் இந்த பூமியில் மதங்கள் ஒன்று சேரலாம்
பாதி நீயும் பாதி நானும் ஜோதியாக இணைந்திட"

(படம் - வேலைக்காரன்)


சுரதா

முந்தானை மூடும் ராணி செல்வாக்கிலே
என் காதல் கண்கள் போகும் பல்லாக்கிலே
தேனோடை ஓரமே நீராடும் நேரமே
புல்லாங்குழல் தள்ளாடுமே

(படம் - இரட்டைவால் குருவி)

நீ போகும் பாதை என் பூங்காவனம்
நீ பார்க்கும் பார்வை என் பிருந்தாவனம்
ஊரெங்கும் உன் ராக ஊர் கோலமோ
என் வீடு வராமல் ஏன் போகுமோ"

(படம் - உதய கீதம்)

போன்ற பாடல் வரிகளில் மென்மையான காதல் உணர்வினை ரசனைக்கு விருந்தாக்கும் வகையில் எடுத்தாண்டுள்ளார். விழிப்புலன் இழந்த ஒருவனது உணர்வுகளை யாவரும் உள்வாங்கும் வகையில் அழகுற எழுதியுள்ளார்.

"நான் காணும் உலகங்கள் யார் காணக் கூடும்
சொல்வது யார் சொல் வெண் பனித்துளியே
மெல்லெனவே சொல் பசும் புல்வெளியே
என்னைக் காணும் அன்னை பூமி
உன்னைக் காணவே
வேண்டும் இன்னுமோர் ஜென்மம்"

(படம் - காசி)

நகரத்து மனிதர்களின் அவசர வாழ்வையும் அவ்வாழ்வுக்குள் அங்கமாகி இலாபம் தேடும் அரசியலையும் "வேலைக்காரன்" திரைப்படப் பாடலில் பதிவு செய்துள்ளார்.

"சிங்காரமா ஊரு – இது
சென்னை என்னு பேரு
ஊரைச் சுத்தி ஓடுதய்யா கூவம் ஆறு
கட்சிகளும் வாங்கி இங்கே
கட்டிடங்கள் வைச்சிருக்கு
கஷ்ரப்படும் ஏழைக்கெல்லாம்
கட்டாந்தரை தானிருக்கும்"

"கண்ணீர்ப்பூக்கள்" தொகுப்பினூடாக மாபெரும் வாசகவட்டமொன்றை அடைந்த மேத்தாவால் திரைப்பட பாடலாசிரியராக அதிக பட்ச உயரத்தினை அடைய முடியவில்லை. திரைப்படத்திலே தோன்றி நடிகர் விஜய்க்கு "அழகியதமிழ்மகன்" என்ற பட்டத்தை வழங்கி சுயகௌரவத்தை குறைத்துக் கொண்டார். எண்ணிக்கையில் அதிகமில்லாவிட்டாலும் தரமான பாடல்களைத் தந்துள்ளார். "திரைப் படத்துறையில் தீப்பந்தமாக இல்லாவிட்டாலும் ஒரு சிறு தீபமாகவேனும் நான் பிரகாசித்துக் கொண்டிருக்கிறேன்" என்று அவரே ஒப்புக் கொள்கிறார்.


மேத்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.சு.முரளிதரன்

# விவாத மேடை

"ஜீவநதி" விவாதமேடையில் எதிர்வினை அவாவும் கேள்விக் கணைகளுக்கு ஆரோக்கிய மான கருத்துப் பரிமாற்றத்தினை நிகழ்த்திய திரு.அ.பௌநந்தி, திரு.கி.நடராஜா ஆகியோருக்கு மனமார்ந்த நன்றிகள். சிற்றிதழ்க் குழுமங்கள் குழாயடிச்சண்டையில் குதூகலிக்கும் தமிழ்ச் சூழலில், மாற்றுக் கருத்தினை நாகரிகமான முறையிலே "விவாதமேடையில்" வெளிப்படுத்த "ஜீவநதி" இனி வரும் காலங்களிலும் களம் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

• முதலாம் வேற்றுமைக்கு உருபோ சொல்லுருபோ இல்லையென தர்க்க ரீதியான சான்றுகளோடு இருவரும் நிறுவியுள்ளனர். இனி வரும் காலங் களில் இலக்கணம் கற்பிக்கும் தமிழாசிரியர்கள் மாணவர்களைக் குழப்பாது முதலாம் வேற்றுமைக்கு சொல்லுருபுகள் இல்லையெனக் கற்பித்தலே ஏற்புடையது.

• தரம் 11 தமிழ்மொழியும் இலக்கணமும் இலவசப்பாடநூல் "அட்டும்" என்னும் வியங்கோள் வினை விகுதி வேண்டுபொருளில் வருவதில்லை என்று குறிப்பிடுகின்றது. எம்.ஏ.நுஃமான் எழுதிய "அடிப்படைத்தமிழ் இலக்கணம்" நூலின்(மீள் பதிப்பு -2007) 103 ம் பக்கத்திலும் "அட்டும் வேண்டுதல் பொருளில் வருவதில்லை. வாழ்த்து, வெறுப்பு, விருப்பு ஆகிய பொருள்களிலேயே வருகின்றது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் திரு.அ.பௌநந்தியும், திரு.கி.நடராஜாவும் அக்கருத்துக்களை அடியோடு மறுத்து மாற்றுக் கருத்தினை திறம்பட முன்வைத்தமை வரவேற்புக் குரியது. எனவே "அட்டும்" என்ற வியங்கோள் வினை வேண்டுதல் பொருளில் அமையும் எனக் கற்பித்தலே பொருத்தமானது.

• காலவோட்டத்தில் மொழியில் நிகழும் மாற்றம் தவிர்க்க இயலாதது. எனினும் மொழி நெகிழ்வு என்ற அடிப்படையினைப் பின்புலமாகக் கொண்ட கட்டிடம், கலாச்சாரம், பிரச்சாரம், நாகரிகம் என்ற வாறான தவறான மொழிக் கையாள்கை ஏற்புடை தல்ல என திரு.அ.பௌநந்தி முன் வைக்கும் கருத் தினை தமிழுலகம் வரவேற்க வேண்டும். க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி "கருப்பு" என்பது வறுமையினையும், "கறுப்பு" என்பது நிறத்தையும் குறிக்கும் என உள்வாங்கியிருப்பின் இருவழக்கும் ஒன்றெனக் கருதும் விபத்து நிகழ்ந்திருக்காது. மேலும் மங்கலம் என்பதற்கு "மங்கல காரியத்துக்கு தடை சொல்லக் கூடாது" என்ற உதாரணமும், மங்களம் என்பதற்கு "நஷ்டம் வந்தால் வியாபாரத்திற்கு மங்களம் பாடி விட வேண்டியது தான்" என்ற உதாரணமும் வழங்கும் அகராதி இரு வழக்கினையும் ஒன்றென ஏற்றல் முரணானது.

வட சொற்களையோ, பிற மொழிச் சொற்களையோ ஒலி வடிவத்திற்கு ஏற்ப அமைப்பதில் தவறில்லை என்னும் திரு கி. நடராஜாவின் கருத்தினையும் ஏற்கலாம். அதேவேளையில் கிருஷ்ணன், கிருஸ்ணன் என்று இரு வழக்கினைக் கையாள்வதையே நாம் எதிர்க்கிறோம். கருமை என்ற அர்த்தத் தோடு பொருந்தும் வட எழுத்தே ஏற்புடையது.

• நந்திக்கலம்பகப் பாடலான "ஓடுகின்ற மேகங்காள் ஓடாத தேரில் வெறும்" என்பதில் "தேரில் வெறும்" என்பதி லுள்ள "ல்" என்ற மெய்யெழுத்தினை நீக்கி அலகிட்டால் தளை தட்டாது என்ற கருத்தோடு உடன்படலாம். எனினும் "வெண் பாவை" யாப்பிலக்கண ஆசிரியர்கள் "அந்தணப் பா" என்று சுட்டி யமையும் அவதானத்திற்குரியது. வெண்பாவில் விதிகள் நூறுவீதம் அனுசரிக்கப்பட்டிருக்கும். சமரசங் களுக்கு இடமில்லை. இந்நிலையில் நோக்கும் போது அந்தணப்பாவின் புனிதம் கேள்விக்குள்ளாகி விடுகிறது. ஆனாலும் தவிர்க்க முடியாத சூழலில் ஒற்று நீக்கிய அலகிடலே ஒரே தெரிவாக உள்ளதால் அக்கருத்தோடு உடன் படுவோம்.

• காரண இடுகுறிப் பெயர் குறித்த விளக்கத்தில் எனது ஆசிரியர் திரு. கி.நடராஜாவின் கருத்தே பொருத்தமானதாகத் தோன்றுகின்றது. நாற்காலி, மண்வெட்டி என்பனவற்றை காரணச் சிறப்புப் பெயரெனக் கொள்ளலாம் என்பதே அவரது நிலைப்பாடாகும். முரண்பாடுகளற்ற முழுமை யான கருத்தாகவும் காணப்படுகிறது.

தமிழிலக்கணகாரர் பறவையைக் காரணப்பெயர் எனவும், நாற்காலியைக் காரண இடுகுறிப்பெயர் எனவும் சுட்டியபோதுதான் இடுகுறி என்ற கருத்தியல் முரண்பாடானது. "நாற் காலியைக் கொண்டு வாருங்கள் என்று கூறினால் காரணப்பெயராக எண்ணி எவரும் நான்கு கால் களையுடைய ஆடு, மாடு, நாய், மேசை போன்ற வற்றைக் கொண்டு வருவதில்லை" என்ற திரு.அ.பௌநந்தியின் வாதம் "பறவை" என்னும் காரணப்பெயருக்கும் பொருந்துமே! "பறவையைக் கறி சமைத்து வா" என்றால் பறக்கும் தன்மை யுள்ள விமானம், பட்டம், காகிதம் போன்றவற்றைச் சமைப்பதில்லையே?" எனவே பறவையும் அவரது வாதப்படி காரண இடுகுறியாக அல்லவா அமைய வேண்டும். காற்றாடி என்பது ஈழத்தில் விசிறியை யும், தமிழகத்தில் பட்டத்தினையும் நேர்ப் பொருளிலே சுட்டும் போது காரண இடுகுறியும் இடத்திற்கு இடம் மாறுபடப் போகிறது.

ஒரு பொருள் ஒரே நேரத்தில் ஒரு குறிப் பிட்ட பண்பினை உடையதாகவும், அற்றதாகவும் இருக்கமுடியாதென எதிர்மறைத் தத்துவம் வலியுறுத்துகின்றது. அளவையியல்(Logic) அடிப் படையிலேயே காரண இடுகுறிப் பெயரிலுள்ள இடுகுறி என்ற கருத்தியலை மறுத்துரைத்தேன். காரணப்பெயர் குறித்து ஆசிரியர் கி.நடராஜா முன் வைத்த வாதமே இலக்கணச் செழுமைக்கு உகந்ததென என் சிற்றறிவு தீர்மானிக்கின்றது. •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல்

## வி.ஜீவகுமாரன்

சந்திப்பு – பரணீ

வி.ஜீவகுமாரன் டென்மார்க்கில் வசித்துவரும் புலம்பெயர்ந்த ஈழத்து தலைசிறந்த படைப்பாளிகளில் ஒருவர். இவரது சிறுகதைகள் வாசகர்களின் உணர்வுகளை கிளறி சிந்தனைத்தெறிப்பை ஏற்படுத்தவல்லவை; உயிரோட்டமானவை. சிறந்த சிறுகதையாசிரியராக திகழ்வதோடு, சிறந்த நாவலாசிரியராகவும் திகழ்கின்றார் என்பதற்கு இவரது சங்கானைச் சண்டியன், கடவுச்சீட்டு ஆகிய நாவல்கள் சான்றாக அமைகின்றன. இலக்கிய முயற்சிகளுக்கு மிக்கஆதரவாக திகழும் ஜீவகுமாரன் அவர்களின் நேர்காணலை ஜீவநதி வாசகர்களுக்காக தருவதையிட்டு மகிழ்ச்சி அடைக்கின்றோம்.



1) புலம் பெயர்ந்து வாழும் நம்பிக்கைக்குரிய எழுத்தாளர்களுள் ஒருவராகக் குறிப்பிடப்படும் உங்களைப் பற்றியும் உங்கள் குடும்பப் பின்னணி பற்றியும் படைப்பிலக்கியத்தில் நீங்கள் ஈடுபாடு கொள்ளத் தொடங்கியமை பற்றியும் சுருக்கமாகக் கூறுவீர்களா?

நான் சாதாரண ஒரு நடுத்தர வர்க்க குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன். சராசரி தமிழ்ப் பெற்றோர்கள் போல கல்வி ஒன்றே குடும்ப நிலையை மேம்படுத்தும் என்ற நம்பிக்கையில் என் தந்தையார் நோய்வாய்ப்பட்ட போதும் கல்வி தடைப்படக் கூடாது என்ற பெருவிருப்பத்தில் என் தாயார் வட்டிக்கு வட்டி எடுத்து என்னையும் எனது மூன்று சகோதரர்களையும் கல்வி கற்பித்தார்கள்.

எனது ஆரம்பக் கல்வி சங்கானையில் சிவப்பிரகாச மகாவித்தியாலத்திலும் பின்னர் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் தொடர்ந்தது.

ஏழு வட்டாரங்களை கொண்ட சங்கானையில் ஒரே காலகட்டத்தில் 10 நாடக மன்றங்கள் இருந்தமையும்... மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வருடாவருடம் நடைபெறும் நாடகப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் எல்லாம் சேர்ந்து எனக்குள் ஒரு இலக்கிய ஆர்வத்தை வளர்த்துக் கொண்டு இருந்தது. இந்த நாடகங்களின் கதைக்கரு பொதுவாக பிரபலமான கதைகளில் இருந்து எடுத்து கையாளப்பட்டிருந்ததால் அதிக கதைகள் வாசிக்கத் தொடங்கினேன்.

தரப்படுத்தல் பல்கலைக்கழக அனுமதிக்கு தடையாக அமைந்த போது எனது பதினெட்டாவது வயதில் நானே தனியார் கல்வி நிறுவம் ஒன்றை நிறுவி நடாத்திக் கொண்டு இருந்தேன். கல்வி கற்பிக்கும் நேரம் அதிகாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை. பின்பு மாலை 4 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை. இடையில் உள்ள பகல்வேளையை பயன் உள்ளதாக மாற்றுவதற்காக கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் ஆங்கில இலக்கியம் கற்கத் தொடங்கினேன்.

அதுவரை இந்திய வாராந்த சஞ்சிகைகளில் முகம் புதைந்திருந்த எனக்கு இலக்கியத்தின் இன்னோர் பரிமாணம் தெரியத் தொடங்கியது அங்குதான். அதற்கு வித்திட்டவர்களில் ஒருவர் இன்று கனடா பல்கலைக்கழகத்தில் ஆசிய மொழிகளின் பொறுப்பாளராயும் "கனடா இயல் விருது" வழங்கும் குழுவில் அங்கம் வகிக்கும் திரு. செல்வா கனகநாயகம் ஆவார். மேலும் இலங்கையில் வசிக்கும் திரு. இராஜரட்ணம் அவர்கள் அந்தக் காலத்தில் என்னுடன் எனது இலக்கிய ஆர்வத்தை அதிகமாக பகிர்ந்து கொண்ட எனது வகுப்புத் தோழனாகிய கந்தையா சிறிகணேசன் தற்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஆங்கில விரிவுரையாளராக உள்ளார். மற்ற வகுப்பு தோழியான திருமதி ரேணுகா தனஸ்கந்தா அவுஸ்திரேலியால் இலக்கியப் பணியுடன் தன்னை இணைத்து பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்.

இலக்கியத்தின் மீதான பார்வை ஏற்பட்ட பொழுது அது சார்ந்த பல எழுத்தாளர்களின் படைப்புக்களை வாசிக்கத் தொடங்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1986ம் ஆண்டு அனலைதீவைச் சேர்ந்த என் சிறுவயதுத் தோழியும் யாழ். பல்கலைக் கழகத்தில் தமிழைச் சிறப்பு பாடமாக கற்ற கலா நிதியை திருமணம் செய்து அந்த ஆண்டே டென் மார்க் வந்து சேர்ந்தேன். இங்கு 1988ல் இரட்டைப் பெண்பிள்ளைகளுக்கு பெற்றோராகினோம்.

டென்மார்க் வந்த காலகட்டத்தில் டென்மார்க் அகதிகள் சங்கத்தின் ஆதரவில் "குயிலோசை" என்றொரு கையெழுத்துப் பிரதி ஒன்றை நடாத்தினேன். எனது மனைவியே முழுப் பக்கங்களையும் கையால் எழுதுவதுடன் என்னு டன் ஒரு இணையாசிரியர் போல செயல்பட்டு வந்தார். ஒவ்வொரு மாதமும் 80 பக்கங்கள் கொண்ட 300 புத்தகங்களை நாங்களே போட்டோ பிரதி எடுத்து புத்தகமாகக் கட்டி அனைத்து நகரங்களுக்கும் அனுப்பி வைப்போம்.

இம்முயற்சிக்கு டென்மார்க்கில் இருந்த பிரபல எழுத்தாளர்கள் அனைவரும் உறுதுணை யாக இருந்தார்கள். குறிப்பாக காலம் சென்ற முல்லையூரான், நிலக்கிளி பால மனோகரன், கே.எஸ்.துரை என்போரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

எனது 50வது வயதில் "யாவும் கற்பனை இல்லை" என்ற முதல் தொகுப்பை வெளியிட்டேன். பின்பு மக்கள் மக்களால் மக்களுக்காக, சங்கானைச் சண்டியன், எனது மனைவி டெனிஷ் மொழியில் எழுதிய தமிழ் மொழிபெயர்ப்பான இப்படி அன்புள்ள அம்மா, தொகுப்பு நூல்கள் வரிசையில் மெல்லத் தமிழ் இனித் துளிர்க்கும், முகங்கள் என வெளியீடுகள் தொடர்ந்தன.

இதில் கலாநிதியின் இப்படிக்கு அன்புள்ள அம்மா ஐந்து மொழிகளில் வெளியாகியது மிகவும் மகிழ்ச்சியான நிகழ்வு.

அவ்வாறே எனது நாவல்கள் அனைத் திற்கும் ஏதோ ஒரு விருதும் எனது 4 சிறுகதை களுக்குச் வெவ்வேறு காலகட்டங்களில் தகவம் அமைப்பின் விருதும் கிடைத்தமை எனக்கு ஒரு புத்துணர்ச்சியை அளித்தது.

**2) படைப்பிலக்கியத்தில் உங்களைச் செழுமைப்படுத்திக் கொள்ள உதவிய பிற இலக்கிய கர்த்தாக்களின் படைப்புகள் பற்றிக் குறிப்பிட முடியுமா?**

ஆங்கிலப் படைப்பாளிகளில் சேர்க்ஸ்பி யர், அன்ரன் செக்கோவ், டி.எச்.லோறனஸ் போன்றவர் களின் படைப்புகள்.

இந்திய படைப்புகளில் புதுமைப்பித்தன், ஜெயகாந்தன். இவர்களின் கதைகளில் பல "கட்டுடைப்புகளை"யும் வேகத்தையும் சந்தித்து இருக்கின்றேன். அவ்வாறே சுந்தர ராமசாமியின் "ஒரு புளிய மரத்தின் கதை"யில் இருந்த நிதானமும் கதைசொல்லும் பாங்கும் என்னை வெகுவாக கவர்ந்திருந்தது.

இலங்கைப்படைப்புகளில் அக்காலத் தில் மண் வாசனையை எனக்கு அறிமுகப்படுத்திய பொதுவான வீரகேசரிப் பிரசுரங்கள், குறிப்பாக செங்கை ஆழியானின் வாடைக்காற்று, காட்டாறு, இரவின் முடிவில். அவ்வாறே தற்பொழுது டென்மார்க்கில் வசிக்கும் திரு. பாலமனோகரனின் நிலக்கிளி, ஞானம் ஆசிரியர் திரு. ஞான சேகரனின் குருதிப்புனல். இவற்றை திரும்ப திரும்ப பல முறை வாசித்திருக்கின்றேன் என்று சொல்வதை விட படித்திருக்கின்றேன் எனக் குறிப்பிட விரும்புகின்றேன். அவர்கள் பாவித்த சின்ன சின்ன நுட்பங்கள் என்னை வெகுவாக கவர்ந்திருந்தன.

**3) உங்களுடைய எழுத்துக்களினூடாக எவற்றைச் சாதிக்க விரும்புகின்றீர்கள்?**

அவ்வாறு நினைக்கும் பொழுது எனது எழுத்துகள் பிரசாரமாக மாறிவிடும்.

ஜெயகாந்தனின் வீழ்ச்சி என்பது 70இன் பிற்பகுதியில் ரஷ்ய கம்யூனிஷ்டுகளின் பிரசாரமாக அவரின் எழுத்துக்கள் மாறியதுதான் காரணம் என்ற என்னளவிலான மதிப்பீடு இன்றும் என்னுள்ளேயே இருக்கிறது.

புதிய தேடல்கள், புதிய பரிமாணங்கள், புதிய கோணங்களில் வாழ்வியலைச் சொல்லும் கருவியாக பாவித்து நான் உட்பட்ட எனது சமு தாயத்தை பதிவு செய்து கொண்டிருக்கின்றேன்.

எப்பொழுதும் நான் சொல்வது போல ஒரு எழுத்தாளனின் ஜீவன் அவனது சொல்லுக் கும் எழுத்துக்கும் வாழ்வுக்கும் இடைவெளி இல்லாது இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்து எழுதிக் கொண்டிருக்கிறேன். அந்த உறுதி தரும் பலம் என் எழுத்துகளுக்கு சில அங்கீகாரங்களை தேடித்தருகிறது எனும் பொழுது மகிழ்ச்சியாக இருக்கிறது.

அதி குறைந்த பட்சம் வேண்டுமாயின் எனது எழுத்துகள் நல்ல ஒரு வாசகனை அல்லது இன்னோர் எழுத்தாளனை உருவாக்கும் என்றால் நிச்சயம் நான் மகிழ்ச்சி அடைவேன்.

**4)இலக்கியத்தின் மீதான உங்கள் ஈடுபாடு. உங்களின் தொழில் வாழ்க்கையில் தாக்கம் எதனையும் விளைவித்துள்ளதா?**

இதுவரை இல்லை.


எனது நிரந்தரத் தொழில் ஒரு நகர சபையின் குறிப்பிட்ட கணனிப்பகுதிக்கு பொறுப் பாய் இருப்பது. அடுத்த இரண்டு பகுதிநேரத் தொழில்களில் ஒன்று டென்மார்க் செஞ்சிலுவைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்திலும் அகதிகள் சங்கத்திலும் மொழி பெயர்ப்பாளராய் இருக்கின்றேன். மற்றது டென்மார்க் அரசநூலகத்தில் தமிழ்பகுதியின் ஆலோசகராகவும் கொள்முதல் செய்வபராயும் இருக்கின்றேன்.

முதலாவது கணனித்துறையில் மாற்றம் என்பது இயந்திரகதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும். கணனி உலகின் மாற்ற வேகத்திற்கு நான் பழகிக் கொண்டிருக்கின்றேன். மேலும் நான் எழுதுவதற்கோ அதனைத் செம்மைப் படுத்தவோ முழுக்க முழுக்க க்ணனியையே பயன்படுத்துகின்றேன்.



மொழிபெயர்ப்பு தொழிலில் நான் வாழ்வில் சந்தித்திராத அல்லது கேட்டிராத வாழ்வின் சில பக்கங்களை, மனிதர்களை, குறிப்பாக ஐரோப்பா வின் கலாசாரங்களை அறியக் கூடிய தாய் இருக்கும்.

தமிழ்பகுதி ஆலோகராக வருடம் ஒரு முறை இந்தியா, இலங்கை, சிங்கப்பூருக்கு செல்வதும் அங்கு அதிக புத்தகங்களை தரிசிக்க கூடிய வாய்ப்பையும் ஏற்படுத்தி தருகிறது.

இவை மூன்றும் எனக்கு உதவியே செய்கின்றது. நேரங்கள் சிலவேளை இறுக்கும். அதனை எனது நித்திரையில் இருந்து தானமாகப் பெறுகின்றேன் - ஓவர்ரைம் செய்வது போல. இலக்கியத்தைப் பொறுத்தவரை நேர நெருக்கடியால் குறைப்பிரவேசம் செய்யக் கூடாது என்பதில் 100 வீதம் உறுதியாக இருக்கின்றேன்.

**5) உங்களது சிறுகதைகள் ஏதோவொரு வகையில் வாசகனின் உணர்வில் பதிந்து மீண்டும் மீண்டும் உணர்வுகளை தட்டி எழுப்பி வாசகனை சிந்திக்க தூண்டுபவையாக உள்ளன. அவ்வாறான உணர்வோட்ட மான கதைகளை படைக்கும் போது நீங்கள் செயற்படும் விதம் பற்றி கூறுங்கள்?**

நான் சார்ந்த எனது சமுதாயத்தின் விமர்சனம் அல்லது பார்வை என்பதனை எந்தவித சமரசங்களும் இல்லாமல் எழுதுகின்றேன் என்பது தான் உண்மை. இந்த உண்மைக் கண்ணாடியில் வாசகர்கள் தங்கள் விம்பங்களைப் பார்க்கும் பொழுது அவர்களுக்கு தங்கள் வாழ்வியலைப் பார்ப்பது போலத் தோன்றலாம். அந்த வேளையில் குறிப்பிட்ட அந்தக் கதையில் வைக்கப்படும் கரு வாசகரின் உள்ளுணர்வைத் தட்டி எழுப்பலாம்.

"அவன் தோளில் கண்களை அரைவாசி மூடியபடி அவள் சாய்ந்தாள். வானத்தில் இரண்டு புறாக்கள் பறந்தன" என என்னால் சக எழுத்தாளர் பலரை விட திறமாக எழுத முடியும் என நான் சொல்வதுண்டு. ஆனால் அங்கு அந்தக் கணத்துடன் ஜீவகுமாரன் என்ற எழுத்துத் தொழிலாளியின் வேலை முடிந்து விடும். பஸ்ஸினினாலோ, றெயினினாலோ அல்லது வீட்டுத் திண்ணையினாலோ இருந்து எழும் பொழுது ஜீவகுமாரன் மறக்கடிக்கப்பட்டு விடுவார்.


பதிலாக படித்து முடிந்தாலும் சில மணியோ அல்லது சில காலமாவது அந்த வாசகருடன் நான் கை கோர்த்துக் கொண்டு அல்லது அவருடன் தனிமையில் பேசிக் கொண்டிருக்க வேண்டும் என பிரியப்படுகின்றேன். அவ்வாறான கதைகளை நான் அனுபவித்து இருக்கின்றேன். பொன்னகரத்தில் வரும் குதிரைக் காரனின் மனைவி என்றாலும் சரி, ஜெயகாந் தனின் கங்கா ஆயினும் சரி, விஷ்ணுவர்த்தினியின் கருக்கலைப்புக்கு ஆளாகி மரணமடைந்த அந்தச் சகோதரியின் வலி ஆயினும் சரி நான் தனியே காரில் நீண்ட நேரம் பயணப்பட்டுக் கொண்டிருக் கையில் அவர்களும் என்னுடன் பயணிக் கிறார்கள். எனக்கு வலியைத் தருகிறார்கள். அல்லது வாழ்வின் மீது நம்பிக்கையைத் தருகிறார்கள். அவ்வாறு எனது ஒரு கதாபாத்திரம் எனது ஒரு வாசகனுடன் பயணப்பட்டால் அதுவே நான் சாதிக்க விரும்புவது எனச் சொல்லலாம்.

இதை எப்படி அளக்க முடியும் என்றால் சில சந்தர்ப்பங்களில் எழுதும் பொழுது கைகள் தானான நடுங்கும். மீண்டும் வாசிக்கும் பொழுது குரல் தளதளக்கும். இப்போது தெரியும் இது எங்கேயோ யாரையோ தொடும் என்று. மனித உணர்வுகள் இன்னும் வாழுகின்றது என்று நம்பிக்கையில் நாம் வாழும் பொழுது இந்த கணிப் பீட்டின் அளவீட்டில் பெரிய மாற்றம் இருக்காது. அவ்வாறான எனது கதைகள் பலவற்றிக்கு பரிசு கிடைத்த பொழுது அந்த கணிப்பு உறுதி செய்யப்படுகிறது.

இது ஒரு நீண்ட பதில் ஆயினும் உண்மையான பதில் இதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இது ஒரு கதை எழுதும் பொழுது பாவிக்கும் ஒருவிதமான தொழில் நுட்பம் இல்லை. பதிலாக உண்மையினதும் நேர்மையினதும் வெளிப்பாடு. எந்த விமர்சனங்களுக்கோ அல்லது சமசரங்களுக்கோ தன் எழுத்துகளை தற்கொலை செய்யாமல் வாழ்வை வாழ்வாகப் பதிவு செய்யும் பொழுது அது வாசகனின் உள்ளுணர்வைத் தொடும்.

அதேவேளை கதையில் வரும் உதாரணங்கள் அல்லது வர்ணனைகளை மீண்டும் நிஜ வாழ்வில் இருந்து அல்லது மிக அருகாமையில் இருந்து எடுத்துக் கொள்ள வேண்டும். மிக அண்மையில் நான் எழுதிய சிறுகதையில் எந்தச் சந்தர்ப்பத்தில் பெண்கள் குசுகுசுப்பார்கள் என்ற பொழுது நான் அவதானிக்கும் பல விடயங்களைச் சேர்த்துக் கொள்வேன். அதனை எனது நிஜ வாழ்வில் இருந்து பெற்றுக் கொள்வேன். எனது ஒரு சிறுகதையில் "ஐயரின் பஞ்சாலத்திக்கும் "பஞ்சபுராணம் ஓதுக"க்கும் இடையில்" என்று ஒரு வரி எழுதிவிட்டு தனியே இருந்து சிரித்தேன். அப்போதே தெரியும் அந்த வரிகள் வாசகர்களைத் தொடும் என்று. இவ்வாறு பல சின்ன சின்ன விடயங்களை சேர்க்கும் பொழுதும் கதையின் கருவும் வலுவுள்ளதாக இருக்கும் பொழுதும் அது வாசகனின் உள்ளுணர்வைத் தொடும்.




**6) சிறந்ததொரு சிறுகதை எழுத்தாளராக திகழும் நீங்கள் சிறுகதைகளை எழுத முன்னர் மேற்கொள்ள வேண்டிய முன் முயற்சிகள் பற்றி இளம் எழுத்தாளர்களுக்கு குறிப்பிடுங்கள்?**

எனது இந்தப் பதிலை தயவு செய்து அடக்கம் காரணமாக சொல்கின்றேன் என எடுத்துக் கொள்ளவேண்டாம். "சிறந்த " அப்படி எல்லாம் ஏதுமில்லை. மேலாக இளம் எழுத் தாளர்கள் என்னும் பொழுது நானும் நான்கு அல்லது ஐந்து வருட இளம் எழுத்தாளன் தான்.

எங்களுக்குள் நாங்கள் கொண்டிருக்கும் தனிப்பட்ட அடையாளம்தான் எங்கள் கதைகளின் வெளிப்பாடு அல்லது வீச்சு. அல்லது கருவின் பிரசவம். அடுத்தது விதம் விதமான ஐஸ்சிங் கேக்குகளும், பரதநாட்டியத்தில் பல பரீட்சார்த்த முயற்சிகள் போல அதனை அலங்கரித்து வெளியே கொண்டுவருவது தனிப்பட்டு ஒருவரின் பயிற்சியும் முயற்சியும் தான்.

இதனை மீண்டும் மீண்டும் செய்யும் பொழுது ஒரு சந்தர்ப்பத்தில், அதுவே ஒரு எழுத்தாளரின் தனித்துவமான எழுத்து நடையாக உருவாகும்.

அவ்வாறு இல்லாமல் ஒரு நல்ல கரு கிடைத்திருக்கின்றது கதை ஆக்குவோம் எனப் புறப்பட்டால் அது ஏதோ ஒரு நடையை போட்டோக் கொப்பி எடுப்பது போல இருக்கும். நல்ல கரு என அனைவரும் ஒத்துக் கொள்வார்கள். ஆனால் நல்ல கதை என ஒத்துக் கொள்ளமாட்டார்கள்.


கதை என்பது எழுதுவது அல்ல. பிரசவிப்பது என்று புரிந்து கொண்டு அதற்காக வேலை செய்தால் மட்டுமே இளம் எழுத்தாளர்கள் என்றாலும் சரி, வளர்ந்த எழுத்தாளர்கள் என்றாலும் சரி நாங்கள் யாருக்காக எழுதுகின்றோமோ அவர்களுக்கு நல்ல கதைகளைக் கொடுக்க முடியும். அல்லது அது பக்கங்களை நிரப்பும் ஒரு வெற்று முயற்சியாவே இருக்கும்.

இறுதியாக எழுதி முடித்த பின்பு ஒரு வாசகனாக நாலைந்துதரம் வாசித்துப் பார்த்த பின்பும் கூட இது நல்ல கதைதான் என மனதுக்குப் பட்டால் தான் பிரசுரத்துக்கு அனுப்புவது பற்றி யோசிக்க வேண்டும். காரணம் ஒரு வாசகன் உங்களை நம்பி தனது நேரத்தை ஒதுக்கி உங்களின் பக்கத்துக்குள் நுழையும் பொழுது அவனை கொஞ்சமாவது திருப்திப்படுத்த வேண்டும். அல்லாவிடில் அடுத்த முறை உங்கள் பெயரைப் பார்க்கும்பொழுது தானாகவே அவனது கைகள் சில பக்கங்களைப் புரட்டிக் கொண்டு அப்பால் சென்று விடுவான்.

**7. இலக்கிய உலகில் காலடி எடுத்து வைக்கும் இளம் எழுத்தாளருக்கு நீங்கள் சொல்லக் கூடிய அறிவுரை ஏதாவது?......**

பேராசிரியர் திரு. மௌனகுரு அவர்கள் எனக்கு சொன்ன அறிவுரையையே நான் அவர்களுக்கும் சொல்வேன்.

"ஜீவகுமாரன்... உங்களுக்கும் எனது மாணவியான கலாநிதிக்கும் ஒன்று சொல்வேன். இந்த இலக்கிய உலகம் பார்க்கும் பொழுது அமைதியான கடல் போல இருக்கும். இறங்கி நீந்தும் பொழுதுதான் அதனுள் பெரிய சுழிகள் இருப்பது தெரிய வரும். அந்த சுழிகளில் அகப்படாமல் நீந்திக் கரையேறுவதில்தான் உங்கள் வெற்றி உள்ளது" என்றார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சொன்ன பொழுது புரியாத பல விடயங்களைப் பின்பு புரிந்து கொண்டேன்.

எனது பார்வையில் நான் சொல்வதானால் ஒரு புதிய நகரத்துக்கு இடம் மாறிச் செல்லும் பொழுது அந்த நகரத்து மாந்தர் அனைவருமே நல்லவர்களாகவே தென்படு வார்கள். பின்புதான் தெரியும் அங்கு ஏற்கனவே பல சண்டைகள் நடந்திருக்கும். பிளவுகள் நடந்திருக்கும்.

அங்கு எருதுடன் சேர்ந்தால் முடவனுக்கு கோபம் வரும். முடவனுடன் சேர்ந்தால் எருதுக்கு கோபம் வரும். எனது துர்ப்பாக்கியம் என்னை எருதும் கோபித்திருக்கு. முடவனும் கோபித்திருக்கின்றான். எனவே எந்தக் கட்சிகளுக்கோ அல்லது தனி நபர் நட்புகளுக்கோ இடம் கொடுக்காமல் இருப்பது நல்லது. அவ்வாறு தனிநபர் நட்புக்கு இடம் கொடுத்தாலும் அவர்களுடன் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர்களுடன் முரண்பட்டு விட்டுவிடாதீர்கள். உங்களைப் பேயாகச் சிதறடித்து விடுவார்கள்.




மேற்குலக வாழ்வில் கருத்து மோதல்கள் அந்த தளத்திலேயே நின்று விடும். தனிநபர் வாழ்வுவரை தொடர்வதில்லை. ஆனால் கிழக்குலக வாழ்வு அவ்வாறில்லை என்பது எனது தனிப்பட்ட அனுபவம்.

**7)உங்கள் இலக்கிய முயற்சிகள் பற்றி...?**

இலக்கிய முயற்சிகள் என்று நேரடியாகச் சொன்னால் பசி வேட்டையில் திரியும் ஒரு விலங்கைப் போல் எப்போதும் ஒரு நல்ல கருவுக்காக காத்திருப்பேன். அது கிடைத்ததும் அதன் கறியை எவ்வளவு ருசியாக சமைக்க முடியுமோ அவ்வளவு ருசியாக சமைக்க முயற்சிக்கின்றேன்.

மற்றது: இலக்கிய மற்றும் ஒரு சமூக ஆர்வலனான எனது முயற்சிகள்:

1. புலம்பெயர் எழுத்தாளர்கள் தங்கள் நூல்களை இலங்கைப் பாடசாலைகளுக்கும் வாசிகசாலைகளுக்கும் இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு அதற்கு முன்மாதிரியாக செய்தும் காட்டினேன். எத்தனை பேர் அதனைத் தொடர்கிறார்கள் எனத் தெரியாது. ஆனால் நான் தொடர்ந்து கொண்டிருக்கின்றேன். எனக்கு பரிசு கிடைத்த நாவலை நான் எனது பணத்தில் வாங்கி அதனை விநியோகிக்க இருக்கின்றேன்.

2. புலம் பெயர்ந்த மக்கள் எங்கள் நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டும் என தொடர்ந்தும் குரல் கொடுத்துக் கொண்டு இருக்கின்றேன். இந்த ஆண்டு தொடக்கம் மிகச்சிறிய ஒரு தொகையை தினம் தினம் ஒவ்வொருவரும் சேர்த்து அவரவரே தங்களுக்கு விரும்பியவாறு அதனை ஏதாவது ஒரு





தனிமனிதனுக்கோ, குடும்பத் திற்கோ உதவுமாறு கேட்டிருக்கின்றேன். ஒரு ஐஸ்குச்சிக்கு செலுத்தும் பணம் தான் அது. தினம் தினம் சேர்த்தால் குறைந்தது 75 ஆயிரம் ரூபாய் சேர்க்க முடியும். நானும் என் மனைவியும் தொடங்கி விட்டோம்; வேறு சிலரும் ஆரம்பித்து விட்டார்கள். பொங்கல் அன்று கூட ஒரு கட்டுரை எழுதியிருந்தேன் - ஒரு ஜில்லாவுக்கு, அல்லது வீரத்திற்கு டென்மார்க்கில் ஒரு குடும்பம் சென்று வர இலங்கைக் காசுக்கு 5000 முடியும். இதனுடன் ஒப்பிடும் பொழுது வருடத்தில் 75 ஆயிரம் பெரிய தொகை இல்லை என்று. இது ஒரு இலக்கியப்பணி இல்லாவிட்டாலும் இதனை முன்வைப்பதற்கு நான் ஒரு இலக்கியக்காரன் என்ற முகம் எனக்கு நன்கு உதவியுள்ளது. இந்த சிந்தனை மாற்றங்கள் நிச்சயம் வரும். ஆனால் மெதுவாகத்தான் வரும்.

**8) புலம்பெயர் இலக்கியத்தின் இன்றைய நிலைமை பற்றிய உங்களின் கருத்து...?**

புலம் பெயர்நாடுகளில் தொடர்ந்து எழுதுபவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாக இருக்கின்றது. ஒன்றிரண்டு புத்தகங்களின் வெளியீடுகளுடன் அவர்களின் பணி முடிவடைந்த துர்பாக்கிய நிலை காணப்படுகிறது.

கட்சி அரசியல் என்பது போல கட்சி எழுத்துகளுக்குள் போய்ச் சிக்குண்ட பலரால் மீண்டும் ஒரு சம தளத்தில் நின்று எழுத முடியாது இருக்கின்றது.

மூன்றாவதாக வாசகர்களின் வாசிப்பின் அளவு குறைந்தும் அவர்களது கண்கள் முகநூல்களிலும் தொடர் நாடகங்களிலும் பதிந்து விட்ட தால் பலருக்கு இலக்கிய உலகத்தில் என்ன நடக்கின்றது என்று தெரிவதில்லை. எனவே எழுத்தாளர்களுக்கு கிடைக்க வேண்டிய போதிய சமுதாய அங்கீகாரம் கிடைக்காததால் அவர்கள் சோம்பல் அடைகின்றார்கள்.




மாறாக எழுதுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமே எனது வேலை. வாசிப்பவர்கள் விரும்பிய பொழுது வாசிக் கட்டும் என நினைக்கும் என்னைப் போன்றவர்கள் தொடர்ந்து எழுதிக் கொண்டு இருக்கின்றார்கள்.

**9) உங்களுடைய "கடவுச்சீட்டு" நாவலுக்கு சமீபத்தில் கிடைத்த விருது பற்றி...?**

இந்த நாவல் போட்டி பற்றி எழுத்தாளர் திரு. எஸ். ராமகிருஷ்ணனின் இணையத்தளத்தில் வாசித்து அறிந்திருந்தேன். என்னுட்பட்ட இலங்கைத் தமிழரின் புலம்பெயர்ந்த வாழ்வின் எழுச்சிகளையும் வீழ்ச்சிகளையும் திரிபு இல்லாது ஒரு நாவல் எழுத வேண்டும் என்று ஒரு அவா என்னுள் இருந்தது. இந்த போட்டியைப் பற்றி அறிந்ததும் 25 வருட எழுச்சி வீழ்ச்சி என்பதை மாலைகட்டும் நூலாக வைத்து பல மலர்களை அந்த மாலையில் தொடுத்து விட்டேன். அதுதான் இந்த நாவல் உருவாகிய கதை. சிலது கண்ணுக்கு அழகாய் இருக்கும் வாசனை வீசாது. சில பிரதானமான வாசனையைக் கொண்டிருக்கும். ஆனால் அழகாக இராது. சில வாடியிருக்கும். சில அழுகியிருக்கும். இத்தனையையும் கொண்டு கட்டப்பட்டதுதான் "கடவுச்சீட்டு" என்ற நாவல்.

இதற்கு பரிசு அறிவிக்கப்பட்டது கூட எனது முகநூல் வாசகர் ஒருவர் அறிவித்தே அறிந்து கொண்டேன். அடுத்த தினம்தான் போட்டி யாளர்கள் என்னைத் தொடர்பு கொண்டார்கள். நானும் எனது முகநூலிலும் எனது 6700 மின்னஞ்சல் வாசகர்களுக்கும் அதனை அறிவித்திருந்தேன். வாழ்வில் மிகச் சந்தோசமான ஒரு தருணம் அது.

**10) நூல் வடிவில் வெளியாகியவை போட்டிக்கு அனுப்பப் படுவதுண்டு. இங்கு இந்திய பதிப்பாளர்கள் உலக அளவில் நடாத்திய ஒரு போட்டிக்கு கையெழுத்துப் பிரதியை அனுப்பி இதில் முதல் பரிசும் பெற்று அந்த கையெழுத்துப் பிரதியை அவர்களே நூலாக வெளியிடுவதை இலங்கை மற்றும் புலம் பெயர்ந்த வாசகர்கள் எவ்வாறு மகிழ்ச்சியாகக் கொண்டாடினார்கள்?**

எனது மின்னஞ்சலுக்கும் முக நூலுக்கும் அதிக வாழ்த்துச் செய்தி வந்த வண்ணம் இருந்தது. பலர் தொலைபேசியில் வாழ்த்தினார்கள்.

எனது மனைவியின் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த திரு.விஷ்வேஸ் வரன் ஐயா அடுத்த கிழமை அவர் மாரடைப்பு ஏற்பட்டு இறக்கும் வரை இந்த நல்ல செய்தியை பலருடன் பகிர்ந்து கொண்டிருந்தாராம். அவரே கடவுச்சீட்டை மொழிபெயர்த்து தருவதாயும் ஒத்துக்கொண்டிருந்தார்.

எனது மனைவின் தாயார் (மாமியார்) "நான் ஒரு ஆண்பிள்ளைப் பெற்றது போல இருக்கின்றது" என தொலைபேசியில் சொன்னது மிகவும் உணர்ச்சி மிகுந்த தருணமாய் இருந்தது.

இந்த இடத்தில் கட்டாயமாக ஒரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும். மகாநதி படத்தில் பூர்ணம் விஸ்வநாதன் சொன்ன ஒரு வசனம் ஞாபகம் வருகிறது.

"கனகதாரா ஸ்தோத்திர மந்திரத்தைச் சொன்ன போது பணமும் கொட்டிச்சுது. தேளும் கொட்டிச்சுது", எனச் சொல்வார்.

அதேமாதிரி பரிசுச் செய்தியும் வந்தது. ஒரு மொட்டைக் கடிதமும் வந்தது.

ஆடுதுறை அம்பலவன்என்ற பெயரில் தமிழைக் காக்கும் அடியார் ஒருவர் பல எழுத்தாள நண்பர்களுக்கு மின்னஞ்சலில் ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தார். அதில் குறிப்பிட்ட மிகப்பிரதான விடயம், "ஜீவகுமாரன் ஒரு இலட்சம் ரூபாய் லஞ்சம் கொடுத்து இந்த 50 ஆயிரம் ரூபாய் பரிசை பெற்றிருக்கிறார் என்று".

எனது உதட்டினுள் புன்னகைத்ததை விட நான் வேறு என்ன செய்ய முடியும்?

அதற்கு அவர் பாவித்த சொல்லாடல்கள் எல்லாம் 60களின் ஸ்ரையிலில். என்னைப் பற்றி எழுதியதை விட அவர் தன்னை வெளிக்காட்டிக் கொள்ளக் கூடாது என்பதில் அதிக கவனம் எடுத்துக் கொண்டிருக்கின்றார் என்பதை வாசிக்கும் பொழுது நன்கு தெரிந்தது.

"இவ்வாறுதான் அன்பர் தமிழும் தமிழ் தேசியமும் வளர்க்கின்றார்" என்று விட்டு அந்தக் கணத்துடன் அதனை விட்டுவிட்டேன்.

இதனை அறிந்திருந்தும் மரியாதை நிமித்தமாக எனக்கு தெரிவிக்காத இலக்கிய நண்பர்களுக்கு இந்தச் செய்தியைச் சொல்லவே இதில் குறிப்பிட்டு இருக்கின்றேன். வேறு எதற்கும் அல்ல. அழுக்கைத் தொட்டால் அழுக்கு எங்கள் கைகளில் படியும் என்று அரிச்சுவடி தெரிந்தும், இதனை நான் இதில் பதிவு செய்யவே வேண்டும் என்பதால் குறிப்பிட்டு இருக்கின்றேன்.

எனது பலம் பரிசுகளும் விருதுகளும் அல்ல. எனது நேர்மை எனக்குத் தரும் கர்வமே என்பதனை அவர் நன்கு அறிந்தும் அதனைச் செய்திருக்கின்றார். நீங்கள் கேட்ட கேள்விக்கு எனது பதில் நீண்டதாய் இருந்தாலும் இதுவும் சேர்ந்ததுதான் இந்தப் பதில். மேடையில் பரிசு வேண்டும் பொழுதும் இவ்வாறான ஒரு சமுதாயத்தின் பிரதிநிதியாகவும் நான் இருக்கின்றேன் என்ற வேதனை நிச்சயமாக எனக்குள் இருக்கும்.

**11) உங்களின் படைப்புகள் பற்றிய சுயமதிப்பீடு யாது?**

ஒரு வரியில் சொல்வதானால் ஜீவ குமாரன் என்ற ஒரு வாசகனை ஜீவகுமாரன் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளனின் எழுத்துக்கள் திருப்திப்படுத்து கின்றன. அடுத்து எனது அண்மைக்காலக் கதை களில் கதை மாந்தரைச் சுற்றி கதையை அமைக் காமல் கதைமாந்தரின் உள்ளுணர்வுகளுக்குள் சென்று கதையின் பெரும்பகுதியை நகர்த்திக் கொண்டு இருக்கின்றேன். அது ஒரு தியான நிலையில் இருந்து கதை எழுதுவது போல எனக்கு ஒரு உணர்வைத் தருகிறது. அது அதிகமான வாசகர்களுக்கும் பிடித்திருக்கின்றது.

வர்ணனைகள் அல்லது காட்சி விபரிப்பு களில் முடிந்தளவு யதார்த்தத்தைக் கொண்டிருக்க வேண்டும் என விரும்பிச் செய்கின்றேன். குடித்து விட்டு வந்தான் என்பதனைக் காட்டிலும் அவன் குடித்திருந்த கள்ளின் வாசனை அவன் மீசையிலும், வியர்வையிலும், வெற்றிலையினதும் நாறல் பாக்கினதும் நாற்றம் வாயிலும் வீசியது என்னும் போது அந்த பாத்திரத்துக்கு மிக அண்மையில் செல்லும் உணர்வை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையில் அதற்காக வேலை செய்கின்றேன்.

**12) ஒரு எழுத்தாளரின் தர்மம் எதுவென்று நினைக்கிறீர்கள்?**

இந்தப் பேட்டியின் ஆரம்பத்தில் சொன்னது தான். சொல்லுக்கும், எழுத்துக்கும், வாழ்வுக்கும் இடைவெளி இல்லாது இருக்க வேண்டும். சக எழுத் தாளர்களை பாராட்ட வேண்டிய இடத்தில் அவர் களை பாராட்ட வேண்டும். அவர்களுக்கு ஏதாவது அங்கீகாரம் கிடைக்கும் போது அது தங்களுக்கு கிடைத்ததாக மகிழ வேண்டும். உடன்பாடுகள் இல்லாதவிடத்து நட்பும் தொடர்புகளும் முறியாது சம தளத்தில் இருந்து விவாதித்து கைகுலுக்கிக் கொள்ள பழகவேண்டும்.

நல்ல முயற்சிகளுக்கு ஆதரவு கொடுக்கா விட்டாலும் அவற்றை குழப்பும் முயற்சியில் ஈடுபட்டு தங்கள் இருப்புகளை அந்த வழிகளில் உலகத்துக்கு காட்டும் கைங்கரியங்களை செய்யக் கூடாது. அது போன்று புது முயற்சி எடுப்பவர்களும் அதனுடைய வெற்றி அல்லது தோல்வியை தங்களது வெற்றி அல்லது தோல்வி என்று எடுத்துக் கொள்ளாமல் இருந்தால் தோல்விகளில் இருந்து பலவற்றைக் கற்றுக் கொண்டு இன்னும் பல வெற்றிகளைச் சந்திக்கலாம்.

வெற்றி என்பது தக்க வைத்துக் கொள்ள வேண்டிய ஒன்று. தோல்வி என்பது அடுத்த வெற்றிக்கான சவால். ஆகவே வெற்றியை தலைக்கும் தோல்வியை மனதுக்கும் கொண்டு செல்லாத மனப்பான்மையை எங்களுக்குள் நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**13) ஈழத்துச் சிற்றிதழ்கள் பற்றி...?**

இலங்கைச் சிற்றிதழ்கள்தான் எனக்கு களம் அமைத்து என்னை தொடர்ந்து வளர்த்துக் கொண்டிருப்பவை. அனைத்திற்கும் நான் மிகவும் நன்றிக் கடன்பட்டிருக்கின்றேன். அத்துடன் அவற்றின் பரம்பலுக்கு என்னால் ஆன உதவி களையும் செய்து கொண்டிருக்கின்றேன்.

பல இதழ்களை சந்தித்து இருந்தாலும் தொடர்ச்சியாக வாசித்தது மல்லிகை, ஞானம், ஜீவநதி, செங்கதிர். இப்பொழுதும் தபால்பெட்டியைத் திறக்கும் பொழுது மல்லிகை அதனுள் இராதா என்பது எனது ஏக்கமாய் இருக்கின்றது.

ஞானம், ஜீவநதி இரண்டும் அமைப்பில் ஒற்றுமை உண்டு. பிரதம ஆசிரியர்களின் வாழ்வு அனுபமும், சிற்றிதழ்களின் வயது அனுபவமும் இரண்டிலும் துலக்கமாக தெரிகின்றது. அதே மாதிரி கட்டுரைத் தேர்வுகளில் காணப்படும் வேறு பாடுகள் தான் இந்த இரண்டு சிற்றிதழ்களின் தனித்துவம் என நான் நினைக்கின்றேன். இரண்டு சஞ்சிகைகளும் இரு வேறுபட்ட திசைகளில் காத்திரமான கட்டுரைகளை தெரிவு செய்கின்றீர் கள். மேலாக பொருளாதாரமும் சிற்றிதழ்களின் பரம்பலும் அவற்றின் வளர்ச்சியை மட்டுப்படுத்து கின்றனவோ என்ற ஐயமும் இடைக்கிடை தோன்றி மறைகிறது.

செங்கதிர் அமைப்பிலும் எழுத்து வடிவங்களிலும் இன்னும் முன்னேறவேண்டும் என்பது எனது அவா. அதையும் தாண்டி அது ஒரு பிரதேச சிற்றிதழோ என்ற ஐயத்தை சிலவேளை ஏற்படுத்துகிறது. இது எனது தவறான கணிப் பாகவும் இருக்கலாம். அவ்வாறாயின் செங்கதிர் ஆசிரியர் என்னை மன்னிப்பாராக!

**14. புலம்பெயர்நாடுகளில் நிலவும் இலங்கை அரசியல் உங்கள் எழுத்துத்துறைக்கு எவ்வாறு பலம் சேர்த்துள்ளது?**

நான் ஆரம்பத்தில் இருந்து இதுவரை எந்தக் கட்சியைச் சார்ந்தோ அல்லது "இசம்" கள் சார்ந்தோ எழுதவில்லை. ஆனால் அதனுள் வரவேண்டும் என்பது பலரின் பெருவிருப்பு.

மேலாக ஆயுதங்கள் மௌனமாகும் வரை புலம்பெயர்நாடுகளுக்கு என்று பெரிய அரசியல் எதுவும் இருக்கவில்லை. இலங்கையில் இருந்து கட்டளையிடப்பட்டவை இங்கிருந்து நிறைவேற்றப்பட்டன. தற்பொழுது எங்கிருந்து கட்டளைகள் வருகின்றன எனக்குத் தெரியாது ஆனால் அரசியல் ஒரு மட்டத்தில் நிலவிக் கொண்டு இருக்கிறது. நீங்களும் லங்காசிறியில் பார்ப்பீர்கள் தானே!

எந்த குழு அரசியலிலும் நான் இல்லாத தால் அவர்களது அங்கீகாரம் அல்லது ஆதரவு எனக்கு கிடைப்பதில்லை. அதை எதிர்பார்த்தும் நான் இல்லை. மேலாக எனக்கு பலம் சேர்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ ஒன்றின் பக்கம் சாரும் பொழுது எனது எழுத்தின் பலம் போய்விடும் என்பதால் நான் நானாக இருக்கின்றேன்.

**15. நாவல், குறுநாவல், சிறுகதைகள், கட்டுரைகள் என பல வடிவங்களில் அதற்கேற்ற சொல்லாடல்களுடன் வலம் வருகின்றீர்கள். இதில் அவற்றில் அதிகமாக உங்களது திறமை வெளிப்படுகிறது என நினைக் கின்றீர்கள்?**

சிறுகதையில் தான் அதிகளவு காலம் எனக்குப் பரீட்சயம். அது ஒரு வன் டே கிறிக்கட் மச் விளையாடும் சந்தோசம். மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களில் அதிக ரன்கள் எடுக்க வேண்டும். அந்த விளையாட்டில் கூட ஒருவரை பல விதத்திலும் ஆட்டமிழக்கச் செய்ய முடியும் என்றாலும் எனக்குப் பிடித்தது நான் எறியும் பந்து நடுவிக்கற்றைத் தகர்க்க வேண்டும் என்பது. அவ்வாறு தகர்த்த வற்றிக்கு விருதுகள் கிடைக்கும் பொழுது மிக்க மகிழ்ச்சியாக இருக்கும்.

நாவல் என்பது ஒரு மணிநேரம் என்றாலும் பரந்து பட்ட பரப்பில் ஓடி விளையாடி கடைசியாக ஒரு கோலுக்கு வருவது. அதனது அனுபவம் வேறு பட்டது. இதற்கு பல நாட்கள் உழைப்பும் திட்டமிடு தலும் தேவை. பதினொருபேரையும் இணைத்துச் செல்வது போல பல சம்பங்களை சரியாக தொகுத் தும் இணைத்துக்கொண்டும் செல்ல வேண்டும். பிழைத்தால் சேம் சைற் கோல் போடவும் வாய்ப் புண்டு. அதனைச் சரியாகச் செய்தால் பார்வை யாளர்கள் மிகவும் சந்தோசப்படுவார்கள். எழுதி முடியும் போது பெரிய களைப்பு ஏற்படும். எனது பிற் காலம் அதிக நாவல்கள் படைப்பதில் கழியும் என நம்புகின்றேன். கட்டுரைகள் அந்த அந்த தேவைக்கு ஏற்ப மிகவும் வலிமையான சொற் களைத் தேர்ந்தெடுத்து மிகவும் தெளிவாக எழுது வது. அது தேவையின் நிமித்தம் மட்டுமே என்னால் செய்யப்படுவது. அது எனது துறை இல்லை.

**16. இறுதியாக வாசகர்களுக்கு என்ன சொல்ல விரும்பு கின்றீர்கள்?**

வாசகர்கள் முதலில் அதிகளவு வாசிக்க வேண்டும். வாசித்தவற்றைப் பற்றி அதிகம் விவாதிக்க வேண்டும். அந்த ஆரோக்கியமான சூழ்நிலை இன்று குறைந்து வருகின்றது என நினைக்கின்றேன்.

புத்தக வெளியீடு என்று ஒரு நிகழ்வு இருந்தால் அதற்கு அடுத்த வாரமே புத்தக ஆய்வு என்ற ஒன்றை ஒழுங்கு செய்ய வேண்டும். அதில் வாசகர்கள் பங்கு கொள்ள வேண்டும். அதிகமான வெளியீட்டு விழாக்களில் மேடைப்பேச்சும் சபை மரியாதை கருதி பாராட்டு மட்டுமே நடை பெறுகிறது. ஆனால் வாசகர்கள் இவ்வாறான நிகழ்வுகளை ஒழுங்கு செய்து ஒரு மாதத்தில் வெளியான 4 புத்தகங்களையும் அதன் ஆசிரியர் களையும் இணைத்து ஒரு கலந்துரையாடல் நடாத்தினால் அது பெரிதும் நன்மை பயக்கும் என்பது எனது கருத்து. இதனை இந்தியாவில் நான் சந்தித்து இருக்கின்றேன். ஒரு புத்தக வெளியீட்டு விழாவை விட இது மிகவும் பெரியளவில் ஆரோக்கியமாக இருக்கும். இதனை வாசகர்கள் அல்லது வாசகர் வட்டங்களே செய்ய வேண்டும். நூலை எழுதிய எழுத்தாளர்கள் இதனை ஒழுங்கு செய்தால் மீண்டும் சபை மரியாதையுள் இதிகாசங்கள் திருக்குறளாக குறுகிவிடும்.

அவ்வகையில் நல்ல எழுத்துகளை எழுத்தாளர்களிடம் இருந்து பெறுவதில் வாசகர் களுக்கும் ஒரு பங்குண்டு.

**17. இறுதியாக ஜீவநதி பற்றி அல்லது ஜீவநதிக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

பிரபலமான 3 ஆளுமைகளை பின் புலமாகவும், இரு எழுத்தாளர்களை பக்க பலமாக வும், ஒருவரை உங்களின் பாதியாவும் வைத்திருக் கின்றீர்கள்.

இவ்வளவு பேரின் கூட்டுழைப்பின் வளர்ச்சியை நன்கு அவதானிக்க கூடியதாய் உள்ளது.

பரணீதரனின் முகநூலில் இருந்து எவ்வளவு பணப்பிரச்சினைகளோடு இதனை நடாத்துகின்றீர்கள் என தெரிகிறது. அதற்கு பரம்பல் மிக முக்கியம்.

இன்னும் ஆழமாய்ச் செல்லச் செல்ல அதன் பரம்பலும் அதிகமாகும் என நம்புகின்றேன். காரணம் பரம்பல் ஒரு சஞ்சிகைக்கு மிக முக்கியம். அதற்கு அன்றாடப் பிரச்சினைகளை இன்னும் காத்திரத்துடன் மையப்படுத்தினால் நன்றாய் இருக்கும். அதி குறைந்தது கார்டுன்; வடிவில் ஆவது அதனைச் செய்யலாம் பொழுது போக்குச் சஞ்சிகையாகவும் மாறிவிடாது அதேவேளை மிகச் சாதாரண வாசனுக்கு எட்டமாகவும் போய்விடாது ஒரு சமநிலையில் செல்லக் கூடியவாறு அதன் தோற்றம் உருப்பெற்றால் இன்னும் சிறப்பாக இருக்கும் என்பது எனது கணிப்பு. காரணம் இன்றைய சஞ்சிகைகள் கணனியுடன் போட்டி போட வேண்டியுள்ளது.

என்னை இந்தப் பேட்டி எடுத்ததன் மூலம் என்னை இன்னும் அதிகமாக வாசகர்களுக்கு அருகே கொண்டு சென்றமைக்கு ஜீவநதிக்கு மிக்க நன்றிகள்.

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெணியான்

விழா நிறைவடைந்து கல்லூரியில் இருந்து புறப்படும் பொழுது மனம் நிறைந்திருந்தது. எனது வாழ்வில் இன்றைய தினம் போன்ற ஆனந்தமான வேறொரு தினம் இல்லை என்று கூறலாம். எனது ஆசிரியப்பணியில் இப்படி ஒரு பாராட்டு நான் பெற்றதில்லை. உடன் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் என கல்லூரிச் சமூகம் ஒன்று கூடி நிறைந்திருந்த பெரிய சபை. நான் மனம் வைத்து முழுமை யான ஈடுபாட்டுடன் மாணவர்களுக்குக் கற்பித்தேன். அதன் பேறாக, என்னைக் கௌரவித்து, பெருமைப் படுத்தி, சிறப்புச் செய்ய வந்து கூடிய சபையாகவே எனக்குத் தோன்றுகிறது.

நான் பூரண அர்ப்பணிப்புடன் ஆற்றி வரும் ஆசிரியப் பணியின் பெருமை, மகிமை என்ன என்பதை இப்பொழுது தான் தெளிவாக என்னால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

பல்கலைக்கழகக் கல்வியை நிறைவு செய்து விஞ்ஞானபட்டதாரியாக வெளியேறி, வேலையற்ற பட்டதாரி என்ற இன்னொரு புதிய பட்டத்துடன் சில ஆண்டுகள் வீட்டோடு இருக்க நேர்ந்தது. அந்தக் காலத்தில் தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று கற்பிக்கும் சந்தர்ப்பங்கள் பல என்னைத் தேடிக் கொண்டு வந்தன. எனக்கு அதில் நாட்டம் இருக்கவில்லை. அப்பாவும் அதை விரும்பவில்லை.

# உள்ளிருந்து கொல்லும்...



ஆனால் நான் கற்ற கல்வி அறிவு மற்றவர்களுக்குப் பயன்படாது இருக்கக் கூடாது என்பது எனது மனக்கருத்து. எனது வீட்டுக்கு அண்மையில் வாழ்ந்து வந்த மாணவர்கள் எல்லோரையும் அழைத்து வீட்டில் வைத்து அவர்களுக்கு விஞ்ஞான பாடத்தைப் படிப்பித்தேன். அவர்கள் கற்ற கல்லூரிகளிலும், பொதுப்பரீட்சைகளிலும் சிறந்த பெறுபேறுகளை ஒழுங்காக அடைந்ததே, அவர்களிடம் நான் பெற்றுக் கொண்ட வேதனம். எனக்கொரு மனநிறைவு; மாணவர்களுக்கு விஞ்ஞானபாடம் சிறப்பாகக் கற்பிக்க என்னால் முடியும் என்பது தான் அது.

வேலையற்ற பட்டதாரிக்குக் கிடைக்கக் கூடிய மனநிறைவு இது. ஒன்று மாத்திரம் போதுமான ஒன்றாகி விட முடியுமா? அரச பதவி வழங்குவதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படும் சமயங்களில் எல்லாம் எல்லோரையும் போல நானும் தொடர்ந்து விண்ணப்பித்துக் கொண்டிருந்தேன். தொடர்ந்து ஏமாற்றந்தான் கிடைத்துக் கொண்டிருந்தது.

ஆசிரிய நியமனத்துக்குரிய விண்ணப்பம் அனுப்பும் வேளை மனதில் எனக்கொரு நம்பிக்கை இருந்தது. மனதில் இருந்த விருப்பம் எனக்கந்த நம்பிக்கையைத் தந்திருக்க வேண்டும். எனது நம்பிக்கை பொய்த்துப் போய் விடவில்லை. எனது மனம் போல ஆசிரிய நியமனம் கிடைத்தது. அதுவும் ஊரோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமனம் கிடைப்பதென்றால், எனக்கொரு அதிஷ்டந்தான்!

அப்பா ஓர் ஆசிரியர், எனக்கு ஆசிரிய நியமனமே கிடைக்க வேண்டும் என்பதையே உள்ளூர அவர் விரும்பி இருந்தார்.

எனது நியமனக்கடிதம் கைக்கு வந்து சேருவதற்கு முன்பு அப்பா என்னிடம் வினவினார்.

"பிள்ளை. நீ எந்தப் பள்ளிக்கூடத்துக்குப் போவதற்கு விரும்புகிறாய்?"

"எதெண்டாலும் பறவாயில்லை. கிட்டவுள்ள பள்ளிக்கூடமெண்டால் நல்லது"

"விஞ்ஞானப்பட்டதாரிகளுக்கு கல்லூரிகளில் தான் இடமிருக்கும். எங்களுக்குக்கிழக்கு றோட்டிலே ஒரு கல்லூரி. மேற்கு றோட்டிலே இன்னொரு கல்லூரி. கிழக்கு றோட்டு எங்கடை ஆக்கள் இருக்கிற பகுதி. நீ போக... வர... காவாலி கடப்புளிகள் றோட்டிலே நிண்டு பகிடி சொட்டை விடுவாங்கள். மேற்கு றோட்டிலே இருக்கிறவர்கள் நல்ல சனங்கள். நீ கரைச்சல் இல்லாமல் போய் வரலாம்" என்றார்.

கல்விக் கந்தோரில் அப்பாவுக்கு அறிமுகமும் செல்வாக்கும் இருந்தது. அப்பா தான் விரும்பிய இந்தக் கல்லூரியில் எனக்கு நியமனம் பெற்றுத்தருவதில் அவர் எதிர் பார்க்காத ஒரு சிக்கலுக்கு முகம் கொடுக்க வேண்டி நேர்ந்தது.

ஒரு விஞ்ஞானப்பட்டதாரியை இந்தக் கல்லூரிக்கு நியமனம் செய்ய, கந்தோரில் இருந்த பெரியவர்கள் விரும்புவதாகவில்லை. இது காலங்காலமாகச் செய்து வரும் ஒரு புறக்கணிப்பு.

அப்பா அதை விளங்கிக் கொண்டு. விட்டுக் கொடுக்கவில்லை. அவர் விடாப்பிடியாக நின்று, தனது விருப்பம்போல எனக்கு நியமனம் பெற்றுத் தந்தார்.

நான் கல்லூரிக்குப்போய் வரத் தொடங்கி ஒர மாதகாலம் கழிந்த பின்னர் ஒரு தினம். "எப்படிப் பிள்ளை பள்ளிக்கூடம்?" என வினவினார்.

"நல்ல பிள்ளைகள் ஆசிரியர்கள் அன்பாக பழகுகிறார்கள். அதிபர் அனுசரித்து நடக்கிறார். நான் சந்தோஷமாக வேலை செய்கிறேன்."

"அவர்கள் அன்பாக இருக்கத் தகுந்த வண்ணம் நீ நடந்து கொள்ள வேணும். அது உன்ரை கையிலே தான் இருக்கு" என்றார் சுருக்கமாக.

ஆண்டிறுதி அண்மித்துக் கொண்டிருந்த வேளையில் தான் விஞ்ஞான பாட ஆசிரியருக்குரிய வழிகாட்டல் கருத்தரங்குக்கு அழைத்தார்கள். ஆசிரியவள நிலையத்தில் கருத்தரங்கு நடைபெற்றது.

அந்தக் கருத்தரங்குக்கு வந்திருந்த ஆசிரியர்கள் சிலர் என்னோட படித்தவர்கள். வேறு சிலர் முன்னரே எனக்கு அறிமுகமானவர்களாக இருந்தார்கள். இன்னும் சிலர் என்னை அறிந்திருக்கவில்லை. எனக்கும் அவர்களைத் தெரிய வராது.

என்னை அறியாதிருந்தவர்கள் என்னிடம் வெகு அக்கறையாக விசாரித்தார்கள், "எந்தப் பள்ளிக் கூடம்?" என.

அந்தக் கேள்வியில் உள் அந்தரங்கம் ஒன்று உண்டு என்பது நான் உணர்வேன். நான் அது பற்றிக் கவனத்தில் கொள்ளாது கல்லூரியின் பெயரைக் கூறினேன்.

அவர்கள் முகத்தைச் சுழித்துக் கொண்டு மௌனமாக விலகிப் போனார்கள்.

தங்களுக்குள் கூடி குசுகுசென்று இரகசியம் பேசிக் கொண்டார்கள்.

கருத்தரங்கு முடிவதற்கு முன்னர் சிலர் என்னிடம் வந்து, "ரீச்சர்... என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்!" என மன்னிப்புக் கேட்டார்கள்.

"ஏன் மன்னிக்க வேண்டும்? நீங்கள் எனக்கொரு தவறும் செய்யவில்லையே!"

"நீங்கள் சங்கரப்பிள்ளை வாத்தியாரின்ரை மகள் எண்டது பிறகு தான் எனக்குத் தெரியும்!"

"அதுக்காக வா மன்னிக்க வேணும்?"

"இல்லை ரீச்சர்... அதுகளின்ரை பள்ளிக்கூடத்திலே படிப்பிக்கிற உங்களையும்..."

"இப்பிடி எல்லாம் கதைக்கக் கூடாது" நான் நறுக்கென்று சொன்னதும் மெல்ல விலகினார்கள்.

எனக்கு ஆசிரிய நியமனம் கிடைத்த பிறகு, அப்பா அடுத்த கட்ட நடவடிக்கையை ஆரம்பித்து விட்டார். வேறொன்றுமல்ல பெண்ணைப் பெற்ற எல்லாத் தகப்பன்மாரையும் போல எனக்கு நல்ல வரனைத் தேடலானார்.

அப்பா மனதிலிருந்த வந்த பெரிய விருப்பம், தனக்கு மருமகனாக வருபவர் ஒரு ஆசிரியராக இருக்க வேண்டும் என்பது தான். மனிதன் மனதில் நினைப்பது போலவா எல்லாக் காரியங்களும் நடந்து ஒப்பேறி விடுகின்றன?

அரசாங்க எழுதுவினைஞர் ஒருவரின் சம்பந்தமே இறுதியில் பொருந்தி வந்தது.

தனிவீடு, காணி பூமி, நகை நட்டு, பல இலட்சம் காசு என எந்தக் குறைவும் வைக்காது சீரும் சிறப்பாக திருமணம் நடந்து முடிந்தது.

புதுமணத்தம்பதிகள் பலருக்கும் இளமைப்பருவம் சுவைத்து ருசிப்பது போல எனக்கும் வாழ்வு தேனாக இனித்தது. வாழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாமிர்தமாக இப்படி இதமாகத் தித்திக்குமே யானால், எத்தனை பிறவிகள் எடுத்து வந்தும் என் கணவருடன் வாழ்வதற்கு நான் தயாராக வேட்கை யுற்றேன். அவரின் பண்பான இயல்பு, நாகரிகமான நடத்தை கண்டு நான் பெருமைப் பட்டேன்.

எனது கல்லூரி ஆசிரியர்களைச் சந்திக்கும் சமயங்களில் எந்த வித வேறுபாடும் இல்லாது அனுசரித்து அன்பாக நடந்து வந்தார்.

எங்களுக்குச் செல்லக் குழந்தையாக ஓராண்டு காலத்துக்குப் பிறகு ஒரு மகள் வந்து பிறந்தாள்.

அப்பொழுது எங்கள் உள்ளங்களில் பொங்கிப் பெருகிய ஆனந்தப்பிரவாகத்தைச் சொல்வா வேண்டும்!

மகள் பிறந்து ஒருவாரம் கழிவதற்குள்ளே ஒரு மாலை நேரம் குழந்தையை அணைத்த வண்ணம் நான் அறைக்குள்ளே படுத்துக் கண் அயர்ந்து போகிறேன்.

"செல்லம்!" என வாஞ்சையுடன் மெல்ல அழைக்கும் குரல் கேட்டு நான் மெதுவாகக் கண் விழிக்கின்றேன்.

"செல்லம் நானா? உங்கடை மகளா?"

"முதல் நீதான் என்ரை செல்லம். மகள் செல்லக்குஞ்சு" என்கின்றார் அவர்.

வேலை முடிந்து கந்தோரில் இருந்து வந்திருக்கும் அவர் இன்னும் உடுப்புக்கூட மாற்ற வில்லை. என்னை மகளை பார்க்கும் ஆவலில் நேரே அறைக்குள்ளே வந்து நிற்பது எனக்குப் பெருமையாக இருக்கின்றது.

அவர் கையில் தூக்கி வைத்துக் கொண்டி ருக்கும் "பாய்க்கை" திறந்து சிரித்த வண்ணம் ஒரு போத்தலை வெளியே எடுக்கின்றார்.

எனக்க அதிசயமாக இருக்கிறது.

"என்ன இது? வெடுக்கென்று கேட்கின்றேன்.

"பிரண்டி"

எனக்கு வாய்திறந்து எதுவும் பேச முடியவில்லை.

"பிள்ளைப் பெத்த பச்சை உடம்பை இது காய்ச்சும் மருந்தாக நினைத்துக் குடிக்க வேணும்"

இது ஒரு மூட நம்பிக்கை என்றான் அறிந்திருந்தும், அவருக்கு அதைச் சொல்ல முடியவில்லை. "எனக்கு வேண்டாம்" என்று மாத்திரம் சுருக்கமாகக் கூறுகின்றேன்.

"இது மதுவென்று நினைக்காதே என்ரை செல்லம்! மருந்தென்று நினைத்துக் கொஞ்சம் எடு" அவர் கெஞ்சி மன்றாடுகின்றார்.

அவரை நிராகரித்து என்னால் தட்டிக் கழிக்க முடியவில்லை.

குடிப்பதாக நடித்து நாக்கைக் கொஞ்சம் நனைத்துக் கொள்கின்றேன். பின்னர் என் கண் முன்னே அன்று தான் அவர் முதன் முறையாகக் குடித்தார்.

பிறகு தினமும் எனக்குத் தருவதாக அவர் பாசாங்க பண்ணிப் பண்ணி தான் நிறையக் குடித்துக் கொண்டிருக்க ஆரம்பிக்கின்றார்.

அவருக்காக நான் நாக்கு நனைப்ப தற்கும் உறதியாக மறுத்து விடுகின்றேன்.

தொடர்ந்து ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாகப் போத்தல்கள் வீடு வந்த சேரு கின்றன. சாராயம், கள்ளு, கசிப்பு என வகையான குடிவகைகள்.

எனக்கு ஒன்று புரிகிறது.

குடிப்பது அவருக்குப் புதிய பழக்கமல்ல.

வேலைமுடிந்து வீடு வரும்போது எப்போதும் வாயில் வெற்றிலை போட்டு மென்று கொண்டு வருவார்.

"இதென்ன பழக்கம் என்றால்". "எனக்கு பீடா பிடிக்கும்" என்பார்.

அது ஏனென்பதை இன்று நான் உணருகின்றேன்.

இப்பொழுது அவருக்கு ஒளிவு மறை வில்லை.

வேலை முடிந்து மாலையில் வீடு வந்து சேரும் சமயம் குடிபோதையில் தள்ளாடிக் கொண்டு வருகின்றார்.

விடுமுறை நாட்களில் வீட்டில் தங்குவ தில்லை.

அவர் ஒழுங்காக வேலைக்குப் போவ தில்லை.

போதை தலைக்கேறி விட்டால் கொல்லும் சொல்லால் என்னை வசை பாடிக் கொண்டிருக்கின்றார்.

எங்கள் குழந்தை அவரைக் கண்டால் இப்பொழுது அஞ்சி அடங்கி ஓடி ஒழித்துக் கொள்ளுகின்றாள்.

அவர் செய்யும் அட்டகாசங்கள் பொறுத்துக் கொள்ள இயலாது நான் ஒரு வார்த்தை எதிர்த்துப் பேசினால் போதும், உடனே நான் கற்பிக்கும் கல்லூரியைக் குத்திக் காட்டி இழித்து வசை பேசுகின்றார்.

நான் எடுத்துக் கொண்டு வரும் சம்பளக் காசைப் பலவந்தமாகப் பறித்தெடுத்துக் கொண்டு குடிப்பதற்குப் போகின்றார்.

"அந்தக் கல்லூரியில் படிப்பித்து வாங்கி வந்த சம்பளக் காசைப் பறித்துக் கொண்டு போக வெட்கமாக இல்லையா?" என்று கேட்டால், "மீன் விற்ற காசு நாறாது, நாய் விற்ற காசு குரைக்காது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டது உனக்குத் தெரியாதேயெடி?" என்பார்.

இப்பொழுது அவர் உத்தியோகத்தில் இருக்கின்றாரா? அல்லது அதையும் இழந்து விட்டாரா? என்பதை நான் அறிய மாட்டேன்.

நான் கல்லூரி முடிந்து வீடு திரும்பிச் செல்லும் வேளைகளில் அவர் அங்கு தங்கி நின்றால் போதும், வழமையான பழிப்பும் இழிப்பும் சொல்லி மங்களம் பாடி வரவேற்கத் தவறமாட்டார்.

இன்று ஆசிரிய தினம்.

ஆசிரியர்களைக் கௌரவித்து பெருமைப் படுத்தும் நன்னாள்.

எனக்கு நல்லாசிரியர் விருது வழங்கிக் கௌரவித்தார்கள்.

என்னிடம் விஞ்ஞான பாடம் கற்ற மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

எனது மாணவர்கள் சிலர் வைத்தியர் களாகப் படித்து முடித்து வெளியேறி இருக் கின்றார்கள். வேறு சிலர் இன்று படித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

என்னிடம் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் எனக்கு அணிந்த மாலைகள், வழங்கிய அன்பளிப்பு கள் மலையாகக் குவிந்து கிடக்கின்றன.

நான் இந்தக் கல்லூரியில் பூரண அர்ப்பணிப்புடன் ஆசிரியப்பணி புரிவதன் பயனை உணர்வு பூர்வமாக இன்று அனுபவிக்கின்றேன்.

விழா முடியச் சற்றுக்கால தாமதமாகி விடுகிறது.

நான் என்றுமில்லாத மனநிறைவுடன் வீட்டுக்குப் புறப்படுகின்றேன்.

எனது மாலைகள், அன்பளிப்புக்கள் யாவையும் எப்படி வீட்டுக்கு எடுத்துப் போகலா மென்று சிந்தித்துக் கொண்டு நிற்கின்றேன். உயர்தரவகுப்பில் படிக்கும் மாணவர்கள் மூவர் என்னிடம் வருகிறார்கள்.

"ரீச்சர்... நாங்கள் எல்லாத்தையும் கொண்டு வந்த தாறம் நீங்கள் ஒண்டும் தூக்க வேண்டாம்"

நான் ஒரு கணம் யோசிக்கின்றேன்.

வழமைபோல மங்களம் பாடி நான் வரவேற்கப்பட்டால், இவர்களை என்னோடு அழைத்துக் கொண்டு சென்று அவமானப்படக் கூடாது. ஆனால் இவர்களுடன் செல்லும் போது... இவ்வளவு அன்பளிப்புகளையும் சுமந்து கொண்டு வருவது கண்டு... அப்படி நடக்காது... என்ற நம்பிக்கையுடன்... புறப்படுகின்றேன்.

நான் சயிக்கிளில் ஏறி முன்னே சென்று கொண்டிருக்கின்றேன்.

எனது மாணவர்கள் என்னைத் தொடர்ந்து பின்னால் வந்து கொண்டிருக் கின்றார்கள்.

நான் "கேற்றை"த்திறந்து உள்ளே வருகின்றேன்.

வீட்டு முன் கதவு படாரென்று திறக்கின்றது.

"வாடி பள்ளி... வா... இவளவு நேரமும் எங்கெயெடி இருந்திட்டு வாறாய் பள்ளி...!" அவர் என்னை வரவேற்கின்றார்.

நான் மரத்துப் போய் நிற்கின்றேன்.

எனது மாணவர்கள் மேலும் அடி யெடுத்து வைக்க இயலாது திகைத்துப் போய் நிற்கின்றார்கள். •

# தென்றலும் புயலும்

இளந்தென்றல் இதமாக வீசியது.
அழகான மரங்கள் பூத்துக் காய்த்து
அங்குமிங்கும் மகிழ்ச்சியோடு
அசைந்தாடிக் கொண்டிருந்தன.

திடீரென்று ஒருநாள் புயல் வீசியது.
அந்த அழகிய மரங்கள்,
வேரொடும், வேரடி மண்ணோடும்
பிடுங்கி எறியப்பட்டன.

புயற்காற்று ஒருவாறு அடங்கியது.
ஆயினும் வரட்சி நிலை நீடித்தது.
வீழ்ந்த மரங்கள் யாவும்
காய்ந்து சருகாக மாறின.

காய்ந்த மரங்களுக்கு
விஷமிகள் யாரோ வைத்த தீ
எங்கும் பரவி வியாபித்தது.
மரங்கள் எரிந்து சாம்பலாயின.

வேறு பிரதேசங்களில் இருந்து
புதிய இனமரக்கன்றுகளைத் தருவித்து,
புதிதாக நட்டு வளர்க்கும் முயற்சி தற்போது
வேகமாக நடைபெறுகிறது.

—கா.தவபாலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண

கெகிறாவ ஸஹானா

**1.சமூக வானொலி – எம்.சீ.ரஸ்மின்**

இன்றைய வானொலி இளைய தலைமுறையின் ஆற்றல்களை வலுப்படுத்துவதாகவன்றி, அவர்களைக் காந்தம்போன்று கவர்ந்திழுக்கின்ற ஒரு பண்டமாக மட்டுமே இயங்கிவருகின்ற நிலையில்- அதாவது, உள்ளார்ந்த பிணைப்புடன் அதனைக் கொண்டாடுவதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு வேண்டிய பொறுமை எமது இளைய தலைமுறையினரிடம் இல்லை; எந்த நேரமும் அதை விட்டு விலகி விடுவதற்கு ஏற்றவிதமாகவும், பொறுமையுடன் அவர்கள் ஈடுபாடு காட்டுவதற்கு உகந்த தீர்க்கமான வழிகாட்டல்களைத் தரும்விதமாகவும் நமது வானொலிகளும் இல்லை- கும்பலுக்காக இயங்குகின்ற இவ்வானொலிகளின் நிலை கண்டு மனம் கவலை கொண்டுள்ள நிலையில் இந்தப் புத்தகம் வெகு ஈரலிப்போடு நெஞ்சில் பதிகின்றது. "கும்பலுக்காக எதையும் செய்வது இலகுவானது. கும்பலைத் திருத்தி அதை உயர்த்துவதுதான் சிரமமானது" முன்பு எப்போதோ இத்தகையதொரு குறிப்பை சுபமங்களாவில் படித்த ஞாபகம்.

நூல் முழுவதும் ஒரு சிறந்த வானொலி நம்மிடம் இன்மை பற்றிய ஆதங்கம் உள்ளொளிக்க ரஸ்மின் எழுதியிருக்கும் இவ்வாய்வுக்கட்டுரைகள் "சமூக வானொலி" என்ற கருத்துருவை புதிதாக நமக்கு அறிமுகம் செய்கின்றன. "ஒரு வானொலி மக்களின் பங்குபற்றலை ஊக்குவிக்கின்றபோது, மக்களின் நலன்களைப் பாதுகாக்கின்ற போது,

# பன்மைத்துவம் பற்றிய புரிதலை முதன்முதலாகத் தருகின்ற, கவனிக்கப்படவேண்டிய மூன்று புத்தகங்கள்

சிறுபான்மை மக்களின் அபிலாஷைகளை (expectation), மனிதத்துவத்தை ஏற்படுத்துகின்றபோது, மக்கள் அன்றாடம் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளைத் தீர்க்கின்ற போது, மக்களின் சகல ஆலோசனைகளும் அதன் நிகழ்ச்சிகளில் விவாதிக்கப் படுகின்றபோது, சகல அபிப்ராயங்களுக்கும் பதில் வழங்கப்படுகின்றபோது, வர்த்தக ரீதியான ஒருமுகத்தன்மைக்கு அப்பால் கலாசாரப் பன்மைத்துவம் ஊக்குவிக் கப்படுகின்றபோது, இனிமையான குரல்வளத்திற்காக அன்றி பெண்களுக்கு பிரதான வகிபங்குகள் வழங்கப்படுகின்றபோது, பெரிய ஒலிப்பதிவுக் கலையகங் களின் இசை ஆதிபத்தியமாக இருந்தாலும்சரி ஆதிபத்தியத்திற்கு பொறுமை காட்டப் படாதபோது, எந்தவிதமான பாரபட்சமும் தணிக்கையும் இன்றி சகலரது சொற் களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்ற போது அது சமூக வானொலி யாகின்றது" என்று அதற்கு வரைவிலக்கணம் தருகிறார் ரஸ்மின்.



இவ்வாறு கொள்ளும்போது, சகல அபிப்ராயங்களையும், சகல சொற்களையும் பிரதிபலிக்கின்ற ஒரு வானொலி அனைத்து மக்களுக்குமான ஒரு கௌரவமான ஊடகமாக அமையமுடியுமா என்ற கேள்வி எழுகின்றது. உயரிய சிந்தனைகளுடன் கூடிய சிறந்த மனப்பாங்குகளை நோக்கி மக்களை ஆற்றுப்படுத்து கின்ற, வலுப்படுத்தகின்ற ஒரு சாதனமாக வானொலி பயன்பட வேண்டும் என்பதே இதன் உள்ளார்ந்த கருத்தாகக் கொள்ளப் படலாம். மேலும், சமூக வானொலி என்பது ஒரு கனவாக விரிகின்றது: "அது இயல்பில் பன்முகத்தன்மை கொண்டது. அதன் நிகழ்ச்சிகளில் வித்தியாசமான கருத்துகளைச் சேர்த்துக் கொள்ளல், முரண்பாடான கருத்துகளுக்கும் களம் அமைத்தல், பன்முகத் தன்மை கொண்ட சமூகத்திற்கு இடமளித்தல், வித்தியாசங்களையும், வேறுபாட்டையும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து கொள்ளும் பக்குவத்தையும் மனோ பலத்தையும் கட்டியெழுப்புதல் என்பனவற்றில் இப்பன்முகத் தன்மை வெளிப்படுகின்றது. இதனால், வானொலியை பன்மைத்துவத்திற்கான வானொலி என்றும் கொள்ளலாம்."

பன்மைத்துவத்தை ஏற்று, அதைப் புரிந்து கொண்டு அதனுடன் இணங்கி, இடங்கொடுத்த வாழவேண்டிய அவசியத்தை நாம் யாவரும் உணர்ந்திருக்கின்ற இத் தருணத்தில், வானொலி தன்னாலான உச்சகட்ட பணிகளை ஆற்றலாம் என்பதை இக்கருத்து எடுத்துரைக்கின்றது.

இலங்கையில் எண்பதுகளில் உருவாக்கப்பட்ட மகாவலி திட்டத்தின் வாயிலாகத் தோன்றிய புதிய பண்பாடும், நாகரிகமும் குறித்து மக்களை விழிப்படையச் செய்வதற்காகத் தோன்றிய, பிராந்திய வானொலிகள் இருந்த போதிலும் கூட அதிகம் பயன்தரும் என்று உருவாக்கப்பட்ட, மகாவெலி சமூக வானொலி பற்றிய மாற்றுக் கருத்துகளையும் முன்வைக்கிறது இந்நூல். மக்கள் சமூகமொன்றில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு மக்களாகவே நெடுங்காலத் தீர்வொன்றைப் பெற்றுக் கொள்ளும் ஆற்றலை விருத்திபெறச் செய்வதே சமூக அபிவிருத்தி என்றும், அது பொறுப்புள்ள நிறுவனங்கள் சமூகத்தின் தேவையை அறிந்து எவ்வளவு தூரம் செயற்படுகின்றன என்பதையும், சமூகம் கீழ் மட்டத்தில் எவ்வளவு செயற்படுகின்றது என்பதையும் உள்ளடக்கும் என்றும் விளக்கி இதற்காக இலங்கை அரசாங்கம் ஆரம்பித்த திட்டமே மகாவெலி திட்டமாகும் என்று கூறுகிறார் ரஸ்மின். அத்துடன் "தமது விருத்திக்கு மக்களே சரியான உந்துசக்திகளாகும். அன்றி, வெறும் உள்ளூட்டங்கள், வெளிவாரி முதலீடுகள், தொழில்நுட்பம் என்பவற்றால் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியாது" என்னும் ஜெக்குவைஸ் டியேப்பின் கருத்தினையும் மேற்கோள் காட்டுகிறார்.

கொழும்பில் இருந்தபடி கண்டியில் நிகழ்ச்சிக்கான உள்ளடக்கத்தை இலகுவில் தீர்மானிக்கமுடியாது என்று தாம் வலியுறுத்தப்பட்டதாகக் கூறும் மகாவெலி சமூக வானொலியின் தயாரிப்பாளர் குழுவினரில் ஒருவரான விஜேதாச ஹேவகேயின் பேட்டியையும் உள்ளடக்கி, மக்களுக்காக வானொலி நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும்போது எவ்வளவு விடயங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்பதை தாம் மேற்கொண்ட பயிற்சிநெறி பெற்றுத் தந்ததாகவும் அவர் கூறியதை எடுத்துக் காட்டி, அன்றைய ஒலிபரப்பாளர்களிடம் தமது சமூகத்தின்பேரில் காணப்பட்ட அர்ப்பணிப்பை நூலாசிரியர் சிலாகிக்கிறார். ஏறத்தாழ பத்துவருடங்கள் வெற்றிகரமாக நடாத்தப்பட்ட இவ்வானொலியில் கடமை




யாற்றியவர்கள் எல்லோரும் தற்போது ஒலிபரப்புத் துறையில் பிரகாசித்துக் கொண்டிருப்பதாகவும், அதன் நிகழ்ச்சிகள் இன்று சிரச முதலிய பல் வேறு வானொலி நிலையங்களால் பின்பற்றப்படுவதாகவும் ஹேவகே கூறுவதை அடியொட்டி அரச இயந்திரத்துக்குள் இருந்து கொண்டே அவ்வானொலி மக்களின் பங்கு பற்றுதலை உறுதிப்படுத்தி, அவர்களுடன் நெருக்கமான தொடர்பைத் தக்க வைத்துக் கொண்டதாகவும் ரஸ்மின் கூறுகிறார்.

பின்னாளில் கள ஆய்வுகள் புறக்கணிக்கப்பட்டமையும், சமூக வானொலி பற்றிய தெளிவான பிரக்ஞையுடையவர்கள் பதவிகளில் அமர்த்தப்படாமையும், புதிதாக ஆட்சிக்கு வரும் ஆட்சி நிறுவனங்கள் ஊடகம் தொடர்பான வித்தியாசமான கொள்கைகளைக் கொண்டிருந்தமையும், தொடர்ச்சியாக நஷ்டத்தில் இயங்கியமையும், தனியார் ஒலிபரப்பு நிறுவனங்களுக்குப் போட்டியாக வருமானமீட்டும்படி பணிக்கப்பட்டமையும், சமூக வானொலிகளைத் தேசிய ஒலிபரப்பு நிலையங்கள் ஒரு தலையிடியாகக் கொண்டமையும் இவ்வானொலிகள் செயலிழந்து போனமைக்கான காரணங்கள் எனக் காட்டும் நூலாசிரியர், சமகால சமூகவானொலிகளும் இதே பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன என்கிறார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவத்தினர் பெற்றுக்கொடுத்த வெற்றிக்கு சமாதானம் என்று பெயர் வைத்தது நமது பிரதான நிலை ஊடகங்களும், அதிகார வர்க்கமும்தான் என்று துணிச்சலாகத் தன் கருத்தை முன்வைக்கின்ற ரஸ்மின் இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பதவியில் இருக்கின்ற ஆழ்ந்த சிந்தனையுள்ள இளைஞராவார். ஒருநாட்டின் சமூக வளர்ச்சியில் சமூக வானொலிக்கு அளப்பரிய பங்குண்டு என்ற செய்தி மக்கள் மயப்படுத்தப்படவில்லை என்றும், இது பற்றிய விழிப்பணர்வு மக்களிடம் முடக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கவலை தெரிவிக்கின்றார். அபிவிருத்திக்குத் தொடர்பாடல் என்ற துறையை அறிந்தவர்களும், அதனை நம்புபவர்களும், அதனை ஆதரிப்பவர்களும் மிகக்குறைவு என்றும், அதன் தாக்கம் இன்றைய வானொலி நிகழ்ச்சிகளில் தெளிவாக வெளிப்படுகின்றது என்றும், பல வானொலி நிகழ்ச்சிகளை ஆதாரம்காட்டி விளக்குகிறார்.

"யுத்த நடவடிக்கைகளில் பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பான்மையினரின் அதீத பெருமித உணர்வும், தமிழ் மக்களின் நொந்துபோன நிலையும் சமூக இடைவெளியை அதிகரிக்கும்" என்றும், "ஊடகங்கள், கல்வித் திட்டங்கள் வாயிலாக சமாதானத்திற்கான கலாசாரப் பரிமாற்றங்கள் இடம்பெறுவதில்லை" என்றும் கருத்தைக் கூறுகின்ற சிங்கள எழுத்தாளர் சிட்னி மாக்கஸ் டயஸினை மேற்கோள் காட்டி, சகோதர சமூகத்தின் ஒட்டுமொத்த வாழ்வியல் தொடர்பான பரிச்சயத்தை வளர்ப்பது இலங்கையில் உள்ள சமூக வானொலிகளின் கட்டாயக் கடமையாகும் என்ற தனது கருத்தையும் முன்வைக்கிறார். கையடக்கத் தொலைபேசியைக் கொண்டே உல்லாசத்தையும், களிப்பூட்டல்களையும் வழங்கிக்கொண்டிருக்கின்ற பிரதான நிலை ஊடகங்களுக்கெதிரான ஒரு ஒலிபரப்புக் கலாசாரத்தைக் கட்டியெழுப்பலாம் என்ற ஆலோசனையையும் முன்வைக்கிறார்.

ஒலிபரப்புத்துறையில் பெண்களின் பங்குபற்றல் பற்றி ஆராயும்போது, ஒலிபரப்பு அரசியல் மயப்பட்ட சூழ்நிலையில் பெண்கள் தமது பணியினை உச்ச செயற்றிறனுடன் வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பு மிகக் குறைவாகவே உள்ளது என்ற உண்மையையும். நமது பிரதான நிலை இலத்திரனியல் ஊடகங்கள் பெண்களைக் கவர்ச்சிப் பொருட்களாகத்தான் கட்டமைத்துள்ளன என்ற கவலையையும் இந்நூலில் வெளிப்படுத்துகிறார் நூலாசிரியர். இவ்வூடகங்களில் ஆண்பால்மைய மொழிநடை பயன்படுத்தப்படுவதைக் கண்டிப்பதுடன், ஒரு பொதுமைப்படுத்தப்பட்ட மொழியைக் கையாள்வது பால்நிலைச் சமத்துவத்தைப் பேணிக்கொள்ளத் துணையாக இருக்கும் என்றும் கூறுகிறார். நான் அறிந்த வரையில் பெண்களின் ஒலிபரப்புத்துறைசார் பிரச்சினைகளை இந்தளவு நுணுக்கமாகவும், நடுநிலையாகவும் ஆராய்கின்ற வேறொரு கட்டுரை தமிழில் எழுதப்படவில்லை என்றே தோன்றுகின்றது. அத்துடன் இன்றைய அறிவிப்பாளர்கள் பயன்படுத்துகின்ற சமூகக் கிளைமொழிகளையும் தனியானதொரு அத்தியாயத்தில் ஆராயும் நூலாசிரியர், "சொல்ல வந்த விடயம் பற்றிய அறிவும் தேடலும் இல்லாத நிலையில் சுற்றி வளைத்து விளக்கம் சொல்வது மொழியை அசட்டை செய்வதாகும்" என்ற ரீதியில் தன் கருத்தைத் தெரிவிக்கின்றார். சிந்தனையாழம் மிக்க மக்களைத் தன்வயப்படுத்தத் தவறியிருக்கின்ற இன்றைய நமது இலத்திரனியல் ஊடகங்களின் தோல்விக்கு அதில் பணியாற்றுபவர்கள் பயன்படுத்துகின்ற மொழியும் ஒரு காரணமாகவே அமைந்துள்ளது என்னும் கருத்தைக் கொண்டுள்ள எனக்கு இது மிக உடன்பாடாகவே தோன்றுகின்றது.

மக்கள்சேவை ஒலிபரப்பு என்பது, ஒரு தேசிய அரசாங்கம் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கவேண்டிய உரிமைகளில் ஒன்று எனக் கூறி, மக்களைத் தத்தம் அடையாளங்களின் பேரில் உணர்ச்சி வசப்பட வைக்கும் ஒரு கருவியாக ஒலிபரப்பு இன்று மாறிவிட்டது என்று வருத்தமும் தெரிவிக்கிறார் ரஸ்மின்.

மொத்தத்தில் "சமூக வானொலி" எனும் இந்நூல் வானொலிமீது முன்னொருகால் அபிமானம் கொண்டு, இன்று ஆற்றொணாது தவிக்கின்ற என்போன்ற பரிதாபிகளுக்கு ஒரு ஒத்தடமாக அமைந்துள்ளது என்பேன்.

**2.போர்க்கால சிங்கள இலக்கியங்கள் ஒரு பன்மைத்துவ ஆய்வு (1983–2007)–எம். சீ. ரஸ்மின்.**

அணிந்துரையில், கடந்த முப்பது வருடகால இனமுரண்பாடும், யுத்தமும் தமிழ் இலக்கியத்தில் தாக்கம் செலுத்திய அளவுக்கு சிங்கள இலக்கியத்தில் தாக்கம் செலுத்தியுள்ளமை மிகக்குறைவு எனக்கூறும் திரு. எம். ஏ. நுஃமான், சிங்கள இலக்கியங்களில் யுத்தத்தைப் பற்றிய இந்த மௌனம் தானே ஒரு கருத்துரையாகும் என்று கூறுகிறார்.

ரஸ்மின் தனது பட்டப் படிப்புக்காக ஏழாண்டு காலமாகச் செய்த ஆய்வுகள் இப்போது விரிவுபடுத்தப்பட்டு 220 பக்கங்களில் நூலாக்கப்பட்டுள்ளன. சிங்கள மொழியில் தேர்ச்சியும், அம்மொழிமீது காதலும் கொண்ட ரஸ்மின், தனக்கு இத்தகைய ஒரு முயற்சியில் ஈடுபடுவதற்கான ஆர்வத்தை ஏற்படுத்திய காரணிகளாக மனிதநேயப் படைப்பாளி சிட்னி மாக்கஸ் டயஸுடன் ஏற்பட்ட இலக்கியத் தொடர்பையும், பிரபல சிங்களக் கதாசிரியர் குணசேன விதானகேயின் எழுத்துகளில் ஏற்பட்ட ஈடுபாட்டையும், நன்மக்கள் கீதம் எனப்படுகின்ற "சாது ஜனராவய" பாடல்களையும் குறிப்பிடுகிறார்.


நிலையான சமாதானத்தை அடைவதற்கான சுலபமான ஒரு கருவியே பன்மைத்துவம் என்பதை முன்னைய நூலில் கூறியதைப் போன்றே இதிலும் அடித்துக் கூறுகிறார். அத்துடன் முன்னைய நூலில் கூறியதுபோன்றே பல்வகைமையைப் புரிந்துகொள்ளல், முரண்பாட்டு நிலை மாற்றத்தை நோக்கி உரையாடலை ஊக்குவித்தல் என்பதான பன்மைத்துவத்தின் கூறுகள் இன்றைய நமது கல்விச் செயற்பாடுகளில் இல்லை என்பதை இந்நூலிலும் கவலையுடன் தெரிவிக்கிறார். மேலோட்டமாக அதிகார மட்டத்தில் கூறப்படும் சமாதானம், மீளிணக்கம் ஆகிய சொற்கள் மாணவர்களின் நேர் நிலைச் சிந்தனைகளைத் தாக்குமளவிற்கு அதிசக்தி வாய்ந்தவை என்றும் முன்போலவே கருத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவிக்கிறார்.

போர்க்கால சிங்கள இலக்கியங்களின் பின்புலம் பற்றி மிக நுணுக்கமாக ஆராயும்போது ரஸ்மின், 1956இல் தனிச் சிங்களமொழிச்சட்டம் ஆரம்பத்தில் ஆங்கில மொழியின் செல்வாக்கைக் கட்டுப்படுத்தவே தோன்றியதெனினும், திட்ட மிட்டோ, திட்டமிடாமலோ இனமுரண்பாட்டை ஊக்குவித்த பிரதான காரணிகளில் ஒன்றாக சிறு பான்மையினரின் மொழிக்கு மதிப்பு வழங்காமை என்ற காரணியையும் குறிப்பிடுகிறார். இன்னும் மிக முக்கிய காரணங்களாக தமிழர்களின் கல்வி வளர்ச்சி மீதான உரிமை மறுப்பு, இந்திய வம்சா வளித் தமிழர்மீது காட்டப்பட்ட மாற்றாந்தாய் மனப் பான்மை, வரலாற்றுக் காயமாகப் பதிந்து போன ஜூலை இனக்கலவரம், அதன்பின்பு தோற்றம் பெற்ற தமிழ் கொரில்லா இயக்கங்கள், சிங்கள மதபோதகர்களின் துவேஷமான போதனைகள், தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள், காணி சுவீகரிப்புகள், தமிழ்க் கிராமங்களின் பெயர் மாற்றங்கள் (உ-ம்- பார்வதி கிராமம் - பதவிய, பட்டிப்பளை- கல்லோயா, மணலாறு-வெலிஓயா), சிங்கள முதன்மைவாதம் என்பவற்றையும் குறிப்பிடுகிறார். அடுத்து. சிங்கள தமிழ் இலக்கிய உறவு பற்றிக் குறிப்பிடும் நூலாசிரியர், சிங்களப் பாடலிலக்கியம் எனும் தனியான அத்தியாயம் மூலமாக சிங்களப் பாடல்களில் கையாளப்படும் இனஉறவு பற்றிய கருத்துகளை ஆராய்கிறார். "சிங்கள இசைப்பாடல்களை இலக்கியம் என்று அழைக்கும் மரபு மிக நீண்டகாலமாகவே சிங்களப் பேராசிரியர்கள் மத்தியிலும் நிலவி வந்துள்ளது என்ற தனது அத்தியாயத்திற்கான ஆதாரமும் காட்டுகிறார். திலீபன் மரணத்தின் பின்னர் பாடப்பட்ட சாது ஜனராவய குழுவினரின் "நானும் நீயும் ஒரு தாயின் பிள்ளைகள் திலீபன்" என்ற பாடலைப் பற்றியும், பிரேமகீர்த்தி டீ அல்விஸ் எழுதிய மன்னார் மணல்வெளியில் சந்தித்த "குணடுமணி" என்ற பெண்ணைப்பற்றிய பாடலைப்பற்றியும், மாலன் கருணாநாயக்க எழுதிய போராளித் தமிழ் இளைஞர்களின் கடினமான வாழ்க்கையை மனிதா பிமானத்துடன் பார்க்கும் பாடலைப்பற்றியும், முதன்முறையாக இந்நூல் மூலமாக அறிந்து கொள்ளும்போது எமது உள்ளம் நெகிழ்ந்து போகின்றது. இத்தகைய கருத்துகள் பன்மைத்துவத்திற்கு உதவுவன என்று கூறும் அவர், இத்துறையில் பங்களிப்பு செய்தோரில் ரத்னசிறீ விக்கிரமநாயக்க, செனரத் கோரல, ஜயவடு விதான ஆகியோருடன், பராக்கிரம கொடிதுவக்கு மலையக மக்களின் பிரச்சினைகளையும், அதிகாரத்தின் பிடிக்குள் சிக்கி அவர்கள் படும் துயரங்களையும் பற்றி எழுதியிருப்பதாகக் கூறுகிறார். மேலும், ஜூலை இனக்கலவரத்திற்கு அடிகோலிய சிங்களவர்களை "அசிங்கள யன்" என்று விளித்து தனது வருத்தத்தை வெளிப் படுத்தும் நந்தன வீரசிங்ஹ புரிதலின் தனித்துவத்தைப் பகிரங்கமாக வெளிப்படுத்து கிறார் என்றும் ரஸ்மின் கூறுகிறார். இவற்றையெல் லாம் எடுத்துக் காட்டுவ துடன் நின்றுவிடாது "இலங்கையில் சமா தானத்தை ஏற்படுத்தும் பணி யில் இலக்கியம் ஏன் இன்னும் பயன்படவில்லை?" என்ற வினாவையும் எழுப்புகிறார். இவ்வினா அவரது வானொலி பற்றிய கருத்துகளிலும் வெளிப்படுவது நோக்கத்தக்கது. சிங்களச் சிறுகதைகளில் மாப்பசான், என்டன் செக்கோவ் ஆகியோரின் தாக்கம் அதிகம் இருப்பதாகக் கூறும் ரஸ்மின், சிங்கள இசைப் பாடல்களிலும், சிங்களச் சிறுகதைகளிலும், நாவல்களிலும் நிகழ்ச்சிகளை சமூக அரசியல் கண்ணோட்டத்துடன் நோக்கும் ஆற்றல் உள்ளது என்றும் சிங்கள மக்கள் மத்தியில் மாற்றுச் சமூகத்தினரை எற்றுக்கொள்ளும் மனோபாவம் அதிகமாக உள்ளதெனவும், ஆனால், இன முரண் பாடு தொடர்பான புரிதல் குறைவாக உள்ளதென வும் தனது அனுபவப்பேற்றை வெளிப்படுத்துகிறார். அவரது உதாரணங்களின்படி "ரக்ஷயாகே யாத்திரிய" எனும் சிறுகதை மனிதாபி மானத்திற்கு மிக உயர்ந்த இடத்தை வழங்கி மானிட ஒற்றுமையை வலியுறுத்துவதை அறியமுடிகிறது. அவ்வாறே நாவல்களில் "யாப்பனயட்ட பாலமக்", "வனசப்புமல" முதலிய நாவல்களைக் குறிப்பிடு கிறார். இத்துறையில் பங்களிப்புச் செய்தோராக நிஹால் பீ. ஜயதுங்க, விமலதாச சமரசிங்க, சுகத பால மெண்டிஸ், குணசேன விதானகே, சந்திர ரத்ன பண்டார ஆகியோரை அறியமுடிகிறது.




இந்நூலின் இறுதி அத்தியாயங்களில் இனமுரண்பாட்டை வலுப்பெறச்செய்து பன்மைத் துவத்தை நிராகரிக்கின்ற சில படைப்புகளைப் பற்றியும் எடுத்துக் கூறுகிறார். சில வெறித்தனமான பாடல்கள் யுத்தகாலத்தில் வானொலியில் அதிகம் ஒலிபரப்பப்பட்டன என்றும், சில பாடல்கள் சிறுபான்மையினரைச் சுட்டாவிடினும் வன்முறை முற்றிய தருணங்களில் பொருள் வித்தியாசத்தைத் தந்தன என்றும் கூறுகிறார். சில பாடல்களில் இன வுறவு என்பது பாலியல் சார் ஆசையாக வெளிப் படுவதையும் எடுத்துக் காட்டுகிறார். இவ்விடத்தில் சமூகவானொலியில் எடுத்துக் காட்டியதைப் போலவே "யுத்தமுடிவு என்பது முக்கியமானது என்ற போதிலும், அவ்வெற்றியே சமாதானமாகிவிடாது. அவ்வெற்றி ஒரு இனத்துக்கு மட்டுமுரிய வெற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யாக ஆகிவிடாது" என்ற கருத்தை வலியுறுத்துகிறார். திரைப்படங்களிலும் நாடகங்களிலும் மோசமான உடையணிந்து கொச்சைத் தமிழ் பேசுபவர்களாக தமிழர்கள் சித்திரிக்கப்படுவதாகவும், தமிழர் பண்பாடுசார் மொழிபெயர்ப்பு என்பது இட்லி, தோசை, வடை என்பவற்றைக் கொண்டு பல இடங்களில் வெளிப்பட்டுள்ளதாயும், இவற்றில் வரும் பெண்பாத்திரங்கள் யாவும் சிறுபான்மைச் சமூகத்தினரைச் சார்ந்திருப்பதாயும் காட்டப்படுவதாகக் கூறுவதுடன், இவற்றில் "தெற்கு" எனும் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கும் விதம் பற்றியும் மிக ஆழமான கருத்துகளை முன்வைக்கிறார். சில படைப்புகளில் இலங்கை சிங்களவர்களுக்கு மாத்திரமான நாடு என்ற குரலுயர்வு தொடர்ந்தும் முரண்பாட்டு நிலையை உயர்த்திக்கொண்டே வருவதை துணிச்சலாக எடுத்துக் கூறும் நூலாசிரியர், எவ்வாறிருந்த போதிலும் கற்றறிந்த சமூகத்தினர் இக்கருத்துகளை நிராகரித்தே வந்துள்ளனர் என்ற ஆறுதலான செய்தியையும் முன்வைக்கிறார். முரண்பாட்டுத் தீர்வுக்குப் பங்களிக்கவேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்ட மஞ்சுள வெடிவர்தன போன்றோரின் கவிதைகள் தமிழ், சிங்கள மக்களிடம் சென்று சேரவேண்டும் என்ற தனது ஆவலையும் வெளிப்படுத்துகிறார்.

வித்தியாசமான அட்டைப்படத்துடன் வெளிவந்திருக்கும் இந்நூல் "சமூக வானொலி" யைப் போலவே தமிழுக்கு மிகவும் புதியது.

**3. மொழி வேலி கடந்து – நவீன சிங்கள இலக்கியங்கள் பற்றிய ஒரு பார்வை – மேமன்கவி**

நவீன சிங்கள இலக்கியம் மிகப் பிரமாண்டமான அளவுக்கு வளர்ந்துள்ளது என்ற கருத்தியலைக்கொண்ட ரஸ்மினின் கருத்தோடு மிக இணங்கிப் போகின்றவரான மேமன்கவி தான் படித்த, தமிழ்மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட சிங்கள நூல்களைப்பற்றி அவ்வப்போது எழுதிய கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இவரது கருத்துப் படி இனநல்லுறவை விருத்தி செய்யும்வகையிலும், 1983 ஜூலைக் கலவரம் அனைத்து இன மக்களையும் பாதித்துள்ளது என்ற வகையிலும் எழுதப்பட்ட கதைகளாக மீன் வலை (மடுளுகிரிய விஜேரத்ன), வண்டில்(சோமரத்ன பால சூரிய), பிசாசின் இரவு (தயா சென குணசிங்க) ஆகியவற்றை எடுத்துக் காட்டுகிறார். அவ்வாறே காலா காலமாக புரிந்துணர்வு, ஒருமைப்பாடு, நெருக்கம் என்பன எமது நாட்டின் எல்லா இனங்களுக்கிடையிலும் இருந்துவந்தாலும் ஆங்காங்கே சில இடறல்கள் ஏற்பட்டிருப்பதை "விடைபெற்ற வசந்தம்"(உபாலி லீலாரத்ன) எனும் நாவல் மூலமாக எடுத்துக் காட்டுகிறார். மேலும் 83 இனக்கலவரத்தின்போது தனது நண்பராகிய செல்வ ராஜாவைக் காப்பாற்றிப் பாதுகாத்ததன் மூலமாக தயாரத்ன எனும் சிங்களவர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை எடுத்துக்காட்டும் நெருப்புக் கண்ணீர்(கமல் பெரேரா) எனும் நாவலினூடு வெளிப்படும் சமூக அரசியலைப் பற்றி எடுத்துக் கூறுவதுடன், தமிழர் மீது




மனிதாபிமானம் கொண்ட சிங்களவர்களும் இருக்கிறார்கள் என்பதாகக் காட்டியபோதிலும், மாற்று நடத்தைகளைச் சித்திரிக்கும் பாத்திரங்களையும் உலவ விட்டுள்ள நாம் நண்பர்கள் (அனுலா டீ சில்வா) எனும் நாவலில் அதுபற்றிய கண்டனமோ, விமரிசனமோ இன்றி நாவலாசிரியர் சித்திரித்துச் செல்வது அம்மனோ பாவங்களையும், நடத்தைகளையும் அங்கீகரிப்பது போலான எண்ணத்தை ஏற்படுத்துகின்றது என்றும் கூறுகிறார். அவ்வாறே நண்பர்கள்(தெனகம சிரிவர்தன) நாவலில் ஒருபக்கச் சார்பு நிலை போன்ற வாசிப்பு ஏற்படுவதாகவும் கூறுகிறார். எனினும்கூட, இந்நாவல் சிறுவர்களிடையே இனக் குரோதம் இல்லை என்ற செய்தியைக் கூறுவதாகவும், இனமுரண்பாட்டினை வர்க்க முரண்பாடாகப் பார்க்கும் மிக ஆழமான நாவலாக அமைந்திருப்பதாகவும் மேமன்கவி கூறுகிறார்.

மேலும், சுடுமணல்(சுனில் சாந்த) எனும் நாவல் இனப்பிரச்சினை ஏற்படுத்திய பின் விளைவுகளை எந்த இனத்திற்கும் சார்பாகநின்று பேசாத நாவலாகக் குறிப்பிடுகிறார். ஜயதிலக்க கம்மல்லவீர எழுதிய ஆ யூ ஒல்ரைட், பொய் சொல்ல வேண்டாம், மனிதர்கள், பேய்கள், தெய்வங்கள் ஆகிய கதைகளில் இனநல்லுறவு பற்றிப் பேசவந்தாலும், சில கருத்து மாறாட்டங்கள் இடம்பெறுவதை ரஸ்மின் கூறியதைப்போலவே மேமன்கவியும் சுட்டிக்காட்டுகிறார்.

எழுபதுகள் தொடக்கம் எழுதிவருகின்ற குணசேன விதானகேயின் "பாலம்" சிறுகதைத் தொகுதி, தேசிய ரீதியில் ஏதோ ஒருவகையில் சிங்களவருக்கெதிராகத் தமிழரும், தமிழருக்கெதிராக சிங்களவரும் நடந்து கொண்டிருக்கின்றனர் என்பதைப் பதிவு செய்வதாகக் கூறி, இனப்பிரச்சினைக்கு கலப்புத் திருமணமே சிறந்த நிவாரணம் என்ற கருத்தை இவ்வெழுத்தாளர் வலியுறுத்துவதாகவும் எடுத்துக் காட்டுகிறார். இது குறித்து ஆழ்ந்த சிந்தனை தேவைப்படுவதை இன்றைய காலகட்டம் உணர்த்தி நிற்கின்றது எனலாம். சிங்கள இலக்கியங்கள் உலகமயமாக்கல், புலம்பெயர் சூழல், முதலாளித்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிக்கம், நில அபிமானம், ஜீவகாருண்யம், சுற்றுப்புறச் சூழல் மீதான அபிமானம், பெண்களின் பிரச்சினை, பிக்குகளின் பிரச்சினை, பின் காலனியம் முதலியன பற்றியும் பேசியிருக்கின்றன என்பதை இந்நூல் வாயிலாக சுட்டிக்காட்டும் மேமன்கவி, இம் மொழிபெயர்ப்புகளில் ஏற்பட்டுள்ள சில குறைபாடுகளையும் எடுத்துக் காட்டுகிறார்.

இரு நூலாசிரியர்களுமே சிங்கள இலக்கியங்கள் பற்றிய முக்கியமான ஒரு கருத்தை முன்வைக்கிறார்கள். அது- இஸ்லாம், முஸ்லிம்கள், அவர்களது கலாசாரம் பற்றிய விடயங்களில் ஆழமான பரிச்சய மின்மையை சிங்கள நூல்கள் கொண்டு காணப்படு கின்றன என்பதாகும். எதிர்காலத்தில் இக்குறைபாடு நிவர்த்தி செய்யப்படலாம்.

மொத்தத்தில் பன்மைத்துவம் பற்றிய புரிதலை உருவாக்குவதில் இம்மூன்று நூல்களுமே வெற்றி பெற்றுள்ளன எனலாம். •

- **சாரல்நாடன்**

## கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பார்வைக்கு

பூரண ஆளுமை கொண்ட நல்லதொரு சமூகத்தை உருவாக்கும் பணியில் கல்வி வெளியீட்டு திணைக்களம் புத்தகங்களை வெளியிட்டு வருகிறது.

இத்திணைக்களத்தில் பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளராக பிரபல விமர்சகர் லெனின் மதிவானம் விளங்குகிறார். இவர் மலையகத்தைச் சேர்ந்தவர். கூடவே, பாடநூல் மதிப்பீட்டாளராகவும் மலையகத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். நூலாக்கக் குழுவிலும் மலையகத்தைச் சேர்ந்த மூவர் கடமையாற்றுகின்றனர். பொதுவில் மலையகம் குறித்த சரியான தகவல், வெளியீடுகளில் இடம்பெறுவதில் தடங்கலேற்படவில்லை என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. சரி இனி விஷயத்துக்கு வருவோம்.

அறுபதையொட்டிய காலப்பகுதியில் இலங்கை பல்கலைக்கழக விரிவுரையாளர்களும். ஸிவி வேலுப்பிள்ளை, கே.கணேஷ் முதலிய மூத்த எழுத்தாளர்களும் சில கட்டுரைகளை எழுதி இருந்தார்கள். அவைகளுள் சில தகவற்பிழைகளுடன் எழுதப்பட்டிருந்தன. ஆரம்ப காலத்தில் வந்த கட்டுரைகள் என்பதால் அத்தகவற்பிழைகள் எதிர்பார்க்க கூடியவைதாம். ஐம்பதாண்டு காலத்தின் பின்னரும் அக்கட்டுரைகளை மீளப் பிரசுரிப்பதன் மூலம், மலையகத்தில் மலர்ந்து வந்திருக்கிற புதுமைகளுக்கு இடங் கொடாத நிலமையைக் காண்கிறோம். உண்மையில், தவறான தகவல்களுடன் வெளிவந்த அக்கட்டுரை களுக்கு மாற்றீடாக புது கட்டுரைகளைப் பிரசுரிப்பதற்க கல்வி வெளியீட்டு திணைக்களம் முயற்சிகளை எடுத்திருக்க வேண்டும். மலையகத்திலிருந்து கவிதைகளும், சிறுகதைகளும் இப்புத்தகங்களில் வெளிவந்திருக்கின்றன. பா.தங்கம், சி.அன்னபூரணி ஆகியோரின் கதைகளும், பூண்டுலோயா தர்மு, ஜெயம்(ஏ.பி.வி.கோமஸ்), மல்லிகை சி.குமாரின் கவிதைகளும், அவர்களின் பத்திரிகை எழுத்துக்களி லிருந்து எடுத்து வெளியிடப்பட்டுள்ளதை கவனத்தில் எடுக்கையில் மலையக எழுத்துக்கள் ஏதோ ஒரு துறையில் கவனிக்கப்படுகின்றன என்பது புலனாகிறது. சமகால அறிவியல் தொடர்பாடல் யுகத்தின் பாதையில் பயணிக்கதக்கவிதத்தில் தான் சார்ந்த சமூகத்தையும் இலக்கிய வாசிப்புப் கூடாக விளங்கிக் கொள்ள ஏதுவாக வெளியீட்டுத் திணைக்களம் பயனாற்றுதல் வேண்டும். மலையகத்தில் வாழும் பாரதி என்று பேரெடுத்த குறிஞ்சித் தென்னவன் கவிதைகள் பல்லாண்டு காலம் வெளியீட்டுத் திணைக்களத்தின் பார்வைக்கு கிட்டாமல் இருந்தது. இறுதியாக இப்போது நடைபெறும் உயர்வகுப்பு பாடத்திட்டத்தில் அவரது கவிதைகள் சேர்க்கப்பட்டிருப்பதைக் கவனிக்கையில் - குறிஞ்சிதென்னவன் கவிச்சரங்கள் 2007ல் வெளியானதன் பிறகு, சாத்தியமாகியுள்ளது என்பதை கவனிக்கையில் 1978ல் பேராசிரியர் சி.தில்லைநாதன் "பிரசுர வசதி குன்றிக் கிடப்பதும், பல ஆக்கங்கள் நூலுருப்பெறாது இருப்பதும் கவலை தருவதாகும்." என்று மலையக இலக்கியம் குறித்து எழுதியிருப்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

நாவல்களை எடுத்து நோக்குகையிலும் இன்னும் கோகிலம் சுப்பையாவின் தூரத்துப் பச்சையையும் சிவியின் வீடற்றவனையும் விட்டு நாம் முன்னேறவில்லை. ஸ்ரீபாத கல்வியில் கல்லூரியிலும் சப்ரகமுவா பல்கலைக்கழகத்திலும் வைக்கப்பட்டிருக்கும் நூல் இதனை வெளிப்படுத்தும்.

தெளிவத்தை ஜோசப், மலரன்பன், மு.சிவலிங்கம் ஆகியோரின் தொகுப்புகள் வெளி வந்திருக்கின்றன. இவைகளில் எதுவும் வெளியீட்டுத்திணைக்களத்தினரின் பார்வையில் படவில்லையா?

தலைவர்களைப்பற்றிய நோக்கம் இப்படித்தானிருக்கிறது. மலையகத் தலைமை என்று கூறுவதற்கு எவருமேயில்லையா? தங்கள் சமூக தலைவர்களைப் பற்றி பாடநூல்களில் படிக்க நேரும்போது தான் மாணாக்கர்கள் சமூக உணர்வுடனும், நம்பிக்கையுடனும், ஆக்கத்திறனுடனும் வளர்வர்.

இலங்கைத் தமிழ்சுடர்மணிகள் வரிசையில் குமரன் வெளியீட்டகம் நடேசு அய்யரையும், சிவி வேலுப்பிள்ளையையும் பற்றிய இரண்டு புத்தகங்களை வெளியிட்டிருக்கின்றன.

இவைகள் வெளியீட்டுத் திணைக்களத்தின் பார்வைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம்:– கலாநிதி கே. ஜயதிலக
தமிழில்:– எம்.எம். மன்ஸூர்

# இரும்பு மனிதன்

மாமியைத் திருமணம் முடித்துக் கொடுத்து இப்பொழுது பதினேழு வருடங்களாகியும் அப்பா மாமாவின் வேளாண்மை விதைப்புக்கும், அறுப்புக்கும் அவசியமான உதவிகளை இன்னும் செய்து கொண்டுதான் இருக்கிறார். வருடா வருடம் உழுவைக்கு மாட்டு சோடியைத் தவறாமல் அனுப்பி வைப்பார். பெண் பிள்ளைகளுக்கு உதவி வரும் பழக்கம் கிராமத்தவர்களிடம் ஒரு மரியாதைப் பண்பாக இருந்து வருகிறது.

ஒரு வருடம் மாமாவின் வயல் உழுவைக்கு மூன்று சோடி மாடுகளை அனுப்பி வைத்தார் அப்பா. உழுவைக்கு முந்திய நாள் மாடுகளை ஓட்டி வந்து சேர்த்தது நானும், திஸ்ஸவும் தான். திஸ்ஸ, மாமாவின் மூத்த பையன், மாடுகளை சூரியன் மறையும் மட்டும் வயல் வரம்புகளில் மேய விட்டு புல்லை உண்ணக் கொடுத்து உணவு இருக்கும் இடங்களில் கட்டிவைத்து விட்டு மறுநாள் நாங்கள் எல்லோரும் தேவையான ஏனைய உபகரணங்களை ஒன்று சேர்ப்பதில் ஈடுபட்டோம்.

மாமா முதலாவதாக மாடுகளைப் பிணைத்துக்கட்டும் குறுக்குக் கம்பில் உள்ள துவாரங்களில் கயிற்றைப் போட்டு சுற்றி ஒரு பக்கத்தில் வைத்தார். பின்னர் தென்னைப் பட்டைகளை உரித்து எடுத்து அதன் நடுப்பகுதியில் உள்ள தடிப்பைப்போக்கி நன்றாக முறுக்கி கலப்பையில் கட்டினார். நானும் திஸ்ஸவும் வேறு வேலைகளில் ஈடுபட்டிருந்தோம். உள்ளே உரலில் மாவு இடிக்கும் சப்தம் கேட்டது. அது வேலைகள் மும்முரமாக நடக்கிறது என்பதைப் பறைசாற்றியது. நாளை நடைபெற இருக்கும் நிகழ்வில் ஈடுபவதற்கு ஏற்ற வேலைகளைச் செய்வதில் சகலரும் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

உழுவைக்குத் தேவையான சகல உபகரணங்களையும் தயார்படுத்திய போது இரவு அதிக நேரம் ஆகிவிட்டது. மேற்குத் திசையில் இருந்து சந்திரன் வெளிக்கிளம்பி வந்தான். கிழக்குத் திசையை முன்னோக்கிக் கட்டப்பட்ட வீடு முழுவதும் சந்திர ஒளி பளிச் சென வியாபித்தது. அது எம்மைப் போன்ற பையன்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். சந்திரனின் ஒளி வீழ்ந்து இருந்த முற்றத்துக்குப் பாய்ந்து விளையாடத் தொடங்கினோம். மாமா விராந்தாவில் போடப்பட்டுள்ள சாய்மனைக் கதிரையில் சாய்ந்து யோசனையில் ஆழ்ந்திருந்தார். மறுநாள் நடக்கவிருக்கும் உழுவையைப் பற்றித்தான் அவர் சிந்தித்து கொண்டு இருக்க வேண்டும்.

"கன்னிமஹரின் மூன்று பீட்டரின் ஓர் எறுமை" அவர் எமக்குக்

"திஸ்ஸ காலையிலேயே சோடியை எடுத்து வரவேண்டும்."

"ஹா" என்று திஸ்ஸ வணம்பதிலளித்தான். சரனேலிசைப் வராவிட்டால் திஸ்ஸவுக்கு அல்லது செல்ல முடியும் தானே? சரனேலிஸ் தில்லை" மாமா மீண்டும் உரக்கக்

"கலப்பைக்குப் பின்னால் செல்ல என்னால் முடியாது வேண்டு மென்றால் உழுவதற்குத் தந்தால் மத்தவங்களுடன் சரிக்குச் சரி யாக நின்று உழுவேன்" திஸ்ஸ பட்டா பாய்ந்த வண்ணம் எனக்கு மட்டும் கேட்கும்படி சொன்னான்.

சோடி, எமது ஒரு சோடி, மெத்தியஸ்ஸின் ஓர் எறுமை, கேட்கும் விதமாக கணக்கிட்டார்.

எழுந்தவுடன் போய் யக்கடயாவின் மாட்டு

படியை வீசிவிட்டு ஒற்றைக் காலில் நின்ற பற்றிச்சொல்ல முடியாது ஒரு வேளை அவர் சேனவுக்கு கலப்பையின் பின்னால் இதுவரையில் எனக்கு பொய் சொன்ன கூறிச்சிந்திக்கலானார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் திஸ்ஸவும் நானும் யகடயாவின் வீட்டுக்குப் புறப்பட்டோம். தோட்டத்தின் கீழ் இறங்கி வயலின் மத்தியில் மறுபக்கத்தை அடைந்து நாங்கள் காட்டு வழியாக சிறிது தூரம் நடந்து சென்று யக்கடயாவின் வீட்டுக்குப் பக்கத்தில் வந்து விட்டோம்.

யகடயாவின் வீடு மணல் நிரம்பிய மண்ணிலத்தில் அமைக்கப்பட்டிருந்தது. வீட்டில் முற்றம் இல்லை என்று சொல்லும் அளவுக்கு எங்கும் மரம் மட்டைகள்தான் காணப்பட்டது. பாக்கு மரம், வாழை, இளங்கன்றுப் பலா மரங்கள், மாமரங்கள் என பல்வேறுபட்ட பழ மரங்களும் காணப்பட்டன. இரவு நாம் படுக்கைக்குச் சென்றதன் பின்னர் சற்றுக்கடுமையாக மழை பெய்திருந்ததனால் முழு நிலமும் ஈரலிப்புப் பெற்று மணலினால் நிரம்பியிருந்தது. எமது பாதங் களின் விரலுடன் கூடிய அடையாளங்கள் பதியும் வண்ணம் கால்களைப் பதித்துப் பதித்து விளை, யாடிய வண்ணம் வீட்டு முற்றத்துக்கு வந்தோம்.

மணல் கலந்த மண், கூரையில் இருந்து விழும் நீரில் கரையுண்டு நிலத்தில் மணல் மாத்திரம் மிதந்து காணப்பட்டது. நன்றாக வயது ஏறிய பெண் ஒருத்தி அங்கு மூலையில் இருந்த வண்ணம் பாய் ஒன்றை வேய்து கொண்டிருந்தாள். அவளது கைகளில் தோல் சுருங்கி நரம்புகள் புடைப்பெடுத்துக் காணப்பட்டதோடு கண்களும் உள்ளே சொருகிக்காணப்பட்டது. பார்வைக்குப் பேய் போன்ற தோற்றத்தைக் கொண்டவள் போல் இருந்தாள்.

அவள் தன்னைப் போர்த்திக் கொண்டி ருந்த நீண்ட சால்வை போன்ற துண்டின் மேல் புழுதி முழுவதும் சிக்கல் பட்டு பரந்து காணப்பட்ட கேசத்தின் மூலமாக மேலும் அது தெளிவாகத் தெரிந்தது.

எங்கே அபரன் அண்ணா? திஸ்ஸ வாசல் நிலையில் ஒரு கையை வைத்த வண்ணம் கேட்டான்.

அவள் பதில் அளிப்பதற்கு முன்னர் நன்றாக ஒரு முறை இருமி ஓய்ந்தாள். இருமலில் வந்த காரல் எச்சிலைத் தூஎனத் துப்பும் போது கறுத்த சரீரம் கொண்ட ஒருவர் வீட்டின் உள்ளே இருந்து வெளிவராந்தாவுக்கு வந்தார். கை கால்கள் யாவும் இரும்பை வார்த்து எடுத்தாற்போல சக்தி பொருந்தியதாகக் காணப்பட்டது. கவனமாகப் பேணி வரும் தடித்த முறுக்கிய மேல் மீசை அவர் ஒரு முரண்டுப் பேர்வளி என்பதைப் பறைசாட்டியது. அவரது இரு கண்களும் கடும் சிவப்பேறிவெளித்தள்ளிக் காணப்பட்டது.

"ஆ.... மாட்டு சோடியை வாங்கிக் கொண்டும் வரும்படி அப்பா சொன்னார்."

"அந்த கிணற்றுக்குப் பக்கத்தில கட்டி இருக்கு அவிழ்த்துக்கொண்டு போங்க" எந்தவித பெருமிதமும் இல்லாமல் சொன்னான்.

"ஏன் உண்ட கை கால்கள் உடஞ்சி போச்சோ? போய் அவிழ்த்துக் கொண்டு போகச் சொல்லுறாய்", என அந்தப் பெண் அவன் மீது எரிந்து விழுகிறாள். நான் மேலே தூக்கி எறியப்பட்டேனோ என்ற சந்தேகம். எந்த ஒரு பெண்ணும் ஒரு ஆணைப்பார்த்து அப்படிக் கூறியதைக் காணவில்லை.

அவளது பாய்ச்சல் எஜமானுக்கு பயந்த நாயைப் போல அடங்கிப் போன யகடயா தோட்டத்தின் பக்கம் வந்து மாட்டு சோடியை அவிழ்த்து ஓட்டி வந்து தோட்டத்து எல்லையில் வைத்து எம்மிடம் ஒப்படைத்தான். நான் அப் பொழுதே நினைத்தேன் "இவ்வளவு சக்திவா னான கணவன், குச்சியைப் போன்ற பெண்ணுக்கு ஏன் அடிபணிய வேண்டும்," என்று. அதுவுமல்லா மல் யகடயா எவ்வளவு கொடுமையானவாக இருப்பான் என்றால் கேள்வியில் மாத்திரமல்ல பார்வையிலும் சென்று மறையும் வரை நான் மூச்சுக் காட்டவேயில்லை. அவர் கண்ணிலிருந்து மறைந்ததும் திஸ்ஸவைக் கேட்டேன்.

"ஐயோ எனக்குத் தெரியாது அந்த ஆளுட மாதிரி அப்படித்தான் மனைவியைப் பார்க்கும் போது யானைப் பாகனிடம் இருக்கும் கொக்கியைக் கண்டது போல அடங்கி விடுகிறார். கவனிப்பதும் மகாராணிக்குப் பணிவிடை செய்வது போலதான். ஆனாலும் ஊரில் உள்ளவர்கள் அத்தனை பேரும் யகடாவைக் கண்டு அஞ்சினார்கள்.

இப்படிச்சொன்ன திஸ்ஸ, அவர்களின் கடந்தகாலக் கதை ஒன்றினையும் என்னிடம் சொன்னான். அவன் சொன்ன கதையில் பழம் பெருமையைத் தவிர வேறு எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனாலும் அவர்களது வாழ்க்கை அமையப் பெற்ற அச்சாணி அது என நினைக்கத் தோன்றுகிறது. திஸ்ஸ சொன்னவை எல்லாம் இப்பொழுது எனக்கு மறந்துவிட்டது. அதனை ஒரு சிறுகதைக்குள் கொண்டு வர நான் முயன்றும் முடியாமல் போய்விட்டது. கீழே குறிப்பிடப்படும் அவன் சொன்னகதை காலத்தால் மணணோடு மண்ணாகிப் போக இயலாத முல்லுக் கூடுதான்.

***

யக்கடயாவும், அவன் குடும்பமும் நீண்ட காலத்துக்கு முன்னர் வேற்றூரில் இருந்து இங்கு வந்து பதிவாகியவர்கள் தான். யகடயாவின் உண்மையான பெயர் அபரன் என்பதாகும். அதே போல அவனது மனைவியின் பெயர் புஞ்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோனா. அவள் நிலச் சொந்தக்காரராக விளங்கிய சுரபியல் முதலாயின் ஒரே மகள். புஞ்சிநோனா சிறுவயதிலேயே அவளது தாய் காலமாகி விட்டதால் சுரபியல் முதலாளியின் தோட்டத்தைக் கவனித்து கொள்ள வந்தவர் இந்த இரு ஊர்களுக்கும் வெளியூர்க்காரரான யகடயாவின் தந்தைதான். அவர் அங்கு வரும் போது யகடயாவும், புஞ்சி நோனாவும் சிறுவர்கள். சிறு வயதிலேயே புஞ்சிநோனாவினதும், அவளது தந்தையினதும் வேலைகளை யகடயாதான் செய்து வந்தான். ஏதாவது தவறுகள் நடக்கும் போது புஞ்சி நோனா சுரபியல் முதலாளியைப் போன்று அதட்டலானாள். இதனால் சிறுவயது முதல் அவர்கள் மீது ஒரு பயம் இருந்து வந்ததோடு அவர்களுக்கு அடிபணிந்து நடக்கவும் முடிந்தது. சில வேலைக்காரர்கள் எத்தனை துன்பங்களை அனுபவித்தபோதும் தனது எஜமான் மீது காட்டும் பக்தி யகடயாவுக்குள்ளும் இருந்தது. சிலர் சொல்வதைப் போல மலை நாட்டுப் பணக்காரர் வீடொன்றில் நீண்ட காலம் சேவை செய்து விட்டு வந்த தனது தந்தையின் மூலம் கிடைத்த அனுபவமாகவோ அல்லது சிறுவயது முதல் பட்டறிந்த புரிதல்களாகவோ இருக்கலாம்.

வயது ஏற ஏற கடைக்குக் கொண்டு வரும் பொருட்களை எல்லாம் ஏற்றி இறக்குவது யகடயாதான். பின்னர் தோட்டத்து வேலைகளையும் பழகிக் கொண்டான். அங்கு வேலை இல்லாத நேரங்களில் ஊர்ப் பையன்களுடன் வீண் விளையாட்டுக்களில் ஈடுபடுவது தான் அவனது வேலை. சண்டையிட்டுக் கொள்வதில் யகடயா எப்பவும் தோற்றது கிடையாது. முதலாளியின் வீட்டில் இறைச்சி, மீன் கறிகளோடு சாப்பிடுவதாலும், குடிபானங்களைக் குடிப்பதனாலும் அவனது உடம்பு நன்றாக சக்தி பொருந்தியதாக இருந்தது. அதனால் கிராமப் பையன்கள் நான்கு ஐந்து பேருடன் ஒரே நேரத்தில் போராடுவது அவனுக்கு இலகுவாக இருந்தது. யகடயா கைகளை நீட்டி மடக்கி தனது சக்தியைக் காட்டும் போது அவனது சதைப் பிண்டம் கைகளில் பொங்கி எழும். அதன் மீது பையன்கள் பலம் கொண்ட மட்டும் அடிப்பார்கள் யகடயாவுக்கு அது பலத்த அடியாகவே விளங்க மாட்டாது. ஆனாலும் அவனது கையினால் அடி வாங்கிய சிலருக்கு அவர்களது ஆடைகளைக் கழுவ வேண்டி ஏற்படும். யகடயாவுக்கு கண்ணீர் வருவதில்லை என்ற செய்தி அப்பொழுது பையன்களுக்கிடையே பரவியிருந்தது.

தந்தையின் மறைவுக்குப் பின்னர் சொத்துக்களைப் பாதுகாப்பதும், வீட்டு நிருவாகங்களைக் கவனிக்கும் பொறுப்பும் புஞ்சி நோனா வசமாகியது. பொருளாதார வளத்தைக் கட்டி எழுப்புவதோ, அபிவிருத்தியோ பற்றிய எந்த உணர்வுகளும் அற்ற அவளுடன் வேலை செய்வது மிகக் கஷ்டமாக இருந்ததால் சிலருடன் யகடயாவின் தந்தையும் வெவ்வேறு தொழில்களைத் தேடிக் கொண்டு சென்று விட்டனர். அவருடன் எந்தவிதக் கீழ்ப்படிவும் இல்லாத யகடயா தனது எஜமானி அம்மாவுடன் தங்கி விட்டான். அவளது அதட்டல்கள், அதிகாரங்களினால் ஏதோ ஒரு திருப்தியை அடையலானான். சில நேரங்களில் ஏனைய பையன்கள் அவனது சதைப் பிடிப்புக்களைத் தட்டிப் பார்ப்பது போன்று அவளும் அவனது கவர்ச்சிகரமான சதைப் பிண்டங்களுக்கு அடித்து மகிழ்வாள்.

முதலாளியின் மரணத்துக்குப் பின்னர் வருமானம் குறைந்து விட்டாலும், புஞ்சி நோனாவின் செலவுகள் அதிகரித்தது. அதட்டல் புரட்டல் செய்தாலும் அவள் யகடயாவின் கைகளில் புடைத்துக் காணப்படும் சதைப்பிடிப்பில் மயங்கிப் போய் விடுவாள், தன்னை மறந்து அதனை ரசிப்பாள். அவளுக்குப் பொருத்தமான ஒரு கணவன் கிடைக்காததால் யகடயாவுடன் காதல் கொண்டு பின்னர் அவனையே மணந்து கொண்டாள். அவனால் அவளுக்குத் தேவையான சகல சுகங்களும் திருப்தியான முறையில் அவளுக்கு கிடைத்து வந்ததனால் அவளது இல்லற வாழ்க்கை இனிதாகவே இருந்தது.

யகடயாவுக்கு சொத்துப் பத்துக்கள் என்றும் எதுவும் கிடைக்கவில்லை. திருமணத்தின் பின்னரும் புஞ்சிநோனா சொத்துக்களுக்கு ஏக உரிமையாளியாகவே காணப்பட்டாள். அதன் நிருவாகம், முழுவதும் அவளிடமே இருந்தது. யகடயாவோ அவளது கணவன் என்றாலும் முன்னர் போலவே அவளது கட்டளைகளுக்குப் பணியும் வேலைக்காரனாகவே இருந்து வந்தான். இதனால் முறையற்ற நிருவாகமும், உல்லாச வாழ்க்கையும், முதலாளியின் மறைவுக் குப் பின்னர் சொத்தில் பங்கு கேட்டு வந்த உறவினர்களுடன் வழக்கு வம்புகளில் மாட்டிக் கொண்டதால் காலப் போக்கில் அவளது சொத்துக்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதும் விற்கப்பட்டு விட்டன.

சில போது யகடயாவின் சக்தியினாலும், சண்டித்தனத்தினாலும் சில சொத்துக்களைப் பாதுகாத்துக் கொள்ள முடிந்தாலும் அவன் உண்பதையும், உடுப்பதையும் தவிர சொத்துக்கள் மீது ஆசை கொள்ளவில்லை. சொத்துக்களைப் பாதுகாத்துக் கொள்ளும் அதிகாரம் தனது எஜமானி அம்மாவினால் வழங்கப்படாததனால் பேசாமல் இருந்து விட்டான்.

சொத்துக்களை இழந்து பாதைக்கு இறங்கும் நிலைக்குத் தான் தள்ளப்பட்டதற்குப் பின்னர் தான் அவளுக்கு ஞானம் பிறந்தது. அதன் பிறகு தன் வசம் இருந்த சிறிய இடத்தில் அமைந்திருந்த காவல்காரர் தங்கும் வீட்டுக்கு குடி வந்தாள். இவையாவும் யகடயா போன்ற அனாதை யுடன் திருமணமானதால் வந்த வினைதான் என அவள் எண்ணினாள்.

வழமையான வாழ்க்கையில் இருந்து விடு பட்டதால் அவள் அடிக்கடி சுகயீனம் அடைந்தாள். நாளுக்கு நாள் பலஹீனமடையத் தொடங்கினாள். அவள் தற்பொழுது உடம்பால் மாத்திரமல்ல மனதாலும் பலஹீனமடைந்து விட்டாள். இருந்த இடத்தில் இருந்து எழுந்திருக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டாள். தனக்குத் தேவையான முறையில் வாழமுடியாமல் போனது அவளது நோயிக்குக் காரணமாகும். அவள் உடலாலும் உள்ளத்தாலும் எவ்வளவு பலஹீனமடைந்தாலும், சோர்வுற்றாலும் அவளது அதிகார அதற்றல்களில் எந்தவிதக் குறையும் இன்றி முன்னர் இருந்த நிலை யிலேயே இப்பொழுதும் இருந்து வருகின்றது.

"அடேய் உன்னோடு வந்ததை விட்டுட்டு எனக்கு அரச குமாரன் ஒருவனுடன் போக முடியு மாக இருந்ததுதானே!" என்பதைச் சுட்டிக்காட்டி அவள் பல முறை யகடயாவுக்கு முன் எரிந்து விழுந்தாள். யகடயாவும் அவள் சொல்வது அத்தனையையும் ஆமோதித்து வந்தான். அவள் அவனுடன் வராமல் பெரிய பணக்காரன் ஒருவனுக்கு வாழ்க்கைப்படக் கூடியவள் என்பதை அவன் இப்பவும் பெறுமையாகச் சொல்லிக் கொள் வான். எவ்வளவுதான் ஏசினாலும், பேசினாலும் அவன் அவளுக்கு ஆதரவு இல்லை என்று எவரேனும் சொல்வதைக் கேட்க அவன் விரும்ப வில்லை. உண்மையோ பொய்யோ அவளது கொண்டையைப் பிடித்து அவளுக்கு அடித்துத் துன்புறுத்துவதாக ஊரவர்கள் சொல்கிறார்கள். உண்மையில் எனக்கும் அடிக்கடி யக்கடயாவை விட எனது மனதிலே அவனது மனைவியின் உருவம் தான் தெரிகிறது.

•



# வளர்த்த வலி

முள்ளுச் செடியென்று முதலே
அறியலைநான்.
பிள்ளைப் பருவத்தில்
பெரிதும் பசுமைபொங்கச்
சாதுவாய் இலைகள் தளிர்க்க இருந்ததது!
பார்க்க அழகாயும்,
புழக எளிதாயுங்
கூட இருந்ததது! கொஞ்சம் தளிர்த்தபின்பு
கிளைகளின் கீழும்,
இலைகளின் விளிம்பினிலும்,
முளைத்தன அரும்பரும்பாய் முட்கள்
அப்போதே
முள்ளுச் செடியென்றென் மூளைக்
குறைக்கவில்லை.
தள்ளி...சில நாளகலச்
சுடசடென்று விஸ்வரூபம்
கொண்டது கிளைத்து குலைகுலையாய்
முள்தரித்து
நின்று நெடுதநெடுத்து
அழகின் நிறைகுறைந்து
வுன்மத்தோ டுயர்ந்து வானைக் கிழித்ததது!
களையவே வேண்டிய
காட்டேறி மரமதனை
இளமையிலே களையாமல் விட்டதற்காய்
வருந்துகிறேன்.
செழித்த அதைவெட்டச் சென்று
அதென் கைகளையே
கிழித்து எனைச்சாய்க் அதைவீழ்த்தி
என்முற்ற
எழிலை நிழலை எனக்காக்கி
எமைக்காக்கும்
வழியைத் தெரியாமல் வலியால்
வருந்துகிறேன்.

– த.ஜெயசீலன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 ——— அ.பௌநந்தி

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

### பொலிகையூர் சு.க.சிந்துதாசனின்

# வலிகளின் வரிகளாக "கடலின் கடைசி அலை"




2004 இல் "ஓரிடம்" என்ற கவிதைத் தொகுதியை தந்த பொலிகையூர் சு.க.சிந்துதாசன் தனது இரண்டாவது கவிதைத் தொகுதியான "கடலின் கடைசி அலை" என்ற கவிதைத் தொகுதியை அண்ணளவாக பத்து ஆண்டுகளின் பின்னர் வெளியிட்டுள்ளார். ஐம்பத்து மூன்று கவிதைகளைக் கொண்டதாக இத்தொகுதி வெளிவந்துள்ளது. மிகச்சில கவிதைகளைத்தவிர ஏனையவை "போருக்கு பின்னரான" காலப்பகுதியில் எழுதப்பட்ட கவிதைகளாகக் காணப்படுகின்றன. போர்க் கால வலிகளையும் போருக்குப் பின்னரான வாதைகளையும் இவை கோடிட்டுள்ளன.

போர் உக்கிரமடைந்த காலப்பகுதியில் வன்னிப் பெருநிலப்பரப்பில் அகப்பட்டுக் கொண்டு அதன் அத்தனை வலிகளையும் சுமந்தவர் என்பது கவிதைகளை வாசிக்கும் போது புலனாகின்றது. செவிவழி அனுபவமாக அன்றி நேரடி அனுபவங்களாக தான் கண்ட வற்றை அனுபவித்தவற்றைப் பதிவு செய்துள்ளார். துயரத்தின் வலிகளை மீட்டுப் பார்க்க முடியாதபடி துன்ப பிரளத்தில் மாட்டிக்கொண்ட மக்களின் துயரச் சாட்சியமாக இக்கவிதைகள் அமைந்துள்ளன. இக்கவிதைகள் எதைப் பேசுகின்றன என்பதை தொகுதியின் அட்டைப்படம் துலாம்பரமாகக் காட்டுகின்றது.

ஆயுதப் போராட்டமும் அதனால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளும் இழப்புகளும் கவிதைகளின் கருப்பொருளாகின்றன. போர்ச் சூழலிலும் போருக்குப் பின்னரும் அனுபவித்த அனுபவித்துக் கொண்டிருக்கின்ற உபாதைகளின் உண்மையை இக்கவிதைகள் பேசுகின்றன.

"வயல்/ஈரமற்றுப் போயிற்று/இறுகி வைரம் பாய்ந்து/சூடேறித் தாங்காமல் வெடித்திற்று/தூர்ந்திற்று வாய்க்கால்/வரம்போரப் புல்பூண்டு கருகிற்று/வற்றி வெளியாச்சுக் குளம்/காற்றைப் புணர்ந்திற்று உஷ்ணம்/என்று நசுக்கப்பட்டுப்போன சமூகத்தின் இருப்பினை பதிவு செய்கின்றன இவரது கவிதைகள்.

இவரது கவிதைகள் பக்கச் சார்பற்று, பொதுமகனாக தான் அனுபவித்த மன ரணவாதைகளை உண்மைத் தன்மையோடு கூறியிருப்பதாக அமைந்துள்ளன. "கைமாறு" என்ற கவிதை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

"என் மனவெளியில்/விதைக்கப்பட்ட வலிகளில்.../இருந்துதான்.../வாழ்வின் அடையாளம் அர்த்தப்படுத்தப்பட்டது/ என்கிறார். உண்மைத்தன்மையோடு தான் உண்மைகளை அறிந்து கொண்ட விடயங்களையும் வெளிப்படுத்துகின்றார்.

"குருசேஷத்திரத்தில்/எனதிருப்பு/பாண்டவர் பக்கத்திலிருந்தாலும்.../ துரியோதனன் எனக்கு/உயிர்ப் பிச்சை தந்துள்ளான்/" என்று கவிஞர் கூறுவது குறிப்பிடத்தக்கது.

எந்தக் குற்றத்திலும் நேரடியாக ஈடுபடாத போதும் போருக்குப் பின்னரான வாழ்வும் பலருக்கு அருவருப்பான அனுபவங் களைத் தந்திருக்கிறது. முகாம் வாழ்வும் அங்கிருந்த சந்தேகப் பார்வைகளும் சுயத்தைச் சிதைத்த செய்தியை "பிணிகாரனாயும்/பிச்சைக்காரனாயும்/இருக்கும் போது தான்.../மனிதர்களையும்/எண்ணி எண்ணித் துடிக்கிறது/இதயம்/என்று பதிவு செய்கின்றார். இதற்கு மற்றொரு சான்றாக "மல்வத்து ஓயாவில் நீராடல் தொடர்கிறது" என்ற கவிதை அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளையும் உடைமைகளையும் இழந்து நிர்க்கதியாக்கப்பட்ட மக்கள் சிந்திக்க நேரமின்றித் துடிக்கும் அச்சத்தை நோக்கிச் சபிக்கப்பட்டிருந்தனர். எனினும் மீண்டும் "ஊருக்கு செல்லும்" உந்தல் தணியவில்லை. தனது மண்ணை நோக்கி "எமக்கு விழுந்த அடி/உன்னிலும் பட்டது ஏனோ/உண்மை தான்.../நாம் ஓடியது போல்/நீ ஓட வில்லையே/வலிகள் பல சுமந்தும்/துவழாத நீ.../உன்னைத் துரோகித்த/எம்மை/மீண்டும் ஏற்பாயா?/என்று கவிஞர் விண்ணப்பிக்கிறார்.

இத்தொகுதியில் உள்ள "கடலின் கடைசி அலை" என்ற கவிதை நம்முள் பல விடயங்களை உணர்த்திச் செல்கின்றது. போர்க் காலத்து, அதற்குப் பிந்திய காலத்தினது பலவேறு பக்கங்களை இதில் பதிவு செய் கின்றார். சர்வதேச சமூகத்தின் துரோகத் தனங்களையும், மௌனங்களையும் கூட பதிவு செய்கின்றார்.

"எமைக் காக்க/ஒளியெதையும்/ பீச்சவில்லை/நெற்றிக்கண்/மூத்திரத்தைக் கயிறென்று/புலம்பின/அறிக்கைகள்/என்ற கவிவரிகள் இதற்குத்தக்க சான்று.

பூச்சி,புழு, நாய் நரி, கழுதை, நண்டு என்று சூழலில் தான் அவதானித்த பலவற்றையும் கவிதைகளுக்குள் கொண்டுவந்துள்ளனர். அவர் தான் வாழும் சூழலை எவ்வளவு அக்கறையோடு நோக்குகிறார் என்பதற்குச் சான்று பகரும்.

கவிஞர், வரம்பு கடந்த வலிகளை கவிதை வரிகளாக்கி தனது இதயச் சுமைகளை வெளியேற்றுவதற்கான மதகாக இப்படைப்பைத் தந்துள்ளார். அனுபவப் பேறாக அவரளித்துள்ள சாட்சியங்கள் போருக்குப் பின்னரான ஈழத்துத் தமிழ் இலக்கியப் புலத்தில் புதுவரவாக அமைந்துள்ளது என்பதோடு கவனிப்பிற் குரியதாகவும் அமைந்துள்ளது. ●

## தேடலும் வழங்கலும்

ஆபரணங்களை களைந்து விடு
அடிக்கடி உன்னை - நீ
நிர்வாணப்படுத்திக் கொள்!
நீதியின் நிஜங்களிற்குள் நீச்சலடி!
உன் மீது விழும்
வலிகளை; சப்தவோசைகளை
கவிதை மூலம்
பரிணிர்வாணம் செய்!

அவலம்...
அசிங்கம்...
அக்கிரமம்...
எல்லாவற்றையும்
பத்திரப்படுத்திக் கொள்
பேனாவின் பிரளயத்துள்
மடக்கிப் பிடி!
மனதின் வலிகளை
வார்த்தைகளின் கோர்வையாக்கு!
மனிதத்தால் வேரோடு!

தேடு!
முடிவற்ற
முட்டு மூச்சோடு
மொழியின் ஆழம்
இலக்கிய வாசம்
நுகரும் வரை தேடு!

பிறப்பின் சூட்சுமம் அறி!
எண்ணத்தின் இருப்பிடம் காண்!
இயல்பு மீறி மனது
இறக்கை கட்ட தோன்றும்.
இழுத்துப் பிடி!
புதிய கோணங்கள்
உன் கவிக்கு புனர்ஜென்மம் தரும்!

இயற்கையை இரசி!
காற்றை கிழித்து பரவசமாகு...!

கவலைகளை கலைத்து விடு!
அண்டம் அதிரும் வரை
உள்ளக் குமுறல்களை கொட்டியே - நீ
தீர்த்திடு!
மனதின் வலிகளிலிருந்து மீண்டுவா!
சோம்பலற்ற சிறகு விரி!

உன் மனதின் வெள்ளைப் பக்கங்களில்
காட்டு வெள்ளமாய் பிரவகித்து;
பரவசப்பட்டு -கரைந்து
ஓடும் கவி நதிகள்
உன் வாழ்க்கை குறித்து
அர்த்தப்படுத்தல்களை
அள்ளி வழங்கிக்
கொண்டே இருக்கும்!

எல்.தேனுஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதியின் பத்தாவது சிறப்பிதழ்




நீண்ட இடைவெளிக்குப்பின், தமிழ்மணம் கமழும் தரமான ஓர் இலக்கிய சஞ்சிகையை, பார்த்து சுவைத்து நுகரும் பாக்கியம் கிடைத்தமைக்கு மனம் சிலிர்க்கிறது! என் துரதிஸ்டம், அறுபத்திமூன்று இதழ்களைத் தாண்டி பத்தாவது சிறப்பிதழும் வந்த பின்னர் தான் என் பார்வைக்கு ஜீவநதியை தரிசிக்கும் தருணம் கிடைத்திருக்கிறது!

போரிலே வாழ்விழந்து, போருக்குப்பின் சிறப்பிழந்து சூழ்ச்சிக்குப் பலியாகி சுந்தர வாழ்வை பறிகொடுத்துவிட்டு, பரிதாபக்குழியில் தள்ளப்பட்டிருக்கும் சமூகத்திலிருந்து, பொங்குதமிழில், புரட்சி கீதமாக கலை இலக்கியத்துடன் அறிவையும் பரப்பி வரும் "ஜீவநதி"யைப்பற்றி சிறிதளவாவது எழுதாவிட்டால் என் சித்தம் சிதறிவிடும், என்ற ஆதங்கத்தின் விளைவே இங்கே என் கருத்தோட்டம்; ஒரு அலசல் - விமர்சனமாக விரிந்துவிட்டது!

கனமான கலை இலக்கிய படைப்புகள், காத்திரமான கருத்துப்படங்கள் கண் கவரும் அட்டைப்படம் என "ஜீவநதி" சஞ்சிகையின் உட்புறமும், வெளிப்புறமும் அத்தனையும் அருமையாகவே இருக்கின்றன. ஜீவநதியின் 10ஆவது சிறப்பிதழ் "மலையகச் சிறப்பிழாக" வெளிவந்திருப்பதால், அதையிட்டு சுமார் முப்பது வருடங்காக மலையக இலக்கியத்துடன் ஒன்றிப் போயிருக்கும் நான், எனது கருத்துக் கணிப்பு இங்கே முன்னிறுத்துவது பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன்!

கதை, கட்டுரை, கவிதையென எல்லா அம்சங்களும் விதந்து கூறும் அளவுக்கு சிறப்பாகவே இருக்கின்றன. என்றாலும் என்னைக் கவர்ந்த சில இலக்கியப் படைப்பு களை சிறிய அளவில் இங்கே விமர்ச்சிக்க விரும்புகின்றேன்.

**சிறுகதைகள்:**

இலக்கியவானில், அறுபது வருடங்களில் சுடர் விட்டுப் பிரகாசித்த மலையக சிறுகதை நட்சத்திரங்களான திரு தெளிவத்தை ஜோசப், திரு இரா.சிவலிங்கம், திரு பெ.செந்தூரன் அடிச்சுவட்டில் தங்கள் இலக்கியபணியை நகர்த்திக் கொண்டிருக்கும் மலையகத்தின் முன்னணி படைப்பாளர்களின் சிறுகதைகள் ஜீவநதியின் சிறப்பிதழில் தவழ்ந்து வருவது பாராட்டத் தக்கது! இங்கே படைக்கப்பட்ட ஆறு கதைகளும், ஆறு விதமாக வித்தியாசப்பட்டிருப்பதால் ஒவ்வொன்றையும் தனிதனியே அலசாமல் முக்கியமான மூன்று சிறுகதைகளை மேலோட்டமாக தொட்டு செல்லலாம் என நினைக்கிறேன்.

"பதினெட்டாம் நூற்றாண்டின் மனிதர்கள்": அரசியல்வாதி ஒருவரின் தோட்ட விஜயத்தை, தனக்கே உரிய வித்தியாசமான நெறியாள்கையில் கதையை அழகாக நகர்த்தி செல்கிறார் திரு.சேனாதிராஜா: சம்பவங்களின் தொகுப்பையும், காட்சிகளின் வெளிப்பாடுகளையும் மட்டுமே ஆணித்தரமாகக் குறிப்பிட விரும்பியதால், தொடக்கத்தில் ஜொலித்த கதை, பின்னர் காணாமலே போய்விடுகிறது. கதையின் தலைப்பை பதினெட்டாம் நூற்றாண்டில் தேட முனைந்தவர், கதையை மட்டும் நிகழ் காலத்து மாந்தர்களை வைத்து சோடித்திருப்பது வித்தியாசமான தடுமாற்றத்தை தருகின்றது.

"மேற்கே தோன்றிய உதயம்": இரு நூற்றைம்பது வருட கால வரலாற்றை கடந்து வந்துவிட்ட பின்ரும் மலையகத்தில் இன்னமும் "குடியிருப்பு" பிரச்சினை தீர்க்கப்படாமலே இருக்கும் கசப்பான உண்மையை சந்திக்கும் ஒரு புதுமனத் தம்பதிகளின் ஆசாபாசங்களையும் அத்தகைய அவர் தம் உணர்ச்சிகளும் உடல் தேவைகளும் தோட்ட நிர்வாகத்தால் எவ்வாறு அடக்கி வைக்கப்படுகிறது ஒடுக்கி வைக்கப்படுகிறது என்பதை தனக்கே உரிய "நையாண்டி பாணி"யில் அழகாக எடுத்துக்காட்டும் திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.சிவலிங்கம், கதை இறுதியில் யாருமே எதிர்பார்க்காத விதமாக ஒரு தோட்ட அதிகாரியின் மனிதாபிமான முடிவின் வெளிப்பாட்டால் முரண்பாடான முடிவை தந்திருப்பது கதாசிரியரின் ஆளுமையை நன்கு வெளிப்படுத்தியிருப்பதுடன் சிறுகதையின் பரிமாணத்தையும் கனப்படுத்தியிருக்கிறது!

மலையக மக்களின் சூழலையும், சமூகம் சார்ந்த சம்பவங்களையும் கதாபாத்திரங்களையும் - பின்புலமாகக் கொண்டு பல சிறுகதைகள், நாவல்கள் படைத்துள்ள திரு அல்.அஸூமத் "தலைமை" என்ற தன் கதை மூலம் மீண்டும் தன் ஆளுமையை நிலைநிறுத்திட துணிந்திருக்கிறார்! அங்கொன்றும் இங்கொன்றுமாக அரிதாக நிகழ்கின்ற இஸ்லாமிய தோட்ட மாதர்களின் வாழ்வாதார பிரச்சினைகளில் தன் படைப்பாற்றலை நிறுவியிருக்கும் கதாசிரியர் மலையக தோட்டப்புற பேச்சு வழக்கையும், இஸ்லாமிய பேச்சு வழக்கையும் மோதவிட்டு வேடிக்கைப்பார்க்கிறார்! தலைப்புக்கு ஏற்றவாறு கதையை முடித்திருந்தாலும், கதையை வாசித்து முடிக்கும் போது தடுமாற்றம் மட்டுமல்ல, ஒரு குழப்ப நிலையும் உண்டாகிறது.

இம்மூன்று கதைகளுடன் பேராதனைப் பல்கலை கழகத்தைச் சுற்றிவரும் மொழி வரதனின் "ஆணி வேர்களும் பக்க வேர்களும்", கிழவிக்கும் தலைவிக்கும் முடிச்சுப்போடும் குளவியையும் ஒருபாத்திரமாக்கி வேடிக்கை காட்டும் திரு சுதர்மமகாராஜனின் "கிழவி குளவி தலைவி", மலையக தோட்டப்புறங்களில் சுயலாபத் துக்காக பதவி இல்லாமல் தொழில் பார்க்கும் புரோக்கர்களின் தில்லு முல்லு தனங்களை அப்பட்டமாக எடுத்துக்காட்டும் திண்ணனூரானின் "பொன்னுத் தாயி" போன்ற கதைகளும் வாசிப்பதற்கு சுவையாகவே இருந்தன.

**கவிதைகள்:**

பொதுவாக ஜீவநதியில் வெளிவந்திருக்கும் பதினொரு கவிதைகளும் சிறப்பாகவே இருக்கின்றன. அவைகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டவைகளாக இருக்கின்றன.

1) நவீனத்துவம்
2) சமூக மேம்பாடு, சமூக அக்கிரமங்களுக்கு எதிரான சாடல்கள்
3) உள்ளீடுகளில் ஒளிந்திருக்கும் கசப்பான சமூகக் குற்றங்கள்
4) தவறியும் "மரபை"த்தொடாத புதுக்கவிதை "படிம" ஈடுபாடு
5) எளிமையை தவற விட்டு, முழுக்க முழுக்க "புதுமையை தொட்டுச் செல்லும் பழமையை மறந்த மறைத்த தன்மை எல்லோருடைய கவிதைகளிலும் முக்கியமாக தென்படுகின்றன.

**கட்டுரைகள்:**

தோழர் இளஞ்செழியனின் - பன்முக ஆளுமைகளை தனக்கே உரிய "திறனாய்வு" பணி மூலம் அழகாக விமர்சிக்கும் திரு லெனின் மதிவானம் பின்னாளில் அவர் கண்ட "திராவிடர் இயக்கச் சிந்தனைகள்" மண்ணோடு மண்ணாகிப் போனது தான் - காலத்தின் விந்தையோ...? "காமன் கூத்து" மலையகத்துடன் ஒன்றிப் போய்விட்ட ஓர் ஒப்பற்ற கலைஅம்சம்! காமன் கூத்து என்றால் ரதி, மதன், சிவன், தூதுவன் ஆகிய பாத்திரங் களுடன் முடிந்து போகும் ஒரு கிராமியக் கூத்து என்றிருந்த பலருக்கும் நல்லதொரு ஆராய்ச்சிக் கட்டுரையாக அமைந்திருந்தது திரு லெட்சுமணனின் "காமன் கூத்து" திறனாய்வு கட்டுரை. "நாட்டார் பாடல்கள்" கட்டுரை, சாரல் நாடனின் கவிஞர் அ.சிதம்பர நாதப்பாவலரின் பன்முக(சமூக-அரசியல் பொது) அம்சங்களை அலசும் கட்டுரை, மற்றும் திரு அந்தனி ஜீவாவின் "கவிஞர்குறிஞ்சி தென்னவனின் வாழ்வும் பணியும்" கட்டுரை, திரு மல்லியப்பு சந்தி திலகரின் வித்தியாசமானசுயசரிதை? சுய ஆராய்ச்சியா? என்று வியப்படையச் செய்த மிகமிக அற்புதமான (மடகொம்பரை 41வது இலக்கியசந்திப்பு) என்ற கட்டுரை. அத்தனையும் படித்திட மட்டுமல்ல நல்ல அறிவியல் சிந்தனைகளையும் ஏற்படுத்திய கட்டுரைகள் என்று குறிப்பிடலாம்.

நேர்காணல் பகுதியில் இடம்பெற்ற பரடப்பாளர் ஊடகவியலாளர் திரு மலர்பனின் வித்தியாசமான கருத்தக்கள் தற்கால மலையகச் சமூகத்தக்கு மிகமிக மக்கியமானவைகளாகவும் ஏற்றுக்கொள்ளக் கூடியவைகளாகவும் இருந்தன.

ஒவ்வொரு விடயங்களைப் பற்றியும் விரிவாக ஆராயப் போனால் பக்கங்களை கூட்டி சுவையை குறைத்து விடும் என்ற அச்சத்தால் இத்துடன் என் கருத்தக்கணிப்பை முடித்துக் கொள்கின்றேன். ●

## நூல் அறிமுகம்



**நூல் - நகர வீதிகளில் நதிப்பிரவாகம்**

**ஆசிரியர் - ஷெல்லிதாசன்**

**விலை -250/-**

**வெளியீடு -ஜீவநதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org